
உ

ஓம் தத்ஸத் ஓம்

# ஆழ்கடலான்



ஆசிரியர்: சிங்கை ஆழியான்

75/=

உ
ஸ்ரீராமஜெயம்

# ஆழ்கடலான்

ஆசிரியர் :
**சிங்கையாழியான்**

**சுன்னாகம், வேலழகன் வெளியீடு**

ருதிரோத்காரி கன்னித்திங்கள்
**1983**

முதற்பதிப்பு — 1983

உரிமை : ஆக்கியோனுக்கு

விலை : ரூ. 10·00

பதிப்புக்கு உதவி : திரு. சி. கிருஷ்ணபிள்ளை அவர்கள், புலோலி தெற்கு.
செல்வி ப. சித்திரா அவர்கள், ஊரெழு.

அச்சுப் பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

# அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி
கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள்
வழங்கியது

யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப்பழைய வழிபாட்டுத்தலங்களில் ஒன்று வல்லிபுரத்தில் அமைந்துள்ள ஆலயம் என்பதை மறுப்பதற்கில்லை. அவ்விடத்தில் குறைந்தது ஈராயிரம் ஆண்டுக்கால வழிபாட்டு மர பொன்று இருந்ததற்கான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. எனினும் வல்லிபுரக்கோயிலின் முறையான வரலாறோ அல்லது பிற பழைய யாழ்ப்பாணத்துக் கோயில்களின் முறையான வரலாறோ இன்னும் ஆராயப்படாது இருப்பது நாம் அறிந்த விஷயமே. சரியான வரலாற்றை ஆராய்வது என்பது இலகுவான காரியமன்று. அதற்கான நம்பகமான சான்றுகள் முதலில் வெளிப்படுத்தப்படவேண்டும். பின்னர், விஞ்ஞானரீதியான ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி அவற்றை ஆராய்ந்து முடிபுகளைப் பெறவேண்டும்.

வெளிப்படையாக ஆவணங்களோ தொல்லியற் சான்றுகளோ போதிய அளவில் இல்லாதபோது மக்கள் பேணிவந்த மரபுகளிலிருந்து, வாய்மொழி இலக்கியத்திலிருந்து, பெறக்கூடிய தகவல்களைப் பெறுவதும் வரலாற்றுக்குத் தேவைப்படும் இன்னொரு ஆராய்ச்சி முறையாகும். வல்லிபுரக் கோயிலைப்பற்றிய ஆவணங்கள் எமக்கு இல்லை. தொல்லியற்சான்றுகளாகவும் குறிப்பிடத்தக்க அளவில் அதன் நீண்ட வரலாற்றை அறியத்தக்கவாறு சான்றுகள் கிடைத்தில. இந்நிலையில், முதற்கண் மக்கள் மத்தியில் பேணப்பட்டுவந்துள்ள தகவல்களையும், இக்கோயில்பற்றி ஆங்காங்கு பலர் எழுதிவைத்த செய்திகளையும் ஒன்று திரட்டுவது அவசியமாகும்.

இந்நூலை எழுதிய சிங்கை ஆழியான் இப் பணியை மேற்கொண்டு, மிகவும் சிரமப்பட்டுப் பலவகைப்பட்ட தகவல்களை இங்கு ஒன்றுசேர்த்துத் தந்துள்ளார். வல்லிபுரக் கோயிலில் ஆர்வமுள்ள எவரும் இதனை வரவேற்று, இந்நூலை வாசித்து மகிழ்வர் என்பதில் ஐயமில்லை. ஆராய்ச்சியாளர்களுக்கும் இத்தகைய நூல் பயன்பட்டு, வல்லிபுரக் கோயிலின் வரலாற்றை அவர்கள் ஆராய்வதற்கு உதவியாயிருக்கும் என்று கூறலாம்.

சிங்கையாழியானுடைய இப் பணி பிறருக்கும் பிற தலங்களைப்பற்றி எழுத வழிகாட்டியாய் இருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆசிரியரது இம் முயற்சியை நாம் பாராட்டுகிறோம்.

24-6-1983. **கா. இந்திரபாலா**

# உள்ளே


| | |
|---|---|
| | பக்கம் |
| முதல் வணக்கம் | iii |
| சமர்ப்பணம் | iv |
| இயல்சாத்து | v |
| முன்னுரை | vii |
| ஹரி ஓம் | ix |
| ஆசிச் செய்தி | x |
| மதிப்புரை | xiv |
| அணிந்துரை | xv |
| கோவிலும் குளமும் குலவிடும் நாடு | 1 |
| குடிசையில் இருந்து கோபுரம்வரை | 4 |
| அறமுயல் ஆழிப் படையவன் கோயில் | 6 |
| பெரும் பெயர் இறை | 8 |
| நகுலமலைக் குறவஞ்சியில் வல்லிபுரம் | 11 |
| ஊரும் பேரும் | 12 |
| கோகுலமான வல்லிபுரம் | 14 |
| அற்புத புராண வரலாறு தரும் வல்லிபுரம் | 17 |
| தசாவதாரங்களி லொரு மச்சாவதாரம் | 20 |
| வேதம் வகுத்த வியாசர் பரம்பரையில் | 22 |
| லவல்லியென்னும் கன்னி மடியில் வீழ்ந்த மீன் குழந்தையான கதை | 23 |
| இரு பெரும் அற்புதங்கள் | 26 |
| திருநாமச்சிறப்பு | 28 |
| வல்லிபுரக் குறிச்சி | 29 |
| தும்பிக்கை ஆழ்வாரும் சக்கர ஆழ்வாரும் | 31 |
| ஆழியான் ஆழி அருள்வடிவம் | 33 |
| ஞாயிறு போற்றுதும் | 34 |
| மகோற்சவ மகிமையும் மாதமேன்மையும் | 37 |
| வல்லிபுரத்தில் வடபத்ரசாயி | 39 |
| சிங்கை நகர் சொல்லும் சேதி | 42 |
| வல்லிபுரம் உடையார் கோயில் | 46 |
| சுபமங்களம் | 51 |
| கொன்றைப் பத்து | 53 |
| நிறைவுரை | 56 |
| வல்லிபுரத் திருவந்தாதி | 57 |


முகப்பு ஓவியம் :

சிங்கைநகரில் சிங்கியைத் தேடும் நூரவன்

உ

ஸ்ரீராமஜெயம்

# முதல் வணக்கம்

## தும்பிக்கை ஆழ்வார்

இராகம் : அம்சத்வனி தாளம் : ஆதி

### பல்லவி

திக்கெட்டும் புகழ்மணக்கும் தீன தயாபரனே
இக்கட்டு வாராமல் எமைக்காப்ப துன்கடனே.

### அநுபல்லவி

குருக்கட்டுப் பதியினிலே குலவும்சித்தி விநாயகனே
இருக்கட்டும் என்மனதில் உன்தன் திருவடியே.

### சரணம்

தீர்த்தப் புகழ்மணக்கும் திவ்விய விநாயகனே
ஆர்த்த பிறவித்துயர் அகற்றும் ஐங்கரனே
கூர்த்த பிறையணியும் கூத்தன் திருமகனே
கீர்த்தி மிகுந்தவல்லி புரமாயன் மருமகனே.

## ஆழ்வார்சுவாமி

இராகம் : சிம்மேந்திரமத்தியமம் தாளம் : ஆதி

### பல்லவி

வல்லிபுரத் துறையும் வள்ளலே மாயவனே
எல்லையில்லா உலகை ஓரடியில் தாவியதேன்.

### அநுபல்லவி

கல்லையொத்த மனம்கனியக் குழலூதும் கண்ணா
சொல்லையொத்து மனமும் தூயவர்க் கருள்பவனே.

### சரணம்

வில்வளைத்த விஜயனுக்கு உபதேசம் செய்தவனே
வல்லிபுரப் பதியில் வாழ்பவனே வத்ஸலனே
முல்லைநிலத் தெய்வமே முகுந்தனே முருகனுக்கு
நல்லமுறை மாமனே நானிலம் காக்கும் நல்லவனே.

— இளம்பிறையாளன்

உ

# சமர்ப்பணம்

'' வல்லிபுர ஆழ்வார் வலியவெனை ஆட்கொண்டு
தொல்லை வினைதீர்த்து வைத்தான் தொலைத்து.''

அன்று ஒரு இலைவல்லிக்காக அலைகடலில் குழந்தையானான் கண்ணன். மற்சமாய் மகவுமான சுவாமி வல்லிநாச்சனைத் தீண்டியதும், நாகசாபத்திலின்றும் விடுபட்டாள்—சாப விமோசனம் கிடைத்தது அவளுக்கு. அவளின்று இல்லை. அவளை நினைவுகூரக் கோயிலுமில்லை. ஆனால் ஆழ்வார் சுவாமி வரலாற்றின் பிள்ளையார்சுழி அவளேதான். அவ்வாறே திருமாலுக்கு ஆழ்வார்சுவாமியென்று திருநாமமிட்டு முதன்முதலில் கோயில்சமைத்துப் பூசைசெய்தவர்கள் அவ்வூர் மக்களே. அவ் வரிசையில் வல்லிபுரம்—ஆழ்வார்—வேலர்—சேதர்—தாமோதரர்—நினைவர் என்போர் என்றும் நினைக்கப்படவேண்டியவர்களே. இவர்களின் தொண்டிலே நீண்டு படுத்திருக்கிறான் நெடுமால். இவர்களெல்லோரின் நினைவாக இம் மலரை எம்பெருமான் மலரடிகளில் சமர்ப்பணம் செய்கிறேன்.

வல்லிபுரத்திலே—ஆம், இந்த ஞானபூமியில்
எத்தனையோ ஞானிகள், மகான்கள்,
கலைஞானிகள், பெரியார்கள், சாதுக்கள்,
பழவடியார்கள், பக்தர்கள், தொண்டர்கள்
அத்தனைபேருக்கும் எமது வணக்கங்கள்.

எம்பெருமானை ஆதியிலே சுமந்துவந்தவர்கள் அவனடியார்கள், கற்கைகிழார். கடந்த தலைமுறையில் கோவிலுக்குத் திருப்பணி யாற்றியவர் தாமோதரம்பிள்ளை உடையாரவர்கள். கடந்த சில ஆண்டுகளாகத் தொண்டு புரிந்தவர் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள். இவர்களின் நினைவாக அந்தாதியெனும் பாமாலையை அர்ப்பணிப்பதும் கடமையே.

சிவமயம்

# இயல்சாத்து

சீரோங்கு செந்தா மரைப்பூச் செழிப்புடை வாவியுநற்
பேரோங்கு நாமத் திருமண் நலமுடை வாவியுமாய்
ஏரோங்க நிற்கின்ற செல்வக் குருக்கட் டிரும்பதிசேர்
பாரோங்கு சித்தி விநாயகன் பாதம் பணிகுதுமே. 1

ஊரெலா முண்பித் துணவூட்டி யல்லா துணவருந்தாப்
பாரெழு வள்ளற் பணியாய ஏர்நலம் பேணுமுயர்
சீரெழு செல்வர் சிறீதரன் பூசைச் செழும்பணிக்கே
நேரெழு முள்ளமிங் குற்றவர் வல்லியூர் நேசரன்றே. 2

ஆவினை அன்புடன் பேணி உணவூட்டி ஆதரவாய்
பூவிற் சிறந்தநற் செந்தா மரைமலர்ச் சீருடைத்தாம்
வாவியும் செய்து வளமார் துளசி வளர்த்தழகாய்
தேவன் திருமால் திருப்பூசை செய்வார் நினைவரன்றே. 3

சங்கத் திருக்குறி சாரங்க பாணிதன் சக்கரநற்
துங்கக் குறியும் தொழுதணிந் தாழ்வார்க் குரித்துடைய
பொங்குசீர் முன்னெழுத் தாவும் பொறித்தேதாம் ஆவளர்த்துச்
சிங்கை நகர்ச்செல்வர் சேவையும் செய்தார் சிறப்புறவே. 4

பாலறு குண்டே பசிதணிந் தின்பப் பசுவினங்கள்
சாலவு மன்பாய்த் தரிக்கின்ற வல்லி புரத்தலத்தோர்
பாலருக் கின்பம் பயக்கவே பாடிடும் பாடலெல்லாம்
சீலமார் கண்ணன் திருவருட் தாலாட்டாம் சீர்பெறுமே. 5

திருக்கட் டுடைத்தாய நல்லுடற் செம்மல் சிறீதரன்தாள்
இருக்கட் டுளத்தில் இருந்தநிங் கெம்மை இயக்கநாமும்
குருக்கட் டுயர்தலம் மேவித் தொழுதெம் குறைதவிர்த்து
கருக்கட் டுயர்முகில் வண்ணன்நற் பூசை கருதுவோமே. 6

ஈதேதான் என்றும் இதயக் கருத்தாய் இயங்கியருள்
நாதனன் நாயகர் தாம உடையார்சீர் வேலரொடு
சேதர் நினைவாத்தை செல்வர் இவரெலாம் தீதகல
மாதவன் பூசை மகிழ்ந்தினி தாற்றினர் மாண்புறவே. 7

சீற்றிளம் கொட்டிலிலே கேடிலா ஆலய மாயமைய
ஏற்றினித் தங்கே யெழுந்திருந் தெப்பெரு மானுமுற
வேற்றுணர் வின்றி விதிர்விதிர்த் தன்பாய் விநயமிக
ஆற்றினர் பூசை அருண்மிக வல்லியூ ரன்பரன்றே. 8

தோற்றத் திலேமிக்க தொன்மைய தாகிநற் றொல்பொருட்சீர்
தேற்றத் திறனுடை யாளரும் ஈதெனத் தேர்ந்துணர்ந்து
சாற்றிட வொண்ணுத் தகைமைத் தாய தலமிதனை
போற்றி வரும்வழித் தொண்டரும் போற்றற் குரியரன்றே. 9

தூயநன் மாயன் துளசித் திருமலர் சூடுமன்பர்
நேய நிறைவொடு நீறுடன் நற்திரு மண்திலகம்
ஆயவா றன்போ டணிவோர் அனுதினம் ஆலயத்தின்
ஏய பணியிவை செய்பவர்க் கென்றுநல் இன்பமன்றே. 10

**புலவர் கூ. பெரியதம்பி**

ஓம்

# முன்னுரை

எம்பிரா னென்ற தேகொண் டென்னுளே புகுந்து நின்றிங்
கெம்பிரா னட்ட வாடி யென்னுளே உழிதர் வேனே
எம்பிரா னென்னைப் பின்னைத் தன்னுளே காக்கு மென்றால்
எம்பிரா னென்னி னல்லா லென்செய்கேன் ஏழை யேனே.

— *அப்பர்*

*''ஒருவன் நூலாசிரியன் ஆவதற்கு அறிவுத்திறன் மட்டும் போதாது, நூலுக்குப் பின்னால் ஒரு மனிதன் இருக்கவேண்டும்'' என ஓர் அமெரிக்க அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார். மனிதன் என்ன, நான் நான் என்று எழுதும்போதெல்லாம், தான்தான் என்று ஒன்று எழுதுவித்துக்கொண் டிருந்ததை என்னால் உணரமுடிகிறது. இப் படியிலே நின்றுதான் இப் பொத்தகத்தைப் பார்க்கிறேன்: அவ்வளவுதான்.*

*நாயிற்கடையனும் அடியேன் சின்னவனாய் இருந்த காலமது. பெரிய கோயிலின் உள்வீதி மணல் நிறைந்திருந்தது. நாள் தவறாமல் எமது பெரியம்மாவின் மகன் கோயிலுக்குச் சென்று காலையில் அலகிடுவார். அவருடன் என்னையும் போகும்படி பெரியம்மா சொன்னபோதெல்லாம் வேம்பாகக் கசந்தது. என்றாலும் அன்பிணையை நிறைவேற்ற முயன் றிருக்கிறேன். பத்து ஆண்டுகள் அண்ணை கூட்டினாரென்றால் பத்து நாட்கள் நான் கூட்டியிருப்பேனோ என்னவோ. ஆயின் பெரியம்மாவின் முயற்சி பயனளித்திருக்கிறது, அந்த இளமை நினைவுகளின் விரிவே இந்நூல்.*

*வல்லிபுரக் கோயிலின் வரலாற்றை சுமார் 40 ஆண்டுகளாகத் தேடி யலைந்தேன். சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் எழுதவும் செய்தேன். நீண்ட காலமாகத் துணுக்குகளைச் சேகரித்தேன். முன்னோரின் ஆவணங் களைப் படித்தேன். பலரிடமும் விசாரித்துத் தகவல்களைப் பெறவும் நான் தவறவில்லை. ஆய்வாளர்களின் கருத்துகளையும் கவனித்தேன். வானொலியிலும் வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தினேன். இவ்வாறு என் முயற்சி வளர்ந்தது.*

*என்னோடு ஒட்டி உறவாடும் பலர் இவற்றைக் கண்டு, எழுத்தளவி லிருந்தாற் போதாது, ஏட்டிலேயும் இடம்பெறவேண்டுமென ஊக்கினர். சிறப்பாக அமரர் க. தியாகராஜா அண்ணையும், அமரர் அ. பொன்னம் பலம் அவர்களும் இம்முயற்சியி லென்னை வழிநடத்திய பெரியார்க ளாகும். இருந்தும் அண்மைக்காலத்தில் வடிவேலு ஐயாவும், கந்தையா*

பக்தரும், அன்பன் கணபதிப்பிள்ளையும் பக்கபலமாய்நின்று அச்சடிப்ப தற்கு வழிநடத்தினார்கள். இவர்களுக்குத் தமிழுலகமும் யானும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மூலப்பிரதியைப் பொறுமையுடன் படித்து, திருத்தி, என்னென்ன செய்யவேண்டுமென்பதையுஞ் சொல்லி, மதிப்புரையும் தந்தவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள். அவ்வாறே யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனவர்களும் மணிமணியாக ஆசியுரை வழங்கியிருக்கிறார்கள். கலாநிதி கா. இந்திர பாலா அவர்களி னணிந்துரை நூலை அணிசெய்கிறது. இந்த மூதறிஞர் மூவர்க்கும் எமது நன்றி.

புலவர் கு. பெரியதம்பியவர்களின் இயல்சாத்தும் கிடைத்திருக் கிறது. முகப்புப் படம் வரைந்துதவிய ஓவியருக்கும், செவ்வனே அச்சுப் பதிவு செய்த திருமகள் அழுத்தகத்தாருக்கும் பெரிதும் கடப்பா டுடையேன்.

எனது சொந்தக்கோதாவில் சரிபார்த்தேன். பிழைகள் இருப்பின் மன்னிப்பீர்களாக. நூல் உருவாக ஒத்தாசைபுரிந்தவர்களும் பலர். இவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றி என்றுமுரித்தாகுக. சேவையைச் செய்துவிட்டு அமைதியாய் வாழும் பெரியார்கள் சிலர் உறுதுணை நல்கியிருக்கிறார்கள். இவர்களையும் மறக்கமுடியாது. நூல் இப்படி உருப்பெறத் தோன்றாத்துணையாய் இருந்த திருவருளையும் குருவருளையும் வணங்கிப் பல வழிகளிலும் உதவிய அன்பர்கட்கும் நன்றி கூறுகிறேன்.

— உன்

சின்னமும் மூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழ அருளெனக்கு
என்னம்மா என்கண்ணா இமையோர்தம் குலமுதலே.

— நம்மாழ்வார்

வல்லிபுர ஆழ்வார் திருவடிகளே சரணம்.

''சாளக்கிராமம்''
வல்லிபுரம், புலோலி
30–1–83

**சிங்கை ஆழியான்**

# ஹரி ஓம்

இப்படித்தான் வேதபாரகர் ஆரம்பிக்கிறார்கள்.

'' வாக்காலும் மனத்தாலும் அடையப்படாதவரும், வேத முடிவின் பொருளானவரும், உலகத்திற்கோர் முதல்வரும், ஞானவடிவினருமாகிய கோவிந்தரை அடியேன் வணங்குகிறேன்.'' — ஆதிசங்கரர்

கடந்த ஆண்டு பிற்பகுதியில் எம்பெருமானுடைய சந்நிதிக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. எனது பணிவான விண்ணப்பத்தை அவனுக்கு முறையிட்டேன். எண்ணுவாரெண்ணும் நல்லனவற்றை நிறைவேற்றும் அச்சுதன் அருள்பாலித்தான். சில தினங்களின்பின் இந்நூலின் கையெழுத்துப் பிரதியையும் கண்டேன். இது நூலாகும் நிலையிற் காணவும் யாசித்தேன்.

ஒன்றுமட்டும் உணவில்லையே, உடையில்லையே என்ற நினைப்புகள் வருமுன்னரே கொடுக்கிறான் கொண்டல் வண்ணன். இப்படியான சுவைதரும் அனுபவங்களை ஒவ்வொரு ஆழ்வார்சுவாமி பக்தர்களும் பெற்றிருப்பார்கள். தனது குலதெய்வமான திருமாலின் திருவருள் துணைகொண்டு வாழும் எமது தந்தையாரின் அசையாத நம்பிக்கையில் எமது குடும்பம் ஓடுகிறது என்றால் இப்படி ஆயிரமாயிரம் அன்னையர்க்கும் தந்தையர்க்கும் அப்பனுயும் அம்மையாயும் அருள்பாலிக்கும் அந்த அரங்கத்தண்ணலின் பெருமையே பெருமை. வல்லிபுரமாயன் திருவடிகளே சரணம். அடைக்கலம் – தஞ்சம் – அபயம்.

எல்லாமவன்செயலே. இன்பமே சூழ்க – எல்லோரும் வாழ்க.

'' நாம் வலுவிழந்த மனிதர்கள், எங்களாலெந்தச் சுமையைத் தாங்க முடியாதோ அந்தச் சுமையை எங்களுக்குத் தந்தருளாதீர்கள் சுவாமி. நல்ல ஹிருதயத்தைத் தந்து, சாந்தியும், அமைதியும், நிம்மதியும் நிறைந்த வாழ்வை ஒவ்வொருவருக்கும் அருள வேண்டுகிறேன் சுவாமி''.

பக்திமதி

# ஆசிச்செய்தி

பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள்,
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழர்களின் பண்பாட்டிலே சமயம் சார்ந்த உணர்வுகளும் நம்பிக்கைகளும் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. இவற்றின் நிலைக்களனாகத் திகழ்பவை ஆலயங்கள். இக்காரணத்தால், ஈழத்துத் தமிழர் பண்பாட்டைக் கற்றறிய முயல்பவர்கள் ஆலயங்களையும் அவற்றோடொட்டிய வாழ்க்கை முறைகளையும் கற்றல் அவசியமாகின்றது. இத்தகைய கல்விக்கு அறிவுமட்டுமன்றிப் பண்பாட்டு உணர்வும் அடிப்படைத் தேவையாகின்றது. அன்பர் திரு. சிங்கைஆழியான் (கவிஞர் முருக வே. பரமநாதன்) அவர்கள் எழுதிய இவ் வரலாற்று நூல் சமய உணர்வும் வரலாற்றுணர்வும் கலந்ததாக வெளிவருகின்றது.

தமிழர் பண்பாட்டில் நிலைபெற்றுவிட்ட ஒரு தனிப்பெருங்கூறாகத் திகழ்வது திருமால் வழிபாடு. மாயோன் மேய காடுறை உலகம் என்ற தொல்காப்பியத்தொடர் தமிழர்தம் முல்லைநிலத் தெய்வமாகத் திருமால் திகழ்ந்தமையைச் சுட்டும். தமிழ்ப் பக்தி இலக்கியங்களிற் குறிப்பிடத்தக்கதொகையின 'கண்ணனென்னுங் கருந்தெய்வக்' காட்சியில் திளைத்துப் பாடப்பட்டவை. தமிழகத்தின் திருக்கோவில்களில் திருவரங்கம் சிறப்பு வாய்ந்தது. திருமால் வழிபாட்டை வைணவம் என்ற பெயரிட்டுத் தத்துவ விளக்கம் தந்து பேணுவது இந்துமத மரபு.

ஈழத்திலே வைணவம் ஒரு தனி மதப்பிரிவாக அமைந்து வளராவிட்டாலும் திருமால் வழிபாடு பேணப்பட்டு வருகின்றது. சைவத்தையே பெருநெறியாகக்கொண்ட ஈழத்துத் தமிழர்கள் திருமாலையும் வழிபடும் பண்பைப் பேணி வருகிறார்கள். இதன் சான்றுகளாகத் திகழ்பவை வடமாகாணத்தில் ஈழத்துத் திருமால் திருப்பதிகள் எனத்தக்க பெருமையுடன் பேணப்படும் முப்பெரும் பகுதிகள். இவற்றுள் ஒன்று மேலைக்கரையிற் பொன்னாலயம் எனத்திகழும் பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோயில். இன்னொன்று வண்ணார்பண்ணையின் ஸ்ரீ பெருமாள் கோயில். மற்றொன்று கீழைக்கரையில் வல்லிபுரம் என்னும் தலத்தின் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்.

இவ்வாலயங்களின் வரலாறு ஈழத்துத் தமிழ் மக்களின் உணர்வுகளோடும் நம்பிக்கைகளோடும் பின்னிப்பிணைந்தது. இவற்றின்வரலாற்றை உரியவகையில் எழுதிப் பேணிவைக்க வேண்டியது ஒருவகையிற் பக்திப் பணியாகவும், இன்னொருவகையிற் பண்பாட்டு வரலாற்றுக்கான பணியாகவும் அமையும். சிங்கை ஆழியான் இந்நூலை எழுதியுள்ள முறை இவ்விருவிதப் பணிகளையும் நோக்காகக் கொண்டுள்ளமையை உணர்த்துகின்றது.

இருபத்தொரு இயல்களில் அமைந்த இந்நூலிலே கோவிலின் வரலாற்றுப் பழமை, புராணப் பழமை, இறையருள் தொடர்பான செவிவழி நம்பிக்கைகள், கதைகள் என்பன தொடுக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சான்றுகளாகத் திகழும் நூல்களின் செய்திகளும் இலக்கியங்களில் பொருத்தமான பகுதிகளும் சமய தத்துவக் கருத்துக்களும் பொருத்தமுற இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

சிங்கள சந்தேச காவியங்களிலொன்முன 'கோகில சந்தேசய' (குயில் விடுதூது) கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டுக்குரியது. இதிலே வல்லிபுரம் ஆலயமும், பொன்னலை வரதராசப் பெருமாள் கோயிலும் சுட்டப்பட்டுள்ளமை ஈழத்து வரலாற்று ஆய்வாளர்களால் முன்பே அறியப்பட்ட செய்தியாகும். இதனை ஆரம்பத்திற் குறித்துக் கோவிலின் வரலாற்றுப் பெருமையை ஆசிரியர் நிறுவுகிறுர். அடுத்து, ஆரம்பநிலையிற் கோயில் ' கரக்கோயில் ' என்றநிலையில் தென்னங்கீற்றுல் வேயப்பட்ட நிலையில் இருந்ததையும், பின்னர் மண்தளியாகவும் கற்றளியாகவும் வளர்ந்த வரலாற்றையும் தருகின்றுர். அடுத்து, ஆலயத்தின் கருவறையிற் சக்கரம் தாபிக்கப்பட்டுள்ள சிறப்பைக் கூறுகின்றுர்.

இந்துமத ஆலய பாரம்பரியத்திலே தலமஹாத்மியம் அல்லது தலமகிமை என்பது முக்கிய அம்சமாகும். இது ஆலய வழிபாட்டைப் புராணப் பழமைக்கு இட்டுச் செல்வது. 'லவல்லி என்னும் கன்னி மடியில் வீழ்ந்த மீன் குழந்தையான விந்தை' என்ற தலைப்பிலமைந்த பதிஞேராம் இயல் இத்தகையது. வல்லிபுரத்தில் நிகழ்ந்த அற்புதமாகக் குறிக்கப்படுபவற்றுள் ஒன்முன 'பலாப்பழக்கதை' இறைவனுக்கு அளிப்பதாகக் கொண்டுசெல்லப்பட்டதை இறையன்பரொருவர் இடையிலேயே புசித்தாலும் இறுதியில், அது இறைவனுல் அனுபவிக்கப்பட்டதாகவே ஆகிறது என்ற நம்பிக்கையைச் சார்ந்தது. இக்கதை பல மாற்று வடிவங்களில் ஈழத்தின் பிற ஆலயங்கள் பலவற்றிலும் வழங்கிவருகின்றது.

'தும்பிக்கை ஆழ்வாரும் சக்கர ஆழ்வாரும்' என்ற பதினைந்தாம் இயல் வல்லிபுர ஆழ்வார் கோவிலுடன் அமைந்த குருக்கட்டு சித்தி விநாயகர் பற்றியும், இரு தெய்வங்கட்குமுள்ள வழிபாட்டுக் கிரிகைகளின் தொடர்பைப் பற்றியும் கூறுகிறது, திருமால் வழிபாடும் விநாயகர் வழிபாடும் இணைந்தசிறப்பை உணர்த்துவது. 'மகோற்சவ மகிமையும், மாத மேன்மையும்' என்ற பதினெட்டாம் இயல் கோவில் விழா நிகழ்ச்சிகளின் முறைமையைத் தொகுத்துத் தருவது.

வல்லிபுரம் என்ற தெய்வதலத்தின் வரலாற்றினைக் கூறும் இந்நூலின் இறுதிப் பகுதி ஈழத்தின் அரசியல் வரலாற்றின் ஒரு காலகட்டத்திற்கு இழுத்துச் செல்கின்றது. 'சிங்கை நகர் சொல்லும் சேதி'

என்ற இருபதாம் இயல் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் ராஜதானியாக வல்லிபுரம் கிராமப் பகுதி முன்பு திகழ்ந்தது என்ற கருத்தை அரண் செய்யக்கூடிய தகவல்களைத் திரட்டித்தருவதாக அமைகிறது. ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கை ஆரியன், சிங்கையாதிபன், சிங்கைகாவல் மன்னன் என்று விருதுப் பெயர்களைத் தாங்கி யிருந்தனரென்பது தட்சிணகைலாச மான்மியம் தரும் செய்தி. சிங்கை என்ற அடைமொழி சிங்கை நகர் என்பதைச் சுட்டி நிற்கின்றது. இந்நகர் இருந்த இடம் இன்றைய வல்லிபுரக்கிராமப் பகுதியே என்பது முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் முதலியவர்களது கருத்தாகும். இவை தொல்லியற் சான்றுகளால் நிறுவப்படவேண்டியன வென்பது இன்றைய வரலாற் றுளர்களது கருத்துக்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்நூலை அமைக்கும் முயற்சியில் வரலாற்று நூல்களும் இலக்கி யங்களும் செவிவழிச் செய்திகளும் பயன்பட்டுள்ளன. வல்லிபுர ஆழ் வார் சுவாமிமீது பாடப்பட்ட வல்லிபுரம் திருமாலை, வல்லிபுர மாயன் போற்றி விருத்தம், ஆழ்வார் பள்ளி எழுச்சி, வல்லிபுர அந்தாதிப் பதிகம் ஆகியன பொருத்தமுற எடுத்தாளப்பட்டுள்ளன. வைணவம் தொடர் பான கருத்துக்களும் இந்துமதக் கருத்துக்களும் பொருத்தமான இடங் களில் நூலை அணிசெய்கின்றன.

மட்டக்களப்புத் தமிழகத்தின் விஷ்ணு வழிபாடு இன்று பல இடங் களில் இடம் பெறுவது குறிப்பிடற்குரியது. வந்தாறுமூலை, திமலதீவு பழுகாமம், தம்பிலுவில் போன்ற இடங்களிலுள்ள விஷ்ணு கோவில் களிலே திருமால் வழிபாடு இன்றும் முறைப்படி நடந்துவருகின்றது. வைகாசித் திங்களில் வரும் திருவாதிரை நாளிலேயே பெரும்பாலும் மட்டக்களப்பு மகாவிஷ்ணு கோவில்களில் உற்சவம் தொடங்குகின்றது. விஷ்ணு உற்சவத்தை மட்டக்களப்பிற் பெரும்பாலும் 'கிருஷ்ணன்' கோயிற் சடங்கு என்றே கூறுவர். மட்டக்களப்பில் நிலவிவரும் விஷ்ணு வழிபாட்டினை நோக்கும்போது, மாடுகளை ஏராளமாகப் பேணிய பகுதிகளிலேயே தொடக்க காலத்தில் இவ்வழிபாடு இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. மாடுகளைக் காப்பவன் கண்ணன் என்ற அடிப்படையிலேயே மாடுகளை ஏராளமாகப் பேணிய பகுதி களில் இவ்வழிபாட்டினை மேற்கொண்டிருக்கக்கூடும். யாழ்ப்பாணத் திலும் பார்க்க மட்டக்களப்பில் விஷ்ணு வழிபாடு முக்கியத்துவம் பெற் றிருப்பது ஒப்பிட்டு நோக்கவேண்டியது.

ஓர் ஆலய வரலாற்றைக் கூறும் நூல் என்ற வகையில் வல்லி புரம் ஆழ்வார் சுவாமி கோயில் வரலாறு கூறும் இந்நூலுக்கு ஈழத்துச் சமய உலகில் முக்கிய இடமுண்டு. அத்துடன் தமிழர் பண்பாட்டு வரலாற்றைக் கற்க முயல்பவர்களுக்கு இது பல செய்தி

களைத் திரட்டித் தந்திருக்கிறது. ஈழத்துத் தமிழரின் திட்டவட்டமான பண்பாட்டு வரலாறொன்றை எழுதுவதற்கு முன்னர் அதற்கான தொடக்கக் கட்டப் பணிகளைப் பரவலாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும், அவசரமுமானதாகும். அத்தகைய ஒரு பணியாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் இதைப்போன்ற பண்பாட்டுப் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவதற்கு வல்லிபுரம் ஆழ்வார் சுவாமிகளது அருள் அவருக்குக் கிட்டுவதாக.

*18-4-83* **சு. வித்தியானந்தன்**

# மதிப்புரை

**A. Veluppillai,** B. A. (Hons.), Ph. D. (Cey.), D. Phil (Oxen)
Associate Professor & Head Department of Tamil, University of Ceylon,
Peradeniya.

சிங்கையாழியான் என்னும் புனைபெயர்பூண்ட கவிஞர் முருக வே. பரமநாதன் வல்லிபுரமாயவனுடைய பெருமைகள் பலவற்றைத் தேடித் தொகுத்துத் தந்துள்ளார்.

துரதிருஷ்டமாக, வல்லிபுரக்கோயிலின் வரலாறு இன்னும் பூரணமாகத் துலக்கம்பெறவில்லை. அது பூரணமாகப் பெறத்தக்கதாகச் சான்றுகள் கிடைக்கக்கூடும் போலவும் தெரியவில்லை. இன்று கிடைக்கக்கூடும் சான்றுகளிலும் பல பலருக்குத் தெரியவராதன; எதிர்காலத்தாருக்குக் கிடைக்காமல் தவறிப்போகக்கூடியன. இத்தகைய செய்திகளின் பொக்கிஷமாகச் சிங்கையாழியானுடைய நூல் விளங்குகிறது.

இலங்கையிலே வைணவம் தனிச் சமயப்பிரிவாக இடம்பெறாததால், வைணவ சமய அறிஞர்கள் இல்லை. வல்லிபுரஆழ்வாரின் பெருமைகளை விளக்குவதற்காக, இந் நூலாசிரியர் பொதுவாக வைணவம் பற்றியும் சிறப்பாகத் தமிழ்நாட்டுத் திருமால் வழிபாடு பற்றியும் எத்தனையோ அரும் பெருஞ் செய்திகளைத் தொகுத்துள்ளார்.

இலங்கை வரலாற்று நூல்களிலும் சமய நூல்களிலும் பிற நூல்களிலும் இந்துசமயம்—வைணவம்—வல்லிபுரம் பற்றி வரும் குறிப்புகளைத் தொகுத்து, அவற்றை நன்கு துருவி ஆராய்ந்து, அவற்றின் தாத்பரியங்களை நூலாசிரியர் எடுத்துக்காட்டும்விதம் போற்றத்தக்கது.

வல்லிபுரக் குறிச்சிக்கும் வல்லிபுரக் கோயிலுக்கும் இடையேயிருந்து வந்த பிரிக்கமுடியாத வரலாற்றுத் தொகுப்புகளை, வல்லிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் நன்கு காட்டியுள்ளார்,

வைணவத்தின் பின்னணியில் வல்லிபுரமாயவனுடைய வழிபாட்டை விளக்கிட முயலும் இந்நூல், திருமாலன்பர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சுவாமிமீது பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சி, கெருடன் விடு தூது என்னும் இரு நூல்களை வெளியிட்டவரும் இவரே. அன்னாரின் தொண்டு வளர்க.

**ஆ. வேலுப்பிள்ளை**

சிங்கைநகர்,
புலோலி தெற்கு, புலோலி,
*1-1-83.*

உ

ஸ்ரீராம ஜெயம்

# வல்லிபுரம் ஆழ்வார்சுவாமி கோவில் வரலாறு

## கோவிலும் குளமும் குலவிடும் நாடு

''மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கெனக்
கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே''

—அமரகவி பாரதியார்

மனிதகுல வரலாறு இன்று வெகுதூரம் ஆராயப்பட்டுவிட்டது. நதிக்கரையிலும், குளத்தை அண்டியும், எப்பொழுது மனித இனம் வாழத்துவங்கியதோ, அப்பொழுதுதான் அவனுக்கு ஒய்வும், ஆறுதலும் கிடைத்தது. இந்த ஒய்வும் ஒழிச்சலும் அவனுடைய சிந்தனைகளைக் கிளப்பி, அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. கலைகளும், கல்வியும் பிறந்தன. ஆடலும் பாடலும் அவனுடைய பொழுது போக்காகி, கலைகளாகவே பர்ணமித்தன. அக்கலைகள்கூடத் தெய்வீக நிலைக்கு ஓங்கி வளர்ந்தன. அவனுடைய சிந்தனை லோகம் இம்மையையும் கடந்து நின்றது. உலகியலை விட்டு மெய்யியல் என்று ஒன்று இருப்பதாக உணர்ந்த மனிதன், அந்த உண்மையைத் தேடி வெகுதூரம் – நெடுந்தூரம் – நடந்தான். அப்பாலுக்கப்பாலான செம்பொருளைக் காண்பதே அவனுடைய அறிவுலக ஆய்வாய் இருந்தது. அறிவியலும் அழகியலும் அவனுடைய இறக்கைகள் ஆயின. அன்றாட வாழ்வில் ஒருமனிதன் எத்தனையோ தடவை நான் நான் எனக் குளறிக் கொண்டே இருக்கின்றான். நான் என்று சொல்லும் பொருளெது. அதன் உருவம் என்ன என்பதைப்பற்றி அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. விளங்காத புதிர்களை விஞ்ஞானத்தின் மூலம் விளக்கி விடும் விஞ்ஞான மேதையால் கூடக் காணமுடியாத, இந்தப் புரியாத புதிருக்கு மெய்ஞ்ஞானம் விடைகண்டது. நான் யார், என்னுள்ளம் ஆர் என்பதை இலகுவில் விளக்கும் நெறியாகச் சைவம் நீதி பேசிற்று. நிதி–நீதியாகவும்; சீவன்–சிவமாகவும் மாறும் போதுதான் வாழ்வியலின் பூரணத்துவம் மின்னிப் பொலிகின்றது. எனவே, கோயில்களைக் கட்டினான்; குளங்களை வெட்டினான். கோயில்கள் கலைக்கும், கலையின் கருவூலமான பத்திக்கும், ஏன் முத்திக்குமே இருப்பிடமாயின. கோயில்களை உருவாக்கியது போலவே, குளந்தொட்டு வளம் பெருக்கினான். இக்கோட்டமும் குளமுமே அவனது இருதயமாகவும், மூச்சின் உயிர்ப்பாகவும் இருந்தன. இதனாலோ என்னவோ குளமும் கோட்டமும் அமைத்தவன் குளக்கோட்டு மன்னன் ஆனான்.

எனவே, ஒரு சமுதாயத்தின், ஏன் ஒரு நாட்டின் புராதன நாகரிகத்துக்கு உறைவிடம் கோயிலுங் குளமுமே. மன்பதைக்கு வசியும் வளனும் அளித்து, பசியும் பிணியும் தீர்த்தன குளங்கள். உயிருக்குயிரான ஆத்மஞானத்தை ஊட்டி வாழ்வில் நிம்மதியையும், நித்தியசாந்தியையும் அளித்தன கோயில்களே. எச்சமயத்தோர்க்கும் இது சம்மதமே. மனிதனுக்கு இருதயம் எப்படி முக்கியமோ, அவ்வளவு நாட்டுக்கு இன்றியமையாதது நீர்த் தேக்கங்களே. நீரை வயலுக்குக் கொண்டுசெல்லும் கால்வாய்களே இரத்தநாடிகள். ஜீவசத்தியையும், பலத்தையும், ஆரோக்கியமான வாழ்வையும் தாங்கிச் சென்று; புராதன கிராமங்கட்டு இவைதாம் உயிர் கொடுத்தன என்று ரெஜினல்ட் பரார் என்ற ஆசிரியர் இலங்கையின் பண்டைக்காலக் குளங்களின் மேன்மையை எடுத்துக்கூறியுள்ளார். இந்தக் குளங்கள்கூட ஆலயங்களையண்டியே அமைந்திருந்தன. மண்ணுலக வாழ்வுக்குத் தேவையான உணவளிப்பன இக்குளங்களே. கோயில்களோடு அண்டிவரும், குளங்கள் புனிததீர்த்தங்களாயின.

விண்ணுலக வாழ்வைக் குறிப்பன கோயில்கள். எனவேதான் ''திருக்கோயிலில்லாத திருவிலூரும்'' என்றார் அப்பரடிகள். ''கோவிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே'' என்பதும் சம்பந்தர் வாக்கு. குளத்தினல் வாழ்வுபெறும் ஜீவன் கோயிலிலே சாந்தி பெற்று விடுதலையடைந்தது. இவ்வாறு சமயமும், சமுதாயமும் ஒன்றிணைந்த நிலையிலே இந்துதர்மமும், அதன் நாகரிகமும், மிகத் தொன்மையானதாகப் பேசப்படுகிறது. சிந்துவெளி நாகரிகம் இதற்குச் சான்று பகர்வதாக வரலாற்று வல்லுநர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். இமயந் தொட்டு இந்தோனேசியாவரை, கங்கைநதி தீரத்திலிருந்து மாணிக்க கங்கைவரை இந்துமதம் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. மேலும் அமெரிக்காவில் கூட இன்று இந்துமதம் பெரிதும் பிரக்யாதி பெற்றும்விட்டது.

ஈழத்தமிழர் இந்நாட்டுப் பழங்குடி மக்கள் மட்டுமல்ல, சைவம் கண்ட சமுதாயமுங்கூட. இந்தியா, இலங்கை என்பவற்றை உள்ளடக்கியதாக மறைந்துபோன குமரிக்கண்டம் இருந்தது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில் ஈழத்துப் புலவர்கள் மதுரையில் இருந்து தமிழாய்ந்துள்ளனர். மேலும் பௌத்தம் வருவதற்கு முன்னரே சைவம் நிலவியுமிருக்கிறது. இராவணன், மண்டோதரி என்போர் சைவ சமயிகளாய் இருந்து திராவிடப் பண்பாட்டை ஓம்பிக் காத்தனர். மாந்தை யென்னும் மாதோட்டம் மாபெருஞ் சந்தையாயும் மிளிர்ந்திருக்கிறது. பாடல் பெற்ற தலங்களும், புராதன ஆலயங்களும் நிறையக் காணப்படுவதே ஈழத்தின் தனிச் சிறப்பாகும்.

ஈழம் இயற்கையழகு மிக்க தீவு. பாரதமணித்திருநாட்டின் முத்துப் பதக்கம் போல் அமைந்து கிடக்கிறது. இந்துமாசமுத்திரத்தின் நுழை வாயிலான இலங்கையை நாடிப் பல யாத்திரிகர்கள் வந்திருக்கிறார்கள். இதற்கு நித்திலத்தீவு என்னும் பெயருமுண்டு. ஓங்கியுயர்ந்த மலைச் சிகரங்கள், நெளிந்துபாயும் நதித்திரள்கள். காடெலாம், கடற்கரை யெலாம் பசுமை. நாடெலாம் செந்நெல்,நாட்டின் நதியெலாம் மணிகள். தேயிலையுந் தென்னையும்; இறப்பருங் கோப்பியும், கொக்கோவும் மிளகும் நம்நாட்டுச் செல்வங்கள். ஆலயங்களுக்கோ குறைவில்லை. தெய்வந்துறையிலிருந்து பருத்தித்துறைவரை; காங்கேசன்துறையி லிருந்து மாத்தறைவரையும்; கரையோரமாக அமைந்த திருக்கோயில் களே நமக்கு அரண் செய்கின்றன. சைவம் மாத்திரமல்ல பௌத்தமும் ஒன்றிணைந்து வழிபடும் தலங்களும் பலவுண்டு. தென்கோடியிலுள்ள விஷ்ணுதலமான தெய்வந்துறை (தேவிநுவரை) எல்லோராலும் போற்றப்படும் ஸ்தலமாகும். இபின்பட்டுட்டா இத்தலத்துக்கு வந்த தாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு இலங்கையின் கரையைச் சுற்றியுள்ள பேர்பெற்ற தலங்கள் இந்துக்களாற் போற்றப்படும் ஆலயங்களாகும். இவற்றில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே யமைந்த சிறந்த க்ஷேத்திரங்களிலொன்று வல்லிபுரம் (ஆழ்வார் ஆல யம்) ஆகும். இதுவும் ஈழத்தின் தென்மேல் முனையில் அமைந்துள்ள தெய்வந்துறையைப் போல, வடகீழ் முனையில் பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் என்னும் ஊரில் அமைந்திருக்கிறது.

> ''மூர்த்தி யருளும் முறைசேர் தலநலமும்
> தீர்த்தத் திருநிறைவும் சேருமருட் – கீர்த்திமிகு
> நல்லவோர் ஆலயத்தை நாடிநான் போற்றுதற்
> கல்லேனின் றுனே னறி.''

என்று கருடன்விடு தூது என்னும் பிரபந்தம் தலமகிமையைப் பாடு கிறது. இத்தலத்தைப் பற்றிய வரலாற்றை தட்சிணகைலாசபுராணம், தட்சிணகைலாய மான்மியம் என்னும் பண்டை இதிகாசங்களில் காணலாம். எனினும் சிங்கள மொழியிலெழுந்த இலக்கியத்திலும் இவ் வாலயம் இடம் பெற்றிருக்கிறது. சிங்களத்தில் சந்தேச காவியங்க ளென்று கூறுவது தூதுப் பிரபந்தங்களையே. இப்பிரபந்தங்கள் 14ஆம் நூற்றாண்டின் பின்னரே இயற்றப்பட்டன. இத் தூதுக்காவியங்கள் ஈழநாட்டில் மத்தியகாலத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின் வரலாறு, அவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகள் சிலவற்றையும் சிங்களப்புலவர்களிடையே தமிழ்மொழி பரவியிருந்த தன்மையையும் செவ்வனே எடுத்துக்காட்டுகின்றன. அதுமட்டுமன்றி, ஈழத்தின் புராதன இந்துக் கோயில்களைப் பற்றிய குறிப்புகளுமுள. இவற்றிலே செலகினி சந்தேசம்(மலைமைனாவிடுதூது),மயூரசந்தேசம்(மயில்விடுதூது),கஹகுருலு

சந்தேசம் (மஞ்சட்குருவிவிடுதூது), கோகில சந்தேசம் (குயில்விடு தூது)* என்பன சில. மஞ்சட்குருவிவிடுதூது கதிர்காமச் சிறப்பை வியந்து கூறுவது போலவே, குயில்விடுதூதும் (15ஆம் நூற்றுண்டு) யாழ்ப்பாணத்திலுள்ள புன்னலை வரதராஜப் பெருமாள் கோவிலையும், வல்லிபுரக் கோவிலையும் பற்றிப் பாடியுள்ளது. ஆலயத்தின் புனிதத்துக்கும், புராதனத்துக்கும் இஃதோர் சான்றுகும். முதலியார் இராஜநாயகம் அவர்களின் இக்கூற்றை (Ancient Temples of Sri Lanka) ஈழத்தின் புராதன இந்துஆலயங்கள் என்னும் நூலில் 57ஆம் பக்கத்தில் அதன் ஆசிரியர் S. ஆறுமுகம் பின்வருமாறு எழுதியுள்ளார்.

" The oldest temples in Jaffna dedicated to Rama and Krishna were at Vallipuram and Punnalai respectively and they are mantioned in the kohila Sandesa" wrote mudaliyar C. Rasanayagam.

## குடிசையில் இருந்து கோபுரம்வரை

ஆதியிலே கோயில்கள் பல காணப்பட்டாலும் அவை சிறு கொட்டிலாகவும், குடிசையாகவும் இருந்தன என்பது வரலாற்று விற்பன்னர்களின் கருத்தாகும். மண்ணினுலும், மரத்தினுலும் கட்டப்பட்ட ஆலயங்கள் காலப்போக்கில் வானளாவிய கோபுரங்களின் நிலைக்கு மாற்றமடைந்தன. ஈழத்திலே இராய கோபுரங்களோடு கூடிய கோயில்கள் வெகு அருமை எனினும், அண்மைக்காலங்களில், தென்னக மோடியில் பலகோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தூலலிங்கமான இக்கோபுரங்கள் ஓர் ஆலயத்தின் நுழை வாயிலாகக் காணப்பட்டாலும், கலையின் பிரதிபலிப்பிலே ஓர் அலாதியான அழகையும் அள்ளிச் சொரிகின்றன எனலாம். பழம் பெருங் கோயில்களைப் பற்றி ஆளுடை அரசர் இப்படிப் பேசுகிறுர்.

''பெருகாறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
　　பெருங்கோயி லெழுபதினே டெட்டு மற்றும்
கரக்கோயில் கடில்பொழில்சூழ் ஞாழற் கோயில்
　　கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்து
　　மிளங்கோயின் மணிக்கோயி லாலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
　　தாழ்ந்திறைஞ்சத் தீவினைக டீரு மன்றே.''

வானளாவிய மாடங்களைக் கொண்டது பெருங்கோயில். மரக்கை பரப்பிப் புல்லாலும், ஓலையாலும் வேய்ந்தது கரக்கோயில். அடர்ந்து

---

* குயில்விடு தூது பாடியவர்-தேவிநுவர இருகல் குலத்திலக்க பரிவேனுதிபதி பிக்கு.

வளர்ந்த பலமரங்கள் சூழ்ந்த கூடாரம் போன்றது ஞாழற்கோயில். ஒருவகை முல்லைப்பந்தரின் கீழுள்ளது கோகுடிக் கோயில். கர்ப்பக் கிருகம் மட்டும் உள்ளது இளங்கோயில். வர்ணம் பூசி சுதைவேலை செய்தது மணிக்கோயில். நாற்பக்கமும் நீராற் சூழப்பட்டது ஆலக் கோயில். யானை ஏற இயலாத படி கொண்ட உயரமான கருவறையையுடையது மாடக்கோயில். தூங்குகின்ற யானையின் பின்புறம்போன்ற அமைப்புடையது, விண்ணிழி விமானமுடையது தூங்கானைமாடக்கோயில். இந்த வரிசையிலே வல்லிபுர ஆலயம், ஆரம்பத்தில் கொத்துப்பந்தராய் இருந்து, தென்னங்கீற்றினுல் வேயப்பட்ட கரக்கோயிலாகவே இருந்தது, பின்னர் களிமண் சுவரால் அடைக்கப்பட்ட கட்டிடத்தைக் கொண்டு திகழ்ந்தது. அக்காலத்தில் மரச் சோலையாய் இருந்தது. நாச்சிமார் கோயிலைச் சுற்றிப் பலமரங்கள் இருந்தன. அவற்றிலே கல்லால விருட்சங்களும் காணப்பட்டன. 1935ஆம் ஆண்டிலே ரிஷிகேசத்திலிருந்துவந்த தவஞானி ஒருவர் இக்கல்லால விருட்சங்களைக் கண்டு, ஆனந்தமடைந்து, ஒரு மரத்தின்கீழ் பலமணி நேரம் தியானத்திலமர்ந்திருந்தார். அம்மரம் இன்றும் வெளிவீதியில் தென்மேல் பாரிசத்தில் நிற்கிறது. நாச்சிமார் கோயில் தல விருட்சம் மிகத் தொன்மையானது. இதன் பெயர் எவருக்குமே தெரியாது. (இப்புனித விருட்சம் விஷயம் தெரியாதவரால் எரிக்கப்பட்டு விட்டமை வருத்தத்துக்குரியதாகும்) தென்னங்கீற்றிலிருந்து, மண்தளியாகி, கற்றளியாய் வணங்கப்பட்ட இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டாலும், குடிபதியாய் வாழ்ந்த அவ்வூர்ப் பெருங்குடிமக்கள் வீடு என்ற பெயரிலே வைத்து வழிபட்ட வரலாறு பண்டைய ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. இவ்வாறு ஆதிநாட் தொட்டு கோவிலமைத்து வழிபட்ட வல்லிபுரத்து பராபத்தியக்காரரான மக்கள் அதை மூலக் கருவறை கொண்ட கற்கோயிலாய் வளர்த்த வரலாற்றை இந்துசமுதாயம் மறந்துவிடமுடியாதன்றே. 1820ஆம் ஆண்டளவில் இக் கோயிலை மீண்டும் சிறப்புறக் கட்டியதாக யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள குறிப்புகள் தெரிவிக்கின்றன என்று முதலியார் குல. சபாநாதன் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்பட்ட இவ்வாலயத்தின் கீழைக்கோபுரமொன்று (1981) 71அடி உயரத்தில் எழுநிலைமாடங்களுடன் அமைப்பதற்கான கால்கோளும் பூர்த்தியாகி குடமுழுக்கு விழாக் காணவிருப்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. சிங்கைநகரெனப் பண்டு போற்றப்பட்ட வல்லிபுரம், அன்றைய சிங்கையாரிய மன்னர்களின், தலைநகரில் அமைந்த நுழைவாயிலாகத் திகழ்ந்ததுபோல, இன்றைய ஆலயத்தின் நுழைவாயிலாக அமைகிறது இந்த இராசகோபுரம். அன்றைய மன்னர்களின் ஆட்சியிலவர்களை அடிபணிந்தார்கள் சிற்றரசர்களும் குடிமக்களும். இன்றோ திருமாலின் அருளாட்சிக்கு அடிபணிந்து பக்தர் கூட்டம், வட்சோப லட்சமாய் வந்து மீளுகின்றமை ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்,

வல்லிபுரக் கோயில் பருத்தித்துறையிலிருந்து மருதங்கேணி செல்லும் நெடுஞ்சாலேயில் சுமார் 3 மைல் தொலேவில் இருக்கிறது. மந்திகையில் இருந்து 1 கல் தூரத்திலும், கொடிகாமம் புகைவண்டி நிலேயத்திலிருந்து ஏறத்தாழ 9 கல் தொலேவிலும் அமைந்திருக்கிறது. கோவிலுக்கான அஞ்சல்வழி ஆழ்வார் சுவாமி தேவஸ்தானம், வல்லிபுரம், புலோலி என்பதாகும்.

## அறமுயல் ஆழிப்படையவன் கோயில்

ஜனதனதர்மமான இந்துமதம் ஆறுசமயங்களே உள்ளடக்கியது. அவற்றில் சைவமும், வைணவமும் அடங்கும். சைவம் சிவசம்பந்தமானது, வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தமானது. இவ்விரு மதங்களும் பரதகண்டத்தில் சிறப்பாக தென்னகத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றன. என்ருலும் ஈழத்தில் சைவமும் பௌத்தமும் கொண்ட இடத்தை வைணவம் பிடிக்காவிடினும் திருமால் வணக்கம், சைவமக்களிடமும், புத்தசமயிகளிடமும் உண்டு. கண்டியில் உள்ள விஷ்ணு ஆலயத்தில் சந்தனம் பிரசாதமாக வழங்குவது தொன்றுதொட்ட நடைமுறையாகும். ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் நாமம் (திருமண்) இயற்கையாகக் கிடைக்கும் க்ஷேத்திரம் வல்லிபுரம் ஒன்றேயாகும். சைவத் திருமுறைகள் தந்த நாயன்மார்கள் திருமாலேப் பாடியிருக்கிருர்கள். சிவனின் இடப்பாகத்தைக் கொண்டவர் திருமால் என்ற நாயன்மாரின் கூற்றுப்போல, ஆழ்வார்களும் சிவனே வலப்பாகத்தே கொண்ட திருமால் என்று பாடியிருக்கிருர்கள். இவ்வாறு சங்கர நாராயணனைக் காட்டும் காட்சிக்குமேலே விஷ்ணுவைச் சத்தியாகப் பாடிய நாயன்மார்களும், பார்வதியைத் திருமாலின் சகோதரியாகக் கண்ட ஆழ்வார்களும் உண்டு. திருமால் மருகனை முருகனேக் கண்ட அருணகிரியார் கூட

"அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி"

என்று பாடுகிருர்.

சமயங்களேக் கடந்த சமயாதீதப் பழம்பொருளே, இலங்கைவாழ் சைவமக்கள் வேறுபாடின்றி வணங்குகின்ற சமரசம் மேலானதே. பாரதத்திலே திருமால்சந்நிதியும், சிவசந்நிதியும் உள்ள கோவில்கள் பலவுண்டு. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப் பெருமாள்), சிதம்பரம் (கோவிந்தராஜப் பெருமாள்), சிக்கலே (கோலவாமனப் பெருமாள்), திருநெல்வேலி (நெல்லேக் கோவிந்தர்), செந்தூர் (அரங்கநாதன்), திருப்புத்தூர் (இலட்சுமிநாராயணன்), பழனம்(வேணு கோபாலர்), திருநாவலூர் (வரதராசர்), பவானி (ஆதிகேசவப் பெருமாள்) என்னும் தலங்களிதற்கு உதாரணமாகும்.* இவ்வாறமைந்த சந்நிதானங்கள் ஒருமைப்

* வைணவ தலங்களுள் அன்பில் வித்துவக்கோடு என்னும் தலங்களில் சிவ சந்நிதிகள் உள்ளன.

பாட்டைக் காட்டுகின்றன. ''மாதாய மாலவனை மாதவனை'' என்று பாடியிருக்கிறார் திருமழிசைப்பிரான். ''ஒருவன் ஒருவனங் கத் தென்றுமுளன்'' என்பது பொய்கையாழ்வாரின் வாக்கு. எனவே தான் வல்லிபுரத்திலமைந்த திருமால் சிவவிஷ்ணு என்று அச்சுவேலி பிரமஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் குறிப்பிட்டிருக்கிறார். பாரதத்திலே விஷ்ணு ஆலயங்களில் மூலமூர்த்தி நின்றகோலத்திலும், இருந்த கோலத்திலும், கிடந்தகோலத்திலும் அமைந்திருக்கக் காணலாம். திருப் பதி, அத்திகிரி, திருநாவாய் என்னு மிடங்களில் நின்ற கோலமும் ஹம்பி, ஸ்ரீரங்கபட்டணம், மாமல்லபுரம், சிங்கபுரம், ஸ்ரீரங்கம், திரு வனந்தபுரம் என்னுமிடங்களில் சயனகோலமும் காட்சியளிப்பது போல, காஞ்சி வைகுண்டப் பெருமாள், மதுரை அழகர், திருக்கோஷ்டியூர் ஸௌம்மிய நாராயணன் எல்லாம் அமர்ந்திருக்கும் கோலத்தில் அருள்பாலிக்கக் காணலாம். இத்தனைக்கும் குடந்தைச் சக்கரபாணி கோயிலிலே சக்கரத்தாழ்வார் மூலமூர்த்தியாய் இருக்கிறார். இவ்வாறே வல்லிபுரக் கோயிலில் மூலமூர்த்தி சுதர்சனமே. நெடுநாள் தவம்புரிந்த ஹேமமுனிவரின்முன் தோன்றினார் குடந்தைச் சக்கரபாணி. நாக சாபத்தால் வாடிய லவல்லி சிவனருளால் வல்லிபுரத்தில் பிறந்து தவம் செய்தார். அவன்முன் மற்சமாய், மகவுமாய்க் காட்சியளித்த மாய வன் சக்கரவடிவிலே, அர்ச்சாவதார சொரூபராய் அமர்ந்திருக்கிறார் வல்லிபுரத்தில். பஞ்சலோகத்தாலான இத்திருவடிவம் காத்தற்கடவுளின் ஆழியாகும். அம்பஷன் என்ற அரசன் விஷ்ணுபக்தருட் சிறந்த வன். அந்த மகானுபாவன் ஏகாதசியன்று சுத்தோபவாஸஞ் செய்து, ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் இந்த உபாயங்களால் மகாவிஷ்ணுவை ஸ்வாதீனமாகச் செய்துகொண்டு ராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தான். பகவான் அவனுடைய மேலான பக்தியைப்பார்த்து, அவனுடைய ராஜ் யத்தை இரட்சிப்பதற்காக, அந்த ராசனுடைய அரண்மனைவாயிலில் தம் ஸுதர்சன சக்கரத்தைப் பிரதிட்டை செய்து அந்த மன்னனை இரட் சித்து வந்ததாகப் புராதன கதைகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்திலே வேலை ஆவாகனம்பண்ணி ஸ்தாபித்து வழி படும் முருகன் கோயில்கள் நல்லூரும், செல்வச்சந்நிதியுமாகும். இவை வேற்கோட்டங்களாய் அமைந்த முருகன் ஆலயங்களாகும். அவ்வாறே சக்கரத்தை மூலக்கருவறையில் ஸ்தாபித்து வழிபடும் ஒரேஒரு தலம் வல்லிபுர ஆழ்வார் ஆலயமாகும். தர்மசக்கரமான ஆக்ஞாசக்கரம் காத் தலையும், சங்கு படைத்தலையும், கதை அழித்தலையும், தாமரைமலர் அருளலையும், அனந்தாழ்வார் மறைத்தலையும் குறிக்கின்றது. இத்தலத் தோடு தொடர்புடைய குருக்கட்டுப்பிள்ளையார் கோயில் மேற்கே அமைந்திருக்கிறது. தும்பிக்கை ஆழ்வாரான விநாயகருக்கும், ஆழ் வார் சுவாமிக்கு முள்ள பாரம்பரியமான தொடர்புகள் இன்றும் பேணப் பட்டு வருகின்றன. ஆதியிலே வைணவ ஆலயங்களிலும் விநாயகருக்கே

முதலிடம் கொடுக்கப்பட்டது. எனவே கோயிலின் ஆதிகர்த்தாக்கள் அரசும், குளமும், அதனருகே நெற்கழனிகளும் சூழ எழுந்தருளி இருக்கும் குருக்கட்டுச் சித்திவிநாயகருக்குப் பூசையை நிறைவேற்றிக் கொண்டுதான் வல்லிபுர சுவாமிக்குப் பூசை செய்வது வழக்கமாயிற்று. முன்னோரால் ஆக்கப்பட்ட பண்டைய பாரம்பரியங்களிற் சில இன்றும் மகோற்சவகாலங்களிலே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இவ்வால யத்தின் மேற்கே இரு திருக்குளங்களுண்டு. அவற்றி லொன்றிலிருந்து தான் திருநாமம் எடுக்கப்பட்டு வந்தது. பட்டுத்தீர்த்த மெனப்படும் இறுதித் தீர்த்த விழாவை நெடுங்காலமாக மற்றைய திருக்குளத்தில் நடத் தியும் வந்தார்கள். இக்குளம் திருப்பணி வேலைப்பாட்டுடன் இன்று அமைக்கப்பட்டுவிட்டது. இத்திருப்பணியைச் செய்தவர் பொன்னையா வைத்தியராகும்.

## பெரும்பெயர் இறை

திருமால் காத்தற் தெய்வம். படியளந்த பெருமாள், பெருமாளிலும் பெரிய பெருமாள் என்பது அருணகிரி வாக்கு. முல்லை நிலத் தெய்வ மாயும், பாரதநாட்டின் குலதெய்வமாயுந் திகழ்கிறார். வேதகாலத்தி லிருந்தே திருமால் வழிபாடு வழங்கி நிலைபெற்றுவிட்டமையை இருக்கு வேதம் எடுத்து இயம்புகிறது. அறுசமயங்களில் வைணவமும் ஒன்று. இருக்கு வேதத்திற் சிறப்பாக ஆறு இடங்களில் முழுமையாகப் போற்றப்படுகிறார் திருமால். அக்கினி, இந்திரன் முதலிய பிற தெய்வங்க ளுடன் திருமாலுக்கு முக்கியஇடம் அளிக்கிறது வேதம். வேதங்களா லும், புராணஇதிகாசங்களாலும் போற்றப்படும் திருமாலைத் தொல்காப் பியர் முதல் மகாகவி பாரதியார் வரை பல புலவர்கள் பாடியிருக்கிறார் கள். இதைத் தேசியவீரர் வ. உ. சி. அவர்கள் பாரதியாரின் கண்ணன் பாடலுக்கு எழுதிய முன்னுரையில் ''பாரதநாட்டின் குலதெய்வமாகி விட்ட கண்ணனுக்குப் பாமாலை பாடாத கவிகள் அருமை'' எனக் குறிப் பிட்டிருக்கின்றார்.

ஆதிமுதல் இத்தேதிவரை போற்றப்படும் கண்ணனை முழுமுதற் கடவுளாய் வழிபடுபவர்கள் வைஷ்ணவர்கள். ஆதிசங்கரர் வைதீக சமயங்கள் ஆறையும் இணைத்துச் சமயப்பூசல்களை ஒழிக்க முயன்றார். குலதெய்வமாகக் கொண்டாடுமளவுக்கு, கண்ணன் எல்லோர் உள்ளங் களையும் கொள்ளைகொண்டிருக்கின்றான். திருமால் பெருமை பேசும் பாகவதம், இராமாயணம், பாரதம், பகவத்கீதை முதலிய தொல் பெரும் நூல்களைவிட, சங்கஇலக்கியங்களும், சிலப்பதிகார காப்பியமும் திருமாலைப் பெரிதும் போற்றியுள்ளன. பிள்ளைத்தமிழ் இலக்கியங்களி லெல்லாம், காப்புப் பருவத்தில் திருமாலுக்குத் தனியிடம் உண்டு. ''பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே'' என அழகொழு

கப் பாடினவர் குமரகுருபரர். பரிபாடலில் மொத்தம் ஏழு பாடல்கள் திருமாலைப்பற்றிப் பேசுகின்றன. அப்பாடல்கள் திருமாலின் தத்துவங்களையும், கோயில்கொண்ட ஸ்தலங்களையும் பற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. முருகனைப் 'பெரும் பெயர் முருகன்' எனத் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் போற்றுகின்றன. அவ்வாறே திருமாலைப் 'பெரும்பெயர்இறை' எனக் குறிப்பிடுன்றது பரிபாடல் (பாடல் 15). முல்லைப்பாட்டில் ''நனந்தலை யுலகம் வளைஇய நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர்செல நிமிர்ந்த மாஅல்'' எனவும்; பெரும்பாணாற்றுப்படையில் ''காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப் பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்'' எனவும், மதுரைக்காஞ்சியில் ''மாயோன்'' எனவும் வரும் தொடர்கள் திருமாலைக் குறிக்கின்றன. தொல்காப்பியர் ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என முல்லைநிலத் தெய்வத்தைப் போற்றுகின்றார். கீழ்க்கணக்கு நூல்களிற் திருமாலைப் பாடும் பாவம் நிறைந்த பாடல்கள் பலவுண்டு, அவற்றைக் கீழே தருதும்.

''மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்'' —நான்மணிக்கடிகை

''முக்கட் பகவன் அடிதொழாதார்க் கின்னா
பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா'' —இன்னா நாற்பது

''கண்ணகன் மாஞாலம் அளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்ந்ததூஉம் — நண்ணிய
மாய்ச்சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.'' —திரிகடுகம்

இடைக்கால இலக்கியமான கலிங்கத்துப்பரணி
''ஒருவயிற்றிற் பிறவாது பிறந்தருளி உலகொடுக்கும்
திருவயிற்றிற்று ஒருகுழவி திருமாலைப் பரவுதுமே''
எனக் கூறுகின்றது.

வள்ளுவர் வைகுந்தத்தைத் ''தாமரைக் கண்ணான் உலகு'' எனவும் படியளந்த பான்மையை ''அடியளந்தான் தாய வெல்லாம்'' எனவுங் காட்டுகிறார். இவ்வாறே கொங்கணச் சித்தரும்

''காண்டிபனல் பணி பூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன்பொற் பாதங்கள் காப்பாமே'' என்று பாடுகிறார்.

சிலம்பிலே காவிரிப்பூம் பட்டினத்தில் திருமால் கோவில்கொண்டிருந்தமை பற்றியும்; ஆடல்வகையிற் திருமாலுக்கான தேவபாணி எதுவென்பது பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன.

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்''
— *இந்திரவிழவூர் எடுத்தகாதை 170—175*

''மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்
மாயோன் பாணியும் வருணப் பூதா
நால்வகைப் பாணியும்'' — *கடலாடு காதை 34—35*

இவ்வண்ணம் மிகத் தொன்மையான திருமால்வழிபாடு இமயந் தொட்டு ஈழம் வரை பரந்துள்ளது. இலங்கை மணித்திருநாட்டில் சைவமும் பௌத்தமும் விஷ்ணுவை வணங்கும் ஒருமைப்பாடுடையன. தெற்கே தெய்வேந்திரமுனை, கண்டி, பெல்லங்வில, கழுபோவில என்னு மிடங்களிலும், கிழக்கே வந்தாறுமூலை, மண்டூர், திருப்பழுகாமம், கழுவாஞ்சிக்குடி, கிரான், தம்பிலுவில், திருமலை என்னுமிடங்களிலும் விஷ்ணு தேவாலயங்கள் அமைந்துள்ளன.

இபின்பட்டுட்டா தெய்வந்துறையில் ஆயிரம் பிராமணர்களும், ஐந்நூறு தேவதாசிகளும் இருந்தனர் என்றும், பூசைகளும் பக்தி பரவச மான ஆடல்பாடல்களும் இடம்பெற்றிருந்தனவென்றும் குறிப்பிட் டுள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் புராதன விஷ்ணு ஆலயங்கள் வழிபாட்டு ஸ்தலங்களாய் அமைந்துள்ளன. பாரத நாட்டிலே சிறப்பாக பஞ்சகிருஷ்ண க்ஷேத்திரங்களான திருக்கண்ணபுரம், திருக் கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக் கோவிலூர் என்பன சிறந்த தலங்களாகும். இவ்வாறே ஸ்ரீலங்காவிலும் ஈழத்துமக்களாற் போற்றப்படும் பஞ்சகிருஷ்ண தலங்களில் வல்லி புரமும் ஒன்றாகும்.

''ஈழம்வாழ் பக்தர் இயம்பவொண்ணு வாறுபலர்
சூழும் தலம்காண்நற் சுந்தரமார் — ஈழம்சேர்
மாயன் தலமாம் மகிமைபெறு வல்லிபுரம்
ஆயதா லச்ச மகல்.'' — *கருடன்விடு தூது*

எழுவான்கரையில் வல்லிபுரமும், படுவான்கரையில் பொன்னாலை யும் பழம் பெருந்தலங்களாகும். வண்ணார்பண்ணை, மல்வில், கீரிமலை, கோப்பாய் என்னுமிடங்களினும் திருமால் ஆலயங்களுண்டு. காஞ்சி யிலே வரதராஜப்பெருமாள் கோயில் போல பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலும், திருப்பதி வெங்கடாசலபதி கோயில் போல வண்ணார்பண்ணை பெருமாள் கோயிலும், ஸ்ரீரங்கம் அரங்கநாதர் போல

வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயிலும் அமைந்துள்ளன. திருமால் குடிகொண்ட திருப்பதிகளில் வல்லிபுரமும் ஒன்றாகும்.

தீர்த்தவிழாக் கண்டுகளிக் கின்ற போது
திருவரங்கம் திகழுநலம் அதுவும் காண்பாய்
நீர்த்தரங்கம் நெளிந்துநெளிந் தசைந்து வந்தே
நெடுங்கரைமேல் அடிக்கின்ற நீல மேனிச்
சீர்த்தரங்கத் திருக்கடல்மற் றிதுவே முன்னாள்
திருவரங்க மகாமாயன் திருமீ னாகி
ஆர்த்தடித்திட் டறுத்துவலை நடன மாடி
அணைந்தனன்காண் இலவல்லி தவத்தி னாலே.

— வல்லிபுரத் திருமாலை

## நகுலமலைக் குறவஞ்சியில் வல்லிபுரம்

திருத்தம்பலேஸ்வரம் என்னும் கீரிமலை தீர்த்த விசேடமுடையது. குதிரைமுகமும், கீரிமுகமும் இத்தீர்த்தத்தினால் நீங்கிய புராண வரலாறுடையது நகுலமலை. இத்தலவிசேடம் பற்றி விஸ்வநாத சாஸ்திரிகள் நகுலமலைக் குறவஞ்சி யென்னும் பிரபந்தத்தைத் தமிழுலகிற்குத் தந்திருக்கிறார். அக்குறவஞ்சியிலே வல்லிபுரம் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

நாகதீவு பூநகரி நாடுகவு தாரிமுனை
நாடு நெல்லூர்
நாரந்தனை நாகர்கோவில் கொல்லன்கிராய்
மாகயப்பிட்டி
துணைவி மண்டைதீவு புன்னைநகர்
வல்லிபுரமே
முதலாய வெல்லையில் விரைந்து
தேடிக் கண்டழைத்து
கண்டழைத்துக் கொண்டுவா நூவா
என்சிங்கியைப் போய்க்
கண்டழைத்துக் கொண்டுவா நூவா
கண்டழைத்துக் கொண்டுவா மாவைக்கந்தர்
முண்டகப் பதம் பணிந்து முன்னுள்ள
நாடெங்குந் தேடி கண்டழைத்து

குறவஞ்சிப் பிரபந்தங்களில் குறத்தியின்கணவன் சிங்கன் எனவும் அவனுடைய கையாள் நூவன் எனவும், குறத்தி சிங்கியெனவும் வழங்கப் படுதலைக் காணலாம். குறவஞ்சி யென்பது குறப்பெண் எனப் பொருள் படும். சிங்கன் தன் சிங்கியைக் காணவில்லை என நூவனிடம் கூறி, அவனை

யெங்காவது கண்டழைத்துக் கொண்டு வருமாறு மன்ருடுகிருன். சிங்கன் தன் மனைவியை எங்கெங்கெல்லாம் தேடும்படி நூவனிடம் சொல்கிருன்: யாழ்ப்பாணத்திலுள்ள பல ஊர்களையெல்லாம் பாடலிலே புலவர் அமைத்துக்காட்டும்போது, வட்டுக்கோட்டையில் இருந்து, வல்லிபுரம் எல்லையாக உள்ள பல இடங்களின் பெயர்கள் இடம்பெறு கின்றன. நகுலமலைக் குறவஞ்சியில் வரும் வல்லிபுரம் வரலாற்றுச் சான்றுள்ள தொன்னகரமாகும். வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவிலில் நடைபெறும் மஹோற்சவத்தின்போது கட்டியம் கூறுகையில் "வல்லி புரம் என்னும் நகரில் வதியும் ஆழ்வார் சுவாமி" எனக் கூறுவது வழிவழி மரபாகும். வரலாற்றுரீதியாகவும் இலக்கியமரபிலும் பழம் பெருஞ் சிறப்புடையது வல்லிபுரம். அமரநாத்திலிருந்து ஆய்பாடி வரையுள்ள ஆயிரத்தெட்டுத் திருமால் தலங்கள்போல வல்லிபுரமும் ஒன்ருகும்.

"வேங்க டாசல மத்தி விலங்கலோ டழகர் கோயி
ருங்குபொன் ஞல யஞ்சிர்த் தனிப்பெரு மரங்கம் வெஃகா
வோங்குமூ ரகம்வை குண்டம் ஒளிரட்ட புயமே யாதிப்
பாங்குயர் தலம்போல் வாழும் பதிவல்லி புரத்தாய் போற்றி"

— வல்லிபுரமாயன் போற்றிவிருத்தம்

## ஊரும் பேரும்

"முல்லையம் புறவ மாயோன் முன்பொரு மடந்தை வேண்டச்
சொல்லமர் குழவி யென்னத் தோன்றியே யமர்ந்தாங் கன்பர்
எல்லவர் தமக்கும் வேண்டும் இன்பெலா மளிக்குந் தானம்
வல்லிபு, சனைகொள் வல்லி புரமென வழங்கு மீண்டே."

—திருக்கேதீஸ்வர புராணம்

ஈழநாடு இந்தியப் பெருங்கண்டத்துடன் பொதுவாகவும், தென்னகத்துடன் சிறப்பாகவும் தொடர்புடையதுமட்டுமன்றி, தமிழர்களின் குடியேற்றம் ஈழவரலாற்று ஏட்டிலே ஒரு தனி அத்தியாயமுமாம். இன்றைய மக்களின் புராதன வரலாற்றுக் கால்கோள் மிகத் தொன்மைமிக்கதுமாகும். ஈழத்தையும் தமிழகத்தையு மிணைப்பன வாய்த் திருநெல்வேலி, நல்லூர் என்னும் இடப்பெயர்கள் பாக்கு நீரிணைக்கு இரு பக்கத்திலுமுண்டு. இவ்வரிசையிலே வல்லிபுரம் என்ற பெயர் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையது. நடராஜப் பெருமானின் பஞ்சசபைகளி லொன்ருன தாமிரசபை இராஜவல்லிபுரத்தி லிருக்கிறது. இஃதோர் சிவத்தலமானதுபோல வல்லிபுரம் விஷ்ணு தலமாகும். தமிழ்நாட்டில் செங்கற்பட்டில் கடலோரத்திலிருந்து 20 மைல் தொலைவிலுள்ள ஒரு விஷ்ணு ஆலயம் "வல்லிபுரம்" என அழைக்கப் படுகிறது. எனவே அப்பெயர் தென்னகத்திலிருந்து இங்கு குடியேறிய

மக்களால் சூட்டப்பட்டிருக்கலாம். அன்றியும் கரிகாற் பெருவளத்தான் தொண்டைமண்டலத்தைக் கோட்டங்களாகவும், பிரிவுகளாகவும் வகுத்த பொழுது வல்லிபுரம் என்பதும் அந்நாடுகளில் ஒன்றுயிருந்ததாய் இதிகாசம் கூறுவதைக் கவனிக்கும்போது சோழமன்னராட்சிக்காலத்தி லிப்பெயர் இலங்கையில் நிலைபெற்றிருக்கலாமென்ற கருத்து வரலாற்றுசிரியர்களால் வெளியிடப்பட்டு இருக்கிறது. இன்று வல்லிபுரமென்றழைக்கப்படுமிடம் முன்னொருபோது வடமராட்சியில் குடியேறிய வென்றிபாகுதேவன், சேற்கொடி தேவன், வல்லிபாகுதேவன், வதிரிபாகுதேவன் முதலிய குறுநில மன்னர் பரம்பரையைச் சேர்ந்த வல்லியதேவன் குடியேறிய பகுதியாகும். அவன் தன் பெயரை இட்டான் எனவும் கூறுவர். இவ் வரலாற்றுக் குறிப்பு ஈழத்துப் புராதன சிவாலயங்களென்ற நூலிலே இடம்பெற்றிருக்கிறது.

The site has several historical references. A. Mootoothamby Pillay in his 'Jaflna History' writes (p.13 That Among those who were brought to settle in Jaffna were some from the north of Thondainadu ; The place they settled down assumed the name of Vadamarachchi meaning occupied by the northerners. That region, where valliathevan was the chief settler, became known as Vallipuram. They were telugu people and were vaishnavaties. So a Temple for the worship of Sri Vishnu got Built at Vallipuram. Mudaliyar Rasanayagam refers to it as the oldest temple in Jaffna, Dedicated to Srirama Bhagavan

புரம் என்றால் கோவில், ஊர் எனப் பொருள்படும். வல்லியென் பதற்குக் கலைவாணி, பெண், பூமாதேவி என்றெல்லாம் அர்த்தம் செய்கிறது அகராதி. எனவே பூமாதேவி விஷ்ணுவைத் தவம் செய்து தரிசித்த இடம் வல்லி+புரம் = வல்லிபுரம் ஆகும் என்பதும் ஈழமண்டல கதாசிரியர் முடிபு. இத்தனைக்கு மேலே இலவல்லி நாகசாபம் நீங்கும் பொருட்டுப் பிறந்த இடம் வல்லிபுரம் என தட்சிணகைலாய மான்மியம், வல்லிபுர வைபவம் கூறுகின்றது. எனவே லவல்லியின் பெயராலே வல்லிபுர மென்ற பெயர் வந்ததென்னும் கூற்றுப் பொருந்தாதாகும்.

இவ்வண்ணம் வடமராட்சியில் அமைந்த வல்லிபுரம் ஈழத்துப் புனித புராதன க்ஷேத்திரங்களிலொன்றுகக் கணிக்கப்படுகிறது. வல்லிபுரமென்னும் இடத்தால் ஆலயமே வல்லிபுரக்கோவிலென அழைக்கப்படுகிறது. நாச்சிமார்கோவில், காளையார்கோவில், செம்பொனர் கோவில், சூரியனர் கோவில், ஆவுடையார் கோயில், நாகர்கோவில் என்னும் தலங்கள் தமிழ்நாட்டில் இருப்பது போல வல்லிபுரக்கோவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. வல்லிபுரக்கோவிலில் இருந்து சிலமைல் தொலைவில் உள்ள நாகர்கோவிலில் நாகதம்பிரான் கோவி

லொன்றுண்டு. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலில் சித்திரவேலாயுதர் கோயிலுண்டு. வல்லிபுரம் என்ற ஊரின் பெயர் மூலமூர்த்திக்கே யமைந்துவிட்ட பெருமை கொண்ட வல்லிபுரத்து ஆழ்வார் சுவாமியை வல்லிபுர நாதர், வல்லிபுர மாயவன், கிருஷ்ணன் என்றெல்லாம் அழைக்கிறார்கள் அடியார்கள். வல்லிபுரத்தின் வரலாறு ஆய்வாளருக்கோர் தனியத்தியாயமாகும்.

## கோகுலமான வல்லிபுரம்

'' பாசறை மன்னர் பாடிபோல
விரிநீர்ப் பரப்பின் எதிரெதிர் இருக்கும்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும் ''

— *மணிமேகலை 8-32-34*

ஈழத்தின் கீழ்ப்பாலமைந்த வங்கக்கடலோரம் விரிந்து படர்ந்து கிடக்கும் வெண்மணற் பரப்பு, இடையிடையே நீண்டு படுத்துக்கிடக்கும் மணற்குன்றுகள், வரிவரியாய்த் தோன்றும் வண்ணக்கோடுகள்போலமைந்த மண்ணமைப்பு, அடிக்கடி காற்றினால் அலைப்புண்டு, இடம் மாறிக் காட்சிதரும் இயற்கையின் எழிற்பாடு ஊடே நெய்தல் நிலத் தாவரங்கள் அங்கொன்றுமிங்கொன்றுமாய் விரவிய காட்சி, இடையிடையே சுனைநீர்ப் பொய்கைகள்—துரவுகள்—சிறுகிணறுகள் சிதைந்து கிடக்கும் புராதன நகரொன்றின் அழிபாடுகள், பழம் பெருஞ்சாலைகளின் சுவடுகள், சுண்ணும்புக் கற்பார்களின் வெறிச்சென்ற தோற்றம், சிங்காரச் சிங்கைநகரின் சிதைவுகள், இயற்கை ஏகாந்தமே சிறந்ததென்று சொல்லுவது போன்ற அமைதி நிலவும் பாங்கு. இந்த நெய்தல் நிலம் கிழக்கிலிருந்து மேற்கே செல்லச் செல்ல மருதநிலமாய் மாற்றமடைந்து செந்நெற் கழனியாகத் திகழ்கின்றது. நெய்தலும், மருதமும் நெருங்கி மயங்கும் மென்புலத்தில் நீலமேகச் சியாமளவண்ணனின் திருக்கோயிலின் கெம்பீரமான தோற்றம். வங்கக்கடல்கடைந்த மாயவன் கிழக்கேயுள்ள வங்கக் கடலையே பார்த்துக்கொண்டிருக்கிறான். என்ன திவ்வியமான காட்சி. இதைக் கண்ட புலவர் ஒருவர் இவ்வாறு திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார்.

'' பண்பார் பரம! நாதநற் சங்கொடு
பரந்தொளி வீசுயர் சக்கர மேந்தியே
விண்பா ரனைத்துயர் விளைவெலாம் பேணும்
விட்டுணு வாகிய தேவநற் கடலொடும்
மண்பார்த் தெமைநீ பாராதுற் றிருந்தும்
மருவிநா முற்றிட மலியருள் ஈவோய்
கண்பார்த் தருள்வாய் மணிவண்ணு சீரருட்
கண்ணுநீ பள்ளி யெழுந்தரு ளாயே''

—*ஆழ்வார் பள்ளியெழுச்சி*

வயல் வெளியின் நடுவே அழகான தாமரைத் தடாகமொன்று, மருத நிலத்தைச் சூழ பனையும், தென்னையும் ஓங்கி வளர்ந்து, உல களந்த உத்தமன் பேர் பாடுகின்றன. செய்ப்பதியாய் – வயலூராய் விளங் கும் வல்லிபுரம் கோகுலம் – ஆயர்பாடி யென்ற இறைச்சிப் பொருளைத் தன்னகத்தே உடையது. இந்த க்ஷேத்திரத்தில், க்ஷேத்திரியாய் இருப்ப வன் கிருஷ்ணன். இடையர் இருப்பிடமாய்த் திகழும் தேசங்களி லொன்று தமிழகத்தில் ஒரு விஷ்ணு தலமாய்த் திகழ்கின்றது. அத் தேசப் பிரபாவத்தை சுமார் 22 பாசுரங்களில் விஷ்ணுசித்தரும் திரு மங்கை மன்னனும் ஆண்டாளும் மங்களாசனஞ் செய்திருக்கிறார்கள். அவற்றிலொன்று வருமாறு:

''புவியுள்நான் கண்டதோ ரற்புதங் கேளீர்
பூணி மேய்க்குமிளங் கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத் தணையான் குழல்ஊத
அமர லோகத் தளவுஞ்சென் றிசைப்ப
அவியுணு மறந்து வானவ ரெல்லாம்
ஆயர் பாடி நிறையப் புகுந்தீண்டி
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்த னைத்தொடர்ந் தென்றும் விடாரே''

— பெரியாழ்வார் 281

இவ்வாறு கோகுலச் சிறப்பையும், கோபாலனின் வேய்ங்குழல் இசை யின் மேன்மையையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பல பாசுரங் களில் பேசக் காணலாம். வல்லிபுரத்தில் முன்தோன்றி மூத்த குடியின ரின் பட்டி தொட்டிகளிலுள்ள கோகுலங்களின் பட்டிக் குறிகளும் அத்தக் கோபாலனையே குறிக்கின்றன. உடம்பிலே ''ஆ'' என்ற அக் கரம் அமைந்துள்ளது. இஃது ஆழ்வார் சுவாமியைக் குறிக்கும் அடை யாளம், மாடுகளின் பின்தொடையில் கோயில் மூலமூர்த்தியின் சின்ன மான சக்கரம் பொறிக்கப்பட்டிருக்கிறது. முன்காற்சீப்பில் பூக்கொக்கை யின் வடிவமுண்டு. இவை வரலாற்றுச் சாசனங்களாகும். பெரியாழ் வார் மலர்மாலையும், பாமாலையும் தொடுத்துத் தொண்டு செய்தார். அஃதேபோலக் கோயிற் பூசகர்களாய் விளங்கிய அவ்வூரவர்களின் கிரி யைத் தொண்டைப் பிரதிபலிப்பதே இப்பூக்கொக்கை. கிரியைத் தொண் டிலும் சரியைத் தொண்டிலும் ஆழ்ந்த அக்கால மக்களின் உறைப் பான பக்தியையும், உழைப்பையும் இவ்வடையாளங்கள் படம்பிடித் துக் காட்டுகின்றன. திருமாலினாயுதமான சுதர்சனம் தொடையில் அமைந்திருப்பது அவ்வூரவர்களின் குலதெய்வம் சுதர்சனே என்பதை உறுதிப்படுத்துகிறது. இது கண்ணனின் ஆயர்பாடியை நினைவூட்டுகிறது. இன்றுமவ்வடையாளங்களை அவ்வூர் ஆநிரைகளிற் காணலாம். வல்லி புரக் கோயில் ஆய்பாடிக் கோயில் என்பதைக் கலாநிதி ஆ. வேலுப் பிள்ளை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

'' வல்லியம் என்றால் ஆய்பாடியைக் குறிக்கும் என்பது பிங்கலந்தை நிகண்டில் இருந்து தெரியவருகிறது. வல்லி யென்ற சொல்லுக்கு ஆய்ப்பாடி (அதாவது கோகுலம்) என்ற கருத்து ஆனந்த விகடன் அகராதியிலே காணப்படுகிறது. புரம் என்ற பலபொருள் ஒரு சொல்லுக்கு கோயிலென்ற பொருளும் உண்டு. எனவே '' வல்லிபுரக் கோயில்' என்பது ஆய்ப்பாடிக் கோயிலென்ற பொருள் தரும். ''

கோகுலமாகக் கொள்ளப்படும் வல்லிபுரம் தனிப்பெரும் நகரம்; தலைசிறந்த விஷ்ணு தலமும்கூட. இங்கே கோயில்கொண்டிருப்பவன் கோவிந்தன். கோபாலன், கோவிந்தன் என்பன திவ்விய நாமங்கள். பசுக்களை அடைந்தவன் – பசுக்களை மேய்ப்பவன் என்னுமர்த்தத்தில் அப்பெயர்கள் அமைந்துள்ளன. பசுக்கள் என்பது ஆன்மாக்களைக் குறிக்கும். பசுபதி யென்றோர் திருநாமம் சிவனுக்குமுண்டு. ஆன்மாக்களுக்குத் தலைவனவன். அஃதேபோல நாராயணனும் விளங்குகிறான். வல்லி புரத்துக்கு மங்கேயுள்ள மாடுகளின் பட்டிக்குறிக்கும் பிரிக்கமுடியாத தொடர்புண்டு. கோ – என்பது பசுவைக் குறிக்கும். முப்பொருள் களில் பசு ஆன்மாவாகும். ஆன்மாக்களை வைகுந்தத்திலுய்ப்பவன் கோவிந்தனன்றோ.

''அல்லிவெள் ளாம்பல் காயா வகவித மாக முப்பேர்
அல்லிரா விருளே யென்ப வாகமார் புடலு மாமே
சில்லியே வட்டங் கீரை தேருருள் சிள்வீ டென்ப
வல்லியாய்ப் பாடி வள்ளி வரைவோடு நிகள மாமே.
— சூடாமணி நிகண்டு

இப்பாடலிலே வல்லியென்னும் சொல், இடைச்சேரி, படர் கொடி, அளவு, கால்விலங்கு என்னும் பல கருத்துள்ள ஒரு சொல்லாகத் திகழ்கின்றது.

''உரமென்ப வலியே ஞான மூக்கமே மார்பு நாற்பேர்
சிரமென்ப நெடுங்கா லப்பேர் சென்னியு மன்ன தேயாம்
புரமென்ப புரிமுன் மெய்ப்பேர் புரவலன் வள்ளல் வேந்தன்
கரமென்ப கிரணஞ் செங்கை கழுதைநஞ் சிறுத்த லும்பேர்''
— சூடாமணி நிகண்டு

இப்பாடல்தரும் பொருளமைவை ஆயும்போது புரம் மருதநிலத் தூரைக் குறிக்கின்றது. இராஜதானி, ஊர், நகரம் என்னும் கருத்துக் களும் புரமென்ற பதத்துக்கே உரியன. ஆதலின் வல்லிபுரம் '' ஆய்ப்பாடிக் கோயில் '' என்ற பொருள் தரும் கூற்று எவர்க்கும் இசைந்த முடிபாகும். கோகுலம் தந்த கண்ணபிரான் வல்லிபுரத்தில் கோவில்கொண்டு அடியார்களுக்கு அருளாட்சி புரிகிறான். நீதியே வடிவமான நிர்மலனின் ஆட்சி அகில இலங்கையிலும் பரந்து பரிபாலிக்கப்படுகின்றதன்றோ!

"அல்லல் விளைத்த பெருமானை
ஆயர் பாடிக் கணிவிளக்கை
வில்லி புதுவை நகர்நம்பி
விட்டு சித்தன் வியன்கோதை
வில்லைத் தொலைத்த புருவத்தாள்
வேட்கை யுற்று மிகவிரும்பும்
சொல்லைத் துதிக்க வல்லார்கள்
துன்பக் கடலுள் துவளாரே." — ஆண்டாள்

## அற்புத புராண வரலாறு தரும் வல்லிபுரம்

"மாயவ முராந்தகநேர் வல்லிபுரக் கோயிலுறை
தூயவெற் கிவதென்றே தொல்வனத்து — பாயமுணர்ந்
தெய்துழைமா ரீசனைக்கொன் றிவ்விலங்கை யேகநெறி
செய்தவிறன் மாதவநின் சீர்."

— வல்லிபுர மாயன் மும்மணிமாலை

கோயிலென்றால் சிதம்பரமும், ஸ்ரீரங்கமுமேயாகும். நடு நாடியாக விளங்கும் சிதம்பரம் சைவசமயத்தவர்களாற் கோயிலென அழைக்கப்படுவதுபோல, ஸ்ரீரங்கம் வைணவர்களாற் கோயிலென அழைக்கப்படும். உபயகாவிரியின் நடுவில் இருக்கும் (துருத்தி) அந்தரங்கம், கோயில், பெரியகோயில், பூலோக வைகுண்டம், போகமண்டலம் எனப்படும் தலைமை சான்ற ஸ்தலமாகும். இவ்வாறே வல்லிபுரக் கோயிலை அவ்வூரவர்கள் "பெரியகோயில்" என்றழைப்பர். தொண்டரடிப்பொடி "அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே" எனப் பள்ளியெழுச்சி பாடுகிறாரே. அஃதே போல "வல்லிபுரத்தாளே" என்று வல்லிபுர சுவாமியைத் தாயாக அழைக்கும் மரபொன்று வல்லிபுரத்திலும் உண்டு.

பிரமனது திருவாராதன மூர்த்தியாகிய திருமாலை இட்சுவாகு மன்னனுடைய தவத்துக்கிரங்கி அளித்தருள, இட்சுவாகு முதல் இராமன் வரை சூரியகுல தெய்வமாகப் பூசிக்கப்பட்டபின் இராமனால் விபீடணாழ்வாருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனாலந்த மகாவிஷ்ணு இலங்கைக்குச் செல்ல மறுத்துவிட்டார். இக்காரணத்தையறிய இதிகாச காலத்துக்கே செல்லவேண்டும்.

இலங்கையர்கோனான இராவணன், அயோத்தி இராமனின் மனைவி வைதேகியை எடுத்துச்சென்று அசோகவனத்திற் சிறை வைத்தான். சிறையிருந்த செல்வியைச் சிறைமீட்க, தாசரதி படை திரட்டிக்கொண்டு இலங்கைக்கே சென்றான். இராவணன் தம்பி விபீஷணன் இராமனுடன்

சேர்ந்து அவன் வெற்றிபெற உதவினுன். இராவண சம்மாரம் முடித்துத் திரும்பும்போது, இலங்கையை விபீஷணனுக்குக் கொடுத்து அவனுக்கே முடியுஞ் சூட்டினுன். பின் அயோத்தி சென்று அரசாட்சியை ஏற்றுப் பட்டாபிஷேகம் செய்துகொண்டிருந்தான். பட்டாபிஷேக விழாவுக்கு வந்த விபீஷணனுக்குப் பரிசாகத் தான் ஆதரித்துவந்த அரங்கநாதனையே கொடுத்தான். ப்ரணவாக்குருதி விமானத்துடன் கூடிய எம் பெருமானை எடுத்துச்சென்ற விபீஷணன் காவிரிக்கரையை அண்டியதும் நீராட எண்ணி விமானத்தையங்கே இறக்கி வைத்தான். அவ்வளவுதான், நீராடிவிட்டு விபீஷணன் விமானத்தை எடுத்தான். அவனுல் எடுக்கமுடியவில்லை. அரங்கனு மந்த இடத்தை விட்டுக் கிளம்ப மறுத்துவிட்டான். இலங்கையிலே இருக்கவேண்டிய அரங்கத்தண்ணல் (விபீடணனின் வேண்டுகோட்படி) இலங்கையை நோக்கியவண்ணமிருக்கிருன்.

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசைப் பாதம் நீட்டி
வடதிசைப் பின்பு காட்டி
தென்திசை இலங்கை நோக்கி"

அரவணையில் துயில்பவனுகத்தான் இன்னும் காட்சியளிக்கிருன் அரங்கநாதன். இவ்வாறே வல்லிபுரக் கடற்கரையில் திருவிளையாடல் செய்த பத்மநாபனைச் சுமந்து வந்த பல்லக்கை இறக்கி வைத்துவிட்டுப் பின்னர் அசைக்க முடியாத நிலையில் புடைபெயராமல் எம்பெருமான் வங்கக் கடலைப் பார்த்த வண்ணம் வல்லிபுரத்திலே கோயில் கொண்டுள்ளார். எனவே பெரிய கோயிலென அழைக்கப்படும் வல்லிபுரக் கோயில் ஈழத்திலோர் அரங்கமாகவே அமைந்துள்ளது.

பொங்கொலிநீர்ப் பரப்பினிலே வங்கமலி நற்கடலிற் பொன்மீனுகி
மங்களமாய் உலகெல்லாம் மகிழ்ந்துநிதம் நினதருளிற் திளேக்கவேண்டி
சிங்கமென நின்ருர்ப்ப ரித்துவல்லி துயர்தீர்த் தருளிநற் சுதர்சனமாய்
இங்கிருந்தெம் இடர்தீர்க்கும் ஏந்தலே வல்லிநாதா போற்றிபோற்றி.

— வல்லிபுரத் திருமாலை

வல்லிபுரம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருஞ் சிறப்புகளை உடையது. இத்தலமகிமையைத் தட்சிணகைலாயமான்மியம் வல்லிபுர வைபவத்திற் காணலாம். அவை வருமாறு:-

1. ஸ்ரீசூதமாமுனிவர் சொல்லினர் (எவ்வாறெனில்) இலக்குமி விலாசமுள்ள வல்லிபுரம் என்னும் தலத்தின் மகிமை இப்போது சொல்லப்படுகிறது.

5. கங்கணங்களைக் கடற்கரையிலிட்டு பின்னர் அவர் திருவிளையாட்டிலும் அக்கடலில் மறைந்தார். பின்ஞெருநாள் வல்லிபுரத்துக் கணிமையாக உள்ள வலைத்தொடரிற் பிரவேசித்துக் கோலாகலத் தொனி செய்தார்.

22. இவ்வண்ணம் பத்துருபத்தை உடையவரும் வல்லிபுரத்திலே எழுந்தருளி இருக்கிறவருமாகிய தேவரீருக்கு வணக்கம்.

56. சிறுமியே! தனியே புத்திரப்பேறேதுவாக நீ வருந்தவேண்டாம், வல்லிபுரம் என்னும் பெயருடைய தேசத்திலே லவல்லியென்னும் பிரசித்த நாமமுடையவளாவாய்.

57. பிறந்திருக்கக்கடவாய், பெரும்பாக்கியவதியே! நீயும் உலகத்துள்ள அறிஞர்கள் எவராலும் மதிக்கப்படுவாய்.

63. இவ்வுலகத்திலே இம்மைச்சுகங்களையும் அனுபவித்துத் தேகமுடிவிலே முத்தியை அடைந்தாள் (லவல்லி). வல்லிபுரமாகிய மகாஸ்தலம் விஷ்ணுமூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கின்ற சிறந்த ஸ்தலமாகும். அன்றியும் வைகுண்டத்தில் அனுபவிக்கும் முத்தி இன்பத்தைக் கொடுப்பதுமாகும்.

64. வல்லிபுரமென்னும் மகா க்ஷேத்திரத்தை எந்த மனிதன் இப்பிறப்பில் தரிசிக்கிறானோ, அல்லது வாசம்பண்ணுகிறானோ, அல்லது ஸ்தல மகிமைகளை வாயாற் சொல்லுகிறானோ,

66. அவனுக்கு எப்போதும் மரணபயமில்லை; சரீர ஆரோக்கியமுண்டாகும். இது நிச்சயம். அவனிவ்வுலகிலே சுக மனுபவித்துத் தேகாந்தத்திலே விஷ்ணுபதத்தை அடைவான்.

இத்தலமகிமை பற்றி நீர்வேலிப் பீதாம்பரப்புலவர் (வல்லிபுரநாதர் பதிகம் 1819), உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் (வல்லிபுரநாதர் பதிகம் 1910) உடுப்பிட்டி ஆறுமுகவாத்தியார் (வல்லிபுர சுவாமி பதிகம்), கீழைப் புலோலி பஞ்சாட்சர குரு (வல்லிபுர மாயன் மும்மணிமாலை – போற்றிவிருத்தம் 1931), துன்னாலை முருகேச பண்டிதர் (ஸ்ரீவல்லிபுர மாயன் பதிகம் – போற்றிவிருத்தம் – திருவூஞ்சல் 1930), தென்புலோலி பண்டிதர் கு. பெரியதம்பி (வல்லிபுர ஆழ்வார் திருப்பள்ளியெழுச்சி– வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கருடன்விடுதூது – வல்லிபுரத் திருவந்தாதி 1981) என்னும் புலவர்கள் பக்திப்பனுவல்கள் பாடியுள்ளனர். இவற்றை விடப் பலருடைய தனிப்பாடல்களுமுண்டு. எனினும் வெளியான நூல்களிற் பல இன்று கிடைத்தற்கரிதாய் விட்டன. வல்லிபுரச் சிறப்பைப் பேசும் பாடல்களிற் பாவம் நிறைந்த பகுதிகளைக் கீழே காணலாம்.

"மணிவாரிதி வளை வல்லிபுரத்தளி, வல்லிபுரத்தளிவதி நாராயணா, பையரவாடும்பதி வல்லிபுரா, தொண்டருறை வல்லிபுரம், வல்லிபுரத்தளியன், பண்ணைசூழ்ந்திலங்கு வல்லிபுரா, வாக்கமை வண்மையர் வண்கையாளர் பொருந்திய வல்லிபுரத்த, வாவி கூபமிகு வல்லிபுரத்தாய், உவரியினறற்றிரை வல்லிபுரா, வேவுயர்பணில மூது மிளிர் வல்லிபுரத்தாய், தராசுநேர் திறத்தர் வாழ்க்கை தங்கு வல்லிபுரா, சிற்றிடைத் திருவாழ் வல்லிபுரத்து வாழ்வே, பாவலர்

துதிக்கும் வல்லிபுரப்பதிப் பகவா, வல்லிபுர மாயவரே ஆடீரூஞ்சல், வல்லிபுரம் ஆழ்வாரே பள்ளியெழுந்தருளாயே, வைகுந்த வாசனே, கோவிந்தராசனே, வல்லிபுரம்வாழ் மாயனே, வல்லிபுரநகர்வாச, வல்லிநிகர் இடைவனச வல்லிமகிழ் நேயமாலே.''

இசைத்தமிழிலே தலமகிமை போற்றப்படுவதுபோல இயற்றமிழா சிரியர்களும் வல்லிபுரத்தின் மகிமையைத் தமது பேனாமுனையில் பின் வருமாறு தீட்டியிருக்கிறார்கள்.

''சேணுயர்ந் திலங்கும் கோணமா மலையும், ஓதிச் சுரனமர் கேதீச்சரமும் முதிர்சீர் வாய்ந்த கதிரைமாமலையும் எனுந்தளியோங்கியது இலங்கைத் தீவு. இத்தீவின் சிரம் அணிமகுடமாய்த் திகழ்வது யாழ்ப்பாணம். இது யாழ் வாசித்துப் பாணன் பரிசாகப் பெற்ற காரணத்தால் ஏற்பட்ட நாமம் போலும். இப்பேர்ப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்லூர் களிலும் வல்லிபுரமும் ஒன்றாகும். வல்லிபுரத்திற் பிரசித்தி பெற்ற நாராயணன் கோவிலொன்றுண்டு. நாராயணனுக்கு வல்லிபுரம் என்ற திருப்பெயர் கிடையாது. ஆகவே அக்கோவில் ஊர்ப் பெயராலேயே வல்லிபுரக் கோயிலென்று அழைக்கப்படுகிறது.''

## தசாவதாரங்களிலொரு மச்சாவதாரம்

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடல் புரிந்து வையத்தை வாழவைக்கின்ற இறைவன் தேவையானபோது அவ்வுயிர்களின் இன் னல் போக்கி, இன்பம் ஊட்டி ஏற்றமளிப்பதற்காக அவதாரம் செய்வா னென்பது சமயந்தரும் உண்மை. அவதாரம் என்பதற்கு இறங்குகை என்பது பொருள். இறைவன் தன்முடிவிலாற்றலுடைமையின் உயர் நிலையிலிருந்து, உலகில் இறங்கிவந்து, மக்களோடு மக்களாகக் கலந்து நிற்கின்ற வகையில் ஒன்றிநின்று, அவர்தம் குறைமுடித்து நிறைவு காண்பான் என்பதே அவதாரத்தினடிப்படைப் பலனாகும். அந்தவகையில் திருமால் பத்து அவதாரங்களுக்கு உடையவரென்பர். அவ்வவதாரங் களிலொன்று மச்சாவதாரம். உள்ளது சிறக்கும் தத்துவத்தின் ஆரம்ப தசை அது. திருமாலின் அவதாரச்சிறப்பு டார்வினின் கூர்தலறத் தத்து வத்துக்கு இயைந்ததென்பதை விஞ்ஞானிகளும், மெய்ஞ்ஞானிகளும் வழி மொழிந்துள்ளனர். திருமாலின் அவதாரங்கள் பத்துமே மனிதனின் பரிணாமவளர்ச்சியை (Evolution of Man) தத்துவத்தை விளக்குவ தாக புரொபஸர் Haldane கண்டுபிடித்துக் கூறியிருக்கிறாராம். முதலில் உலகம் நீரால் சூழப்பட்டு அங்கு நீர்வாழ் உயிர்களே இருந்ததை விளக்க, திருமாலின் மச்சாவதாரம். அதன்பின் நீரிலும் நிலத்திலும் உயிரினம் தோன்றியதற்கு அறிகுறியாக கூர்மாவதாரம். அடுத்து நிலத்தில் மட்டும் வாழும் உயிரினமாக வராக அவதாரம். பின் மிருக

மும் மனிதனும் கலந்த நரசிம்மாவதாரம். அதைத்தொடர்ந்து சிறிய வடிவில் மனிதன் உருவாகியதை உணர்த்தும் வாமனவதாரம். அதன் பின்னர் முரட்டுவீரம் கொண்ட பரசுராமாவதாரம். அதன் பரிணாமபண் பின் வளர்ச்சியாக ராமாவதாரம். பின் பண்பும் உழைப்பும் கொண்ட தாகக் கலப்பை ஏந்திய பலராமாவதாரம். அதன் பின் விவேகத்தின் சிகரமாக கிருஷ்ணவதாரம். இப்படி மனிதனின் பரிணாம வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவது போல் அமைந்திருக்கிறதாம் திருமாலின் பத்து அவதாரங்களும். —ஞானபூமி, 1982 தை, பக்கம் 48.

''நிலையிட மெங்குமின்றி நெடுவெள்ளம்
உம்பர் வளநாடு மூடஇமையோர்
'தலையிட மற்றெமக்கோர் சரணில்லை'
என்ன அரணாவ னென்னுமருளால்
அலைகடல் நீர்குழம்ப அகடாட
ஓடியகல் வானுரிஞ்ச, முதுகில்
மலைகளைமீது கொண்டுவரு மீனை
மாலைமறவா திறைஞ்சென் மனனே.'' —பெரிய திருமொழி

அலகிலா விளையாட்டுடை அவ்வாண்டவன் எல்லையற்ற விளையா டல்களைச் செய்பவன். அவ் விளையாட்டின் பொருளும், விளக்க மும் அவனுக்கேயன்றி, அவன்கண்ணாகக் காட்ட உணரும் ஒருசிலருக்கே விளங்கும். தன் உயிர்களாகிய நன்மக்கள் உய்யும் பொருட்டு ஆண் டவன் செய்யுஞ் சில செயல்கள் வெறுக்கத்தக்கனவாகவும் இருக்கும் என்பர் அடியவர். அடித்து அடித்து அணைக்கு மருளானவர். ''அடித்து அடித்து அக்காரமுந் தீற்றிய அற்புத மறியேனே'' என்கிறார் மணிவாசகர். அந்தநிலையில் தம்மைமறந்து தருக்கிவாழும் உயிர்கள் நிலை கெடும்போது நேரில்வந்து அபயம் கொடுப்பவனும் அவனே. இந்த ஆக் கத்தினடிப்படையிலே கண்ணன் காட்டிய விளையாடல்கள் பல. அவற்று ளொன்று வல்லிபுரம் என்னும் மகா க்ஷேத்திரத்தில் குடிகொண்ட தாமோதரன் வங்கக் கடலிலே மீன்வடிவமாகிய அற்புதக் கோலம். பண்டொருபோது மற்சமாய் மகவுமாய் இலவல்லியன் நாகசாபம் தீர்த்த மாயனின் வரலாற்றைச் சூதமாமுனிவர் நைமிசாரிணியத்து முனிவர்கட்குச் சொன்ன கதையே வல்லிபுரத்தின் ஆதிவரலாறு ஆகும்.

''கொடியெனு மிடைப்பாஞ் சாலி கோவிந்தா வென்று கூவப்
படியினி லவடன் மானம் பங்க மாகா வண்ணங்
கடிதினி லவண்முன் வந்து காத்தவா லவல்லி யின்சீர்
மடியின்மேல் மகவாய் வந்து வளர்வல்லி புரத்தாய் போற்றி.''
— ஸ்ரீவல்லிபுரமாயன் போற்றி விருத்தம்

''பெரியநல் லவல்லிமடி மற்சமாய் மகவுமாய்
பெருகுசாபந் தவிர்த்தாய் ;
பேதையேன் இடர்களைந் துயர்வுறும் ஒருவரம்
பாலித்தல் நிற்கருமையோ?''
— வல்லிபுர அந்தாதிப் பதிகம்

## வேதம் வகுத்த வியாசர் பரம்பரையில்

வியாச முனிவர் திருமாலின் அவதாரம். வேதத்தை ஓதாதுணர்ந்து நால்வகையாய் வகுத்தார்; எனவே வேதவியாசரானார். இவர் பிரம தேவரின் வழித்தோன்றலெனப்படும்; பராசரர் மற்சகந்தியைச் சேர்ந்த போது அவள் வயிற்றிலவதரித்தார். இக் குழந்தை வதரிகாவன மெனும் வனத்தில் தங்கியிருந்து வாதராயணன் என்னும் பெயர் பெற்றான். வேதங்களை உணர்ந்து அறிவாளிகள் பெறும்படி நான்கு துறைகளாக வகுத்தருளினார். எனவே வியாதன் என்றோர் பெயர் பெற்றார். இவர் சனற்குமாரரிடம் பதினெண் வகையான புராணங் களை குரு சிஷ்ய பாரம்பரியத்திற் கேட்டு மனதில் கொண்டார். வியாசர் சதுர்மறைகளையும் முறையே பயிலர், வைசம்பாயினர், சைமினி, சுமந்து முதலிய முனிவர்க்கு ஓதினார். பதினெண்புராணங்களையும் சூத முனிவர்க்குக் கற்றுக் கொடுத்தருளினார். அழகு வாய்ந்த துளசி மாலை யணிந்த கண்ணபிரான் அம்சமாகிய வியாசமுனிவர் அருளால்தான் வேதங்களும் புராணங்களும் பூமியில் நிலைபெற்று வருகின்றன என்று சூதர் நைமிசாரணியத்து முனிவர்க்குக் கூறியதாக வரலாறு பேசுகிறது. பதினெண்புராணங்களில் காருடபுராணம், நாரதபுராணம், விஷ்டு புராணம், பாகவதபுராணம் நான்கும் விஷ்ணுமூர்த்திக்குரியன. இவ் வாறு வழங்கும் சந்தானமரபிலே சூதமாமுனிவர் கோமதியாற்றங் கரையிலே நைமிசாரிணியத்து முனிவர்களுக்குச் சொன்ன ஸ்காந்த புராணத்திலுள்ள தட்சிணகைலாய மான்மியத்தில் வல்லிபுரவைபவம் "ஸ்வர்ணாலயம் வல்லீபுரம் விஷ்ணோ க்ஷேத்திரத்துவ வயந்ததா" என்று ஆரம்பமாகிறது. ஸ்வர்ணாலயம் என்பது பொன்னாலை (புன்னாலை) வரதராஜப் பெருமாள் கோவிலாகும். பொன்னாலைக் கடலிலே ஆமை யாய் அவதாரம் செய்தான் அந்த ஆதிகேசவப் பெருமாள். வல்லீபுரம் என்பது வல்லிபுரக் கோயிலாகும்.

சந்தன மரங்களகில் சாதிபல
ஓதிய தருக்கள் நிறைய
சுந்தர நெடுங்கடல் வளைந்திட
முகுந்தனுறை தொல்பதிதாம்
பந்தணி முலைச்சியர்கள் பாடிநடமாட
இமையோர்கள் பரவ
இந்திரன் வணங்கிட இருப்பது
பொன்னாலயம் என்னும் பதியே.

சங்கத் திருக்குறி சாரங்க பாணிதன் சக்கரநற்
துங்கக் குறியும் தொழுதணிந் தாழ்வார்க் குரித்துடைய
பொங்குசீர் முன்னெழுத் தாவும் பொறித்தேதாம் ஆவளர்த்துச்
சிங்கைநகர்ச் செல்வர் சேவையும் செய்தார் சிறப்புறவே.

## லவல்லி யென்னும் கன்னி மடியில் வீழ்ந்த மீன் குழந்தையான விந்தை

முன்னொரு காலத்திலே இரணியன் என்னும் அசுரனால் வருத்தப் பட்ட தேவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகத் தரிக்கப்பட்ட கங்கணங்களை, அந்தத் துட்டன் தன்னுடைய தூதர்களை ஏவி தேவர்களின் இரட்சை களைக் கடலில் எறிவித்தான். அப்பொழுது சமுத்திரத்தில் வீசிய கங் கணங்களை மீண்டும் தாம் பெறவேண்டி சிவபிரானிடம் முறை யிட்டார்கள். பரமசிவனும் எல்லாம்வல்ல விஷ்ணுமூர்த்தியைத் திரு நோக்கம் செய்து, தேவர்களின் கங்கணங்களை எடுத்துக் கொடுக்கும் படி வேண்டினார். அன்பர்களைக் காப்பவரும், பிரத்தியட்சமான கடவுளும், இலக்குமி காந்தனுமான விஷ்ணுமூர்த்தியானவர் மற்ச வடிவங் கொண்டு, எறியப்பட்ட கங்கணங்களை, கடலினின்றும் எடுத்து வல்லிபுரம் என்னும் நகரின் கடற்கரையில் வைத்துவிட்டுக் கடலிலே மறைந்தருளினார்.

பின்னொருநாள் திருமாலானவர் வல்லிபுரமென்னும் திருப்பதிக்கு அண்மையிலுள்ள கடலிலே புகுந்து பெரிய திருவிளையாடல்கள் செய் தார். நீர்வாணர்களின் வலையுட் புகுந்து மிக்க கோலாகலத்துவனி செய்தார். இதனைக் கண்ட பரதவர் மிக்க கோபம் அடைந்து, உலகம் யாவையும் காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடும், உலகநாயக ராகிய மீனைப் பிடிப்பதற்கு முயன்றார்கள். இந்த அற்புதமான திரு விளையாடலைக் காண்பதற்காக அவ்விடத்துக்கு வந்து நிறைந்தனர், அவ்வூரவர்களும், அயற்கிராம மக்களும். அப்பொழுது விஷ்ணுவி னவதாரமான அந்த மீன் குதித்து விளையாடி வல்லிபுரத்திலே சிவபிரா னருளாற் பிறந்த லவல்லியென்னும் பெயருடைய கன்னியின் மடியிலே விழுந்தது. அப்பொழுது மீனுருவைத் தரித்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யானவர் மானுடப்பிள்ளையாகத் தோன்றி இலவல்லியின் மடியிற் தவழ்ந்தார். அப்பொழுது அப்பெண் மிக்க குதூகலத்துடன் குழந்தை யைத் தன்கரங்களிற்றூங்கித் தாலாட்டினாள். துளசிமாலையோடும், பச்சைநிறத்தோடும் தோற்றமளித்த அப்பெருமானைத் தரிசிக்க ஜன சமுத்திரமே திரண்டது. ''அறுகின் நுனிபோலும் பச்சைநிறமுடைய வரும், பீதாம்பரத்தையுடையவரும், துளசிமாலையைத் தரித்தவரும், இடக்கரத்தில் சக்கரத்தையும், வலதுகரத்தில் பாஞ்சசன்யத்தையும்'' உடைய கடவுளைத் தரிசித்த லவல்லி பெரிதும் ஆச்சரியமடைந்தாள். வந்தவர்களெல்லோரும் ''மற்சரூபியாகிய தேவரீருக்கு வணக்கம், ஆமையுருவான தேவரீருக்கு வணக்கம், தேவர்களுக்குச் சுகத்தை உதவு கிற தேவரீருக்கு வணக்கம், பரசுராம அவதாரமான தேவரீருக்கு வணக்கம், பலராமரூபமான தேவரீருக்கு வணக்கம், பன்றியுருவான தேவரீருக்கு வணக்கம், வாமனரூபியான தேவரீருக்கு வணக்கம்,

கிருஷ்ண அவதாரமான தேவரீருக்கு வணக்கம், நரசிங்கரூபமான தேவரீருக்கு வணக்கம், கற்கிவடிவாகும் வாசுதேவனுக்கு வணக்கம், என் றெல்லாம் பணிந்து போற்றி, தசாவதாரத்தையுடையவரும், வல்லிபுரத் திலே எழுந்தருளுகிறவருமாகிய தேவரீருக்கு வணக்கம் என்று துதித்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். அப்பொழுது விஷ்ணு மீண்டும் மற்சமாகி ஆழியுள் மாயமாய் மறைந்தார். இதைக்கண்ட மக்கள் எம்பெருமானை வேண்டித் தவம்புரிந்தார்கள். அங்குள்ளவர்களின் உறைப்பான தவத்துக் கிரங்கி மீண்டும் கண்ணனுனர். குழந்தையையும் லவல்லியையும் ஒரு பல்லக்கிலே வைத்து, வல்லிபுரநகரைநோக்கி நடந்தனர் பரதவர். கோவிந்த நாமசங்கீர்த்தனம் எங்கும் முழங்க பக்தர்கள் தொடர்ந் தார்கள். பல்லக்கை மணல் வெளியிலே சுமந்து சென்ற களைப்பினுல் ஒரு மரநிழலிலே இறக்கிவைத்து, அருகேயிருந்த பூவலொன்றில் தாக சாந்தி செய்து களைப்பாறினுர்கள். மீனவர்கள் மீண்டும் வந்து பல்லக்கைத் தூக்க முயன்றபோது, பல்லக்கு நிலைபெயராதபடி இருந்தது. இந்த அற்புதத்தில் லயித்து நின்ருர்கள் அங்கே வந்தவர்கள். அப்பொழுது குழந்தை பிராமணவடிவத்திலே தோன்றி, ஒரு சக்கராயுதத்தை அவ் வூர்ப் பக்தரொருவரிடம் கொடுத்து, இதை வைத்துப் பூஜியுங்களென்று அருளி மறைந்தார். அச்சக்கரத்தை அவ்வூரவர்கள் தமது சொந்தக் காணியில் பிரதிட்டை செய்து வழிபட்டனர். இவ்வாறு வழிபாடியற்றி வருங்கால், அயலூரவர்களும் எம் பெருமானின் அற்புதத்தைக் கண்டு தமது வழிபடு தெய்வமாகக் கொண்டனர்.

சூதமாமுனிவரிடமிருந்து வல்லிபுரமான்மியத்தைக் கேட்ட நைமி சாரிணியத்து முனிவர்கள் எல்லா சாஸ்திரங்களின் பொருண்மையை உணர்ந்தவரே! விஷ்ணு லவல்லியின் மடியில் மற்சாவதாரங் கொண்டு ஏன் தவழ்ந்தார்? அந்த வைபவத்தையும் எமக்குச் சொல்லியருள வேண்டும் என வேண்டினர். அதற்கு விளக்கம் தந்த முனிவர், ''முன் ஞெரு காலத்திலே லவல்லியென்னும் பெண்ணெருத்தி இருந்ததாகவும், அவள் மக்கட் பேறின்றி மலட்டுத்தன்மையால் மிகவும் மனங்கவன்று வாடியதாயும் கூறினர். இந்தப் பெண்ணனவள் மனமுடைந்து அப் பொழுதிருந்த தபோநிதியாகிய பிருகுமுனிவரை அடைந்து விளக்கம் கேட்டாள். நீ முன் ஜென்மத்திலே நாகபாம்பொன்றைக் கொன்ருய், அப்பாம்பின் சாபத்தால் உனக்கு இப்பிறவியில் மலட்டுத்தன்மை வந்தது. இந்தச் சாபம் எல்லாப்பிறவியிலும் உன்னைத் தொடருமென் ருர் பிருகு. இச்சாபத்தை நீக்கப் பரமசிவன் ஒருவராலேயே முடியும், வேறெவராலும் முடியாதென்றும், சிவனைவேண்டித் தவஞ்செய்ய வேண்டுமெனவும் ஆஞ்ஞாபித்தார். மிக்க கடுந்தவஞ்செய்த இலவல்லி யின் முன்னே சிவபிரான் தோன்றி நீவிரும்பும் வரம் யாது என்று கேட்டார். கொடியேனுகிய யான் நாகசாபத்தினுல் புத்திரப் பேறற்றவ ளாயினேன். அச்சாபந்தீர அருளவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். நீ மறுபிறவியில் வல்லிபுரம் என்னும் தொல்பதியிலே பிறப்பாய். அங்கு

தேவகாரியத்தை முடித்தற் பொருட்டு, பத்மநாபன் மீன்வடிவங் கொண்டு உன்மடியில் குழந்தை வடிவமுடையவராவர். அவருடைய திருவடிவத்தைத் தீண்டியபோதே உனது நாகசாபம் தீரும். பின்னர் நீ இம்மையிலே புத்திரர்களோடும், சம்பத்துகளோடும் வாழ்ந் திருப்பாயென்று தேவதேவராகிய சிவபிரான் திருவாய் மலர்ந்து மறைந் தருளினர் என்று கூறினர். இஃதோடு தொடர்புடைய கர்ணபரம் பரைக் கதையு மொன்று வல்லிபுரத்திலே வழங்கி வருகிறது.

வல்லிபுரத்துக்கு நேர்கிழக்கேயுள்ள வங்காளக் கடலில் பரதவர் மீன் பிடிக்கும்போது அழகான குழந்தையொன்று கடலில் திரு விளையாடல் புரிந்தது. அக்குழந்தை வலைகளை அறுத்தும் நாவாய்களை இடைமறித்தும் புரிந்த திருவிளையாடல்கள் அநந்தம். அக்குழந்தையை வசப்படுத்திப் பிடிப்பதற்கு அப்பரதவர் எடுத்த முயற்சிக ளெல்லாம் வியர்த்தமாயின. இரண்டு, மூன்று தினங்களாக நடந்த இவ்வற்புதக் காட்சியைக் காண ஊரே திரண்டது. ஒருநாள் இரவு வல்லிபுரத்தில் வாழ்ந்த வல்லிநாச்சனென்னும் மூதாட்டிக்குக் கன விலே பகவான் தோன்றி, பல திவ்ய சம்பவங்களையும் மனத்திரையிலே காட்டி, குறித்த அற்புதம் நிகழும் வல்லிபுரக் கடற்கரைக்கு, அடுத்த தினம் வருமாறு பணித்தார். எம்பெருமான் கட்டளைப்படி மறுநாட் காலை அம்மையார் குறிப்பிட்ட இடத்துக்கு வந்தார். வல்லிநாச்சன் கரை யோரம் வந்து, எட்டெழுத்து மந்திரத்தை மனதில் எண்ணி, "கன்று கட்டிப் பால் கறந்தேனேயன்றி வேறொன்றையும் அறியேன்; பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமனே" என்று கூறித் தன் முன் றானையை நீட்டினள். குழந்தை தவழ்ந்து வந்து அவளின் மடியிலேறிக் கொண்டது. எல்லையில்லா மகிழ்ச்சி கொண்ட நீர்வாணர், குழந்தை யையும் அன்னையையும் பல்லக்கிலே தாங்கி, அம்மையாருடைய இல்ல மிருந்த வல்லிபுரநகரைநாடி விரைந்தனர். புதையும் மணலில் நெடுந் தூரம் நடந்த களைப்பினால், ஓரிடத்திற் பல்லக்கை இறக்கிவைத்து விட்டு (கொன்றைமர நீழலில் என்பது கதை) அருகே இருந்த கிணற் றில் தாகசாந்தி செய்தனர். மீண்டும் வந்து பல்லக்கைத் தூக்க முயன்றபோது, அசைக்கமுடியாமல் இருந்ததுமட்டுமன்றி சக்கரவடி விலே கண்ணன் காட்சியும் கொடுத்தான். எனவே யங்கேயிருந்த கொன்றைமர நீழலில் இறைவனுக்குப் பந்தலிட்டுக் கோயிலமைத்தனர். வல்லிநாச்சனின் வழித்தோன்றல்களே கோயிற்பூசையையும், நித்திய நைமித்தியங்களையும் கவனித்ததோடு தமக்குச் சொந்தமான ஆலய மமைந்த காணியையும் சுற்றுடலையும் நிலபுலங்களையும் தர்மசாதனஞ் செய்து நிபந்தங்களையும் எழுதினர்கள். வல்லிபுரம் என்னும் ஊரில், வல்லிபுரம் என்னும் காணியில், புத்தடி சங்களையடி யென்னும் இடத் திலேதான் கோயிலமைத்தார்கள் என ஆவணங்கள் சான்று பகர்கின்றன.

தாமோதரர் (தாமர் எனவுமழைப்பது வழக்கம்), நினைவர், வேலர், சேதர் என்போர் இவ்வாலயத்தை உருவாக்கிய, பெருமைக்குரியவ ராவார். தாமரும் நினைவரும் அக்காலத்தில் உடையாராகவுமிருந்தனர். எனவே யவர்கள் வீடு தாமஉடையார் வளவு, நினைவாத்தை உடையார்

வளவு என இன்றுமழைக்கப்படுகின்றன. இவர்கள் பூஜாகைங்கரியங் களைச் செய்துவரும்போது இருபெரும் அற்புதங்கள் நிகழ்ந்தன.

ஈதேதான் என்றும் இதயக் கருத்தாய் இயங்கியருள்
நாதநன் நாயகர் தாம உடையார்சீர் வேலரொடு
சேதர் நினைவாத்தை செல்வர் இவரெல்லாம் நீதகல
மாதவன் பூசை மகிழ்ந்தினி தாற்றினர் மாண்புறவே.

## இரு பெரும் அற்புதங்கள்

தாயப் பதிகள் தலைசிறந் தெங்கெங்கும்
மாயத்தி னுல்மன்னி வீற்றிருந் தானுறை
தேயத் தமரர் திருக்கடித் தானத்துள்
ஆயர்க் கதிபதி அற்புதன் தானே. —திவ்யப்பிரபந்தம் 3511

வல்லிபுரக் கோவிலில் தினப்பாவிப்புக்கான, பூசைக்குரிய தீபம், மணி, தட்டுமுட்டுச்சாமான்கள் என்பனவற்றை ஆதிகாலத்திற் பூசகர் கள் வீட்டிற்குக் கொண்டுசென்று பெட்டகமொன்றிற் பூட்டிவைப்பது பெருவழக்கமாகும். அவ்வாறு பெட்டகத்திற் பூட்டி வைக்கப்பட்ட பூசைக்கான சாதனங்களை எடுப்பதற்காகக் கள்வர் ஒருநாள் முயன்ற போது, பெட்டகத்தை உடைத்தார்கள். அவ்வாறு உடைத்துக் கொண்டு பொருட்களை எடுக்கும்போது பாம்பொன்று சீறியெழுந் தது. இதைக்கண்டு பீதியடைந்து ஓடிவிட்டனர். இப்பெட்டகம் இன்றுமவர்களின் சந்ததியாராற் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவ் வாறே தாமோதரர் என்பவர் ஒருதினம் பூசையை முடித்து வந்து வழமைபோல கவடுகிராய் என்னும் வயல் வெளியில் உழுதுகொண் டிருந்தார். மேற்கு ஊரவர் ஒருவர் பலாப்பழத்துடன் கோவிலுக்குத் தன் நேர்த்தியை நிறைவேற்றப் போனார். கோவிலுக்குச் சென்ற அப் பக்தர் கோவிலிலே பூசகரைக் காணுமையால், மீண்டுமவர் வீட்டைத் தேடி வந்துகொண்டிருந்தார். வழியிலே தாமரைக்குளக் கரையிலே உழுதுகொண்டு நின்ற பூஜகர் (தாமஉடையார்) அவரை அழைத்தபோது, அவ்வடியார் விபரத்தைச் சொன்னதும், அருகே இருந்த தாமரைத் தடாகக்கரையிலே, பலாப்பழத்தை நைவேத்தியம் செய்து, பாதியை எடுத்துக்கொண்டு மீதியை அவரிடம் கொடுத்து விட்டார். அந்தத் திருமாலடியவர் மிக்க மனவேதனையுடன் வீடுவந்து சேர்ந்தார். இரவு நித்திரை செய்யும்போது வல்லிபுரமாயவன் கனவில் வந்து ''உன்னுடைய பலாப்பழம் மிகவும் இனிமையாய் இருந்தது. அடுத்தமுறையும் ஒன்று கொண்டுவா'' எனப் பணித்தருள அவ்வடியார் இரவோடிரவாக மரத்திலிருந்த பழமொன்றை வெட்டிக்கொண்டு கால்நடையாக ஆழ்வார் சுவாமி கோவிலை யடைந்து. வைகறைப்

பொழுதில் பூசகரிடம் ஒப்படைத்து, நடந்த கனவின் பெருமையையும் கூறி ஆனந்தமடைந்தார். இந்த மேற்கு ஊரவர் அனுபவத்தைப்போலச் சுமார் 50 ஆண்டுகட்கு முன்னும் ஓர் சம்பவம் நடைபெற்றது. தாமருடைய மரபிலே வந்தவர் வல்லிபுர உபாத்தியாயர். இவருடைய பிறந்தமண்ணும் வல்லிபுரமே. அவருடைய வாழைத் தோட்டத்திலே கப்பல்வாழைக்குலையொன்றை ஆழ்வார்சுவாமிக்கென்றே நேர்ந்து விட்டிருந்தார். ஆனால் அதை மறந்துபோனார். அவருடைய வீட்டுக் கிணற்றிலே ஓர் குலநாகம் புகுந்து படமெடுத்து வெகு அழகாக ஆடிக் கொண்டிருந்தது. அவருடைய சகோதரி இலட்சுமிப்பிள்ளையவர்கள் தண்ணீரள்ளச் சென்றபோது இக்காட்சியைக் கண்டு என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கும்போது, அவ்வழி யாலே சென்ற பண்டாரம் வேலுப்பிள்ளையை அழைத்து விடயத்தைக் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அவர் ஓர் புதுப்பானையை வேண்டிக் கயிற்றிலே தொடுத்துக் கிணற்றிலேவிட்டு, உன்னுடைய நேர்த்தி பூர்த்தியாகும், உள்ளேபோ என்று வேண்டினார். அவ்வளவுதான், அமைதியாய் அந்த நாகம் பானையுட் சென்று வளைந்து படுத்துக் கொண்டது. வெளியே எடுத்து புதுச் சட்டியாலே மூடித் தோளிலே சுமந்து சென்று கோவிலடியில் விட்டார். குறிப்பிட்டபடி கப்பல் வாழைப்பழம் பழுத்ததும் வல்லிபுர வாத்தியார் தனது நேர்த்தியை நிறைவேற்றியும் கொண்டார். இவ்வண்ணம் அற்புதம் நிறைந்த ஆதி கேசவப் பெருமாளின் பூசகர்களாக இருந்தவர்களில் ஒருவர் நினைவர், மற்றவர் தாமர். இவர்களிருவரும் பெருநிலக் கிழாராயிருந்தபடியால், தமது சொத்துக்களிற் பெரும்பாகத்தைத் தர்மசாதனஞ்செய்து, கோவி லமைந்த நிலத்தையும் ஆழ்வார் பெயரிலே எழுதி கோவில் பூஜகர் களாயும் வண்ணக்கர்களாயும் இருந்து கோவில் நிர்வாகத்தை மேற் கொண்டனர். பிற்காலத்தில் பண்டாரிகளையும், பிராமண அர்ச்சகர் களையும் நியமித்த செய்திகளை அவர்களெழுதிய ஆவணங்கள் மூலம் அறியக்கூடியதாயிருக்கிறது. இவர்களின் முன்னோரில் வேலர், சேதர் என்போர் தந்தையும் தனையனுமாவர். இவர்களுடைய காலங்களில் கோவில் ஆதிமூலத் திருப்பணி நிரந்தர வேலைப்பாட்டுடன் நிறை வேற்றப்பட்டன. அக்காலத்தில் விஷ்ணு கோவிலென்ற முறையில் விபூதி வழங்குவது இல்லையெனவும் அறியப்படுகிறது. விபூதி இருக்கும். அவரவர் எடுத்துப் பூசிக்கொள்வார்கள். விபூதிவழங்கும் முறை கூடப் பிற்காலத்திலேற்பட்டதே. தென் இந்தியாவில் வல்லவாழ் என்னும் திருவெள்ளாவில் திருநீறு பிரசாதமாக வழங்கப்படுகிறது. திருமாலும் திருநீறு தரித்துக்கொண்டிருக்கிறார் என்பதை நம்மாழ்வார் பாசுரத்தால் காணலாம்.

> கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
> பெரியகோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான்றன்னை
> உரியசொல்லால் இசைமாலைகள் ஏத்திஉள்ளப் பெற்றேற்கு
> அரியதுண்டோ ; எனக் கின்றுதொட்டும் இனிஎன்றுமே.

சைவமக்களின் வணக்கத்துக்குரிய இந்தத் தேவஸ்தானத்தில் விபூதி யணிந்து நாமமிடுவது வழக்கமாகும். வரலாற்றுப் பெருமை கொண்ட

இவ்வாலயம் பற்றிய சாசனங்களிலும், அத்தாட்சிகளிலும், கோவிற் பணியாளருக்குக் கொடுக்கப்பட்ட உரித்துக்களிலும் இவ்வாலயத்தின் பெயர், ''வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில்'' என்றே குறிக்கப் பட்டுள்ளது. சிறும் சிறப்புமுள்ள ஆலயச் சுற்றுடல் எவர் மனத்துக்கும் நிம்மதியளிக்கும் அருளாட்சி கொண்டதாகும். குடந்தையில் மூலவருக்கு சக்கராழ்வார் என்று பெயர். கம்பர் இராமனை அம்புநாட்டாழ்வான் என்று குறிப்பிடுகிறார்.

தராதலத்தி னுள்ளதமிழ்க் குற்ற மெல்லாம்
அராவுமர மாயிற் றன்றே — இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வான் அடிபணியு மந்தித்தன்

— இராமாயணம் பாலகாண்டம்

(சக்கரவணக்கம்–பிரதீகம், பிரதிமம்–கைகால்களுடன் இருக்கும் உருவம்)

தாம உடையாரும் தக்கநினை வாத்தையெனும்
சேம வுடையாரும் செய்தபணி — யாமதுவும்
எண்ணியே யெம்பெருமான் ஏய்ந்தவுயர் வல்லிபுரம்
நண்ணியுற நாடுகிறேன் நான்.

— ஆழ்வார் கருடன்விடுதூது

## திருநாமச் சிறப்பு

சிவசின்னங்களிலொன்று திருநீறு. ''நீறில்லா நெற்றி பாழ்'' என்பது ஔவைவாக்கு. அருநோய்கள் கெட வெண்ணீறணிந்த சைவ சமயிகள் பசுவின் சாணியை நீறுக்கி அணிவர். பாண்டியனுடைய வெப்பு நோயைத் தீர்த்ததும் திருநீறே. இந்த விபூதியணியும் வழக்கம் வைணவர்களிடமும் இருந்திருக்கிறது ஆதியில். விபூதியென்பது திரு நீறே. வெந்து சாம்பராகிய திருநீற்றை மேலும் எரிக்க முடியாது. விபூதியை உள்ளங்கையில் வேண்டுவதே வழக்கம். உள்ளங்கை–அகங்கை எனவும் வழங்கப்படும். எனவே அகம்–உள்ளம் நீறுகவேண்டுமென்பது தான் இதன் உட்பொருள் ஆகும். சுடலையில் இறைவன் ஆடுகிறான். அவ் வாறே நீறு பூத்த நெஞ்சிலே இறைவன் குடியிருப்பான். காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்களில்லாது தூய்மையான உள்ளங்களிலே இறைவன் நடம்புரிகின்றான். நிலையற்ற உடம்புகூட ஒருநாள் பிடி சாம்பராய் நீறும் என்னும் நிலையாமையை உணர்த்துகிறது விபூதி. பிற்காலத்திலே வைணவர்கள் விபூதிக்குள் மறையாதே யென்று பாடியு மிருக்கிறார்கள். சைவநெறியினர் திருநீறு பூசுவதுபோல, வைணவர்கள் திருமண் சாத்துவது வழக்கம். வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணமென்ற உண்மையை விளக்குகிறது இத்திருமண். வைணவர் களில் வடகலையினர், தென்கலையினர் என இரு பிரிவினர் உண்டு.

வேதாந்த தேசிகரைப் பின்பற்றுவோர் வடகலையினர். குரங்கின் குட்டி தன்தாயைக் கட்டிப்பிடிப்பதுபோல, பக்தன் பகவானின் திருவடிகளைச் சிக்கெனப் பிடிக்கவேண்டுமென்ற கொள்கையுள்ளவர்கள் வடகலை யினர். தமது விடாமுயற்சியால் இறைவனைச் சிக்கெனப் பிடிக்கும் வடகலையினர் நாமத்தைப் புருவமத்தியோடு நிறுத்தி "U" வடிவில் அணிவர். மணவாளமுனி, பிள்ளைலோகாச்சாரியரைப் பின்பற்று வோர் தென்கலையினர். பூனை தன் குட்டிகளைப் பேணுவதுபோல, இறைவனே நம்மை ஆட்கொள்வாரென்ற கருத்துடையவர்கள். இவர் கள் நாமத்தை மூக்கு அடிவரையு மிழுத்து எழுதுவார்கள். இவ்வடை யாளம் இறைவனுடைய திருவடிப்பதிவை நினைவூட்டுகிறது.

ஈழநாட்டில் வேறு எந்த விஷ்ணு ஆலயங்களுக்கு மில்லாத தனிச் சிறப்பு வல்லிபுரக் கோயிலில் உண்டு. மற்றெல்லா இடங்களிலும் சந்தனம் பிரசாதமாக வழங்கப்படும். ஆனுலிங்கே வெண்மையான திருமண் உண்டு. பட்டுமணல் நிறைந்த வல்லிபுரத்திலமைந்த வயல் வெளியொன்று நாமத்தாழ்வு என அழைக்கப்படுகிறது. அதையடுத் துள்ள குருக்கட்டுப்பிள்ளையார் ஆலயத்தின் தென்மேல் பாரிசத்தில் அமைந்த குளமொன்றிலிருந்தே இந்நாமம் எடுக்கப்பட்டது. எனவே அக்குளம் நாமக்குளமென அழைக்கப்படுகிறது. மிகப்பழைய காலத்திலே சுவாமி கனவில் தோன்றி, பூசகர் ஒருவருக்கு நாமமிருக்குமிடத்தைக் காட்டியதாகக் கர்ண பரம்பரைக் கதையுமுண்டு.

## வல்லிபுரக்குறிச்சி

குன்றவர் தமது செம்மல் குறிச்சியிற் றலைமைத் தான
தன்திரு மனையி னூடே சரவண முதல்வன் றன்னை
மன்றலங் குழவி யோடு மரபுளி யுய்த்து வேங்கைப்
பொன்றிக ழதளின் மீது பொலிவுற விருத்தி னானே.

— கந்தபுராணம்

பண்டைக் காலத்தில் குறிஞ்சிநில மக்கள் குடியிருந்த பகுதி குறிச்சி யெனப்பட்டது. "குறிச்சி எங்கள் குறச் சாதி அம்மே" (மீனாட்சியம்மை குறம்) எனக் குருபரரும், குறிஞ்சிநிலத் தலைவரான கண்ணப்பரின் தந்தையை "இருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவன்" என்று சேக்கிழார் கூறுவதும் இதை உருசுப்படுத்துகிறது. பெரியமலைத் தொடரி வடிவாரத்தில் குறிச்சி யென்ற பெயர்கள் பல உள்ளன. ஆழ்வார் குறிச்சி, காருக் குறிச்சி, பாஞ்சாலங் குறிச்சி என்னும் ஊர்ப் பெயர்கள் தமிழகத்தில் இருப்பதும், இடைக் குறிச்சி முதற் குறிச்சி யென்ற வழக்காறு ஈழத்திலிருப்பதும் காண்க. ஆதியிலே குறிச்சி யென்பது குறவர் குடியிருப்பதைக் குறித்ததாயினும் பிற்காலத்தில்

மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கும் அப்பெயர் வழங்கலாயிற்று. இனத்தின் பெயரால் பிராமணக் குறிச்சி, கள்ளக் குறிச்சி என்னும் ஊர்ப் பெயர்கள் அமைந்துமுள்ளன.

வடமறவர் ஆண்ட பகுதி வடமராட்சியென்பர் வரலாற்று விற்பன்னர். மழவராயன்குறிச்சி யென்பது வடமராட்சி மேற்கு என்கின்றது ஈழத் தமிழ் வரலாற்று நூல். வடமராட்சி கிழக்கிலமைந்த ஊர் வல்லிபுரம். இவ்வூர் வல்லிபுரக் குறிச்சி யெனவும் கூறப்படுகிறது, குறிஞ்சித் தெய்வம் குமரன், இவனைப் பாடிய அருணகிரியார் குறிச்சி யின் சிறப்பை இப்படிப் பாடுகிறார்.

"கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முற்றவனே."

குறிச்சியென்பது சிற்றூரைக் குறிக்கும். குறிஞ்சி நிலத்தூர், கிராமம் என்பன ஒரு பொருட் சொற்கள். குறிச்சியென்பது மெய்ஞ்ஞானமலையி லுள்ள அருளூர் எனப் பொருள் கண்டுள்ளார் கிருபானந்தவாரியாரவர் கள். குறிஞ்சியென்ற சொல் மருவிய நிலையில் குறிச்சியாக வழங்கப்படு கிறது. வள்ளிநாச்சியாரைத் திருமணம் செய்யச் சென்ற முருகப் பெருமானை "குறிச்சியிற் தலைமைத்தான தன்திரு மனையினூடே பொன்றிக ழதளின் மீது பொலிவுற விருத்தினனே" என்று கந்த புராண வழக்கிலும் குறிச்சி இடம் பெற்றுள்ளமை சிற்றூரையே குறிக் கின்றது. எனவே வல்லிபுரக்குறிச்சியென்பது வல்லிபுரம் என்னும் ஊரைக் குறிக்கும் தனித்தமிழ்ச் சொல்லாகும். வல்லிபுரத்தின் வடக்கேயும் மேற்கேயும் தென்புலோலி என்னும் ஊரும், தென்மேற்கே துன்னாலையும் அயலூர்களாயமைந்திருந்தாலும் துன்னாலை வடக்கில் வெல்லிக்கந்தோட்டம், வல்லியானந்தம், புளியங்கியான் பிள்ளையார் கோவில்கள் மட்டுமுண்டு. புற்றளைப் பிள்ளையார் கோவில், பெரியத் தாய் சின்னத்தாய் முருவில் பிள்ளையார் கோவில்கள், உபயகதிர்காமம் மந்திகை அம்மன்கோவில் என்னும் ஆலயங்கள் தென்புலோலியிலுண்டு. துன்னாலையென்னும் ஊரொன்று மட்டக்களப்புப் பகுதியிலுமிருக்கிறது. தென்புலோலிக்குப் பச்சிமப்புலவர்கானநக ரென்ற பழம் பெரும் பெயருமுண்டு. வல்லிபுரக்குறிச்சியில் பேர்பெற்ற குருக்கட்டுச் சித்தி விநாயகராலயமும், ஆழ்வார்சுவாமி ஆலயமும் அமைந்துள்ளன. தும் பிக்கை ஆழ்வாரான குருக்கட்டுப்பிள்ளையாருக்கும், வல்லிபுர ஆழ்வா ருக்குமுள்ள பாரம்பரியமான தொடர்பை அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

செல்வத்துட் செல்வமெனச் செப்பா நின்ற
சேயிழையார் கற்புநெறி சிறந்தே யோங்கும்
பல்கலையா கமவேதம் பயின்றோர் வாழும்
பகரரிய திருமனைகள் பல்கி யோங்கும்
செல்லதுதான் உறங்காநில் சோலை தோறும்
சிவபுரா ணங்கள்விரித் தோதி யெங்கும்
கல்விவல்லோர் வாழுகின்ற மூதூர் என்று
கருதுமூர் வல்லிபுரக் குறிச்சி மாதோ.

செங்கயல்கள் தாவுநீர்ப் பழனம் வாவி
செறிமருத நிலமோங்கி மகிழ்ச்சி கூட்டத்
துங்கமார் மயிலாடக் குயில்கள் கூவச்
சொல்லரிய வேதவொலி எங்குந் தேங்க
மங்குலது வருவதனை மரந்தி லேறி
மந்தியுடன் கடுவனெந் நாளும் பார்க்கும்
செங்கணவன் வீற்றிருக்கும் ஆல யத்தைச்
சேர்ந்தவல்லி புரக்குறிச்சி என்னும் மூதூர்.

— *வல்லிபுரமான்மியம்*

## தும்பிக்கை ஆழ்வாரும் சக்கர ஆழ்வாரும்

*"ஆழ்வாரென்பதற்கே நல்ல யௌவனத்தோடு இருக்கும் நங்கை என்று அர்த்தம். ஆயிரம் வருஷங்கட்கு முந்தின பழைய கோயில் கல்வெட்டுகளிலே ஒரு ராஜா ஒரு ஸ்திரீயைக் கல்யாணம் பண்ணிக் கொண்டானென்றால், இன்ன ராஜாவுக்கும், இன்ன ஆழ்வாருக்கும் கல்யாணம் நடந்தது என்று பொறிக்கப்பட்டிருக்கும். அதிலிருந்து நல்ல யௌவனத்தோடு இருக்கும் உத்தமலட்சணமுடைய ஸ்திரீயைக் குறிக்க ஆழ்வாரென்று எழுதியிருக்கிறார்களென்று தெரிகிறது. அதிலிருந்து பகவானைத் தன் நாயகனாகவும் தங்களை ஸ்திரீகளாகவும் பாவித்துப் பக்திபண்ணிப் பலபல பாடல்களை எழுதியிருப்பவர்களுக்கு ஆழ்வார்களென்ற பெயர் வந்துவிட்டது.*

— ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள் — பக்கம் 133

*சைவம் சிவசம்பந்தமானது; வைணவம் விஷ்ணுசம்பந்தமானது. இந்து சமயத்தி னுட்பிரிவுகளான அறுசமயங்களும், பௌத்தம், சமணம் முதலிய சமயங்களும் விநாயகரை வணங்கும் பெருவழக்குடையன.*

எல்லா ஆலயங்களிலும் (விநாயகர் கோவிலேவிட) தென்மேல் திசையில் உள்வீதியில் கணபதிக்குக் கோவிலுண்டு. எழுத்தறிவித்த இறைவனும் கணபதியை வைஷ்ணவர்கள் தும்பிக்கை ஆழ்வாரென அழைப்பர். மிகத் தொன்மையான காலத்திலிருந்து ஆழ்வாராலயத்தில் பூசையாகுமுன்னர் தும்பிக்கையாழ்வாரான குருக்கட்டுச் சித்திவிநாயகருக்குப் பூசை நடை பெறுவதே வழக்கம். இவ்விரு ஆலயங்களுக்குமுள்ள தொடர்பைப் பல இடங்களிற் காணலாம். அவற்றிலொன்று திருநாமம். குருக்கட்டு ஆல யத்தின் தென்மேல் பாரிசத்திலோர் குளமுண்டு. அங்கேதான் நாமம் வெட்டியெடுப்பது வழக்கம். எனவே அக்குளம் நாமக்குளம் என அழைக் கப்படும். அடுத்து இருப்பது தீர்த்தக்குளம். இங்கேதான் ஆதிகாலத்தில் தீர்த்தமாடும் வைபவம் நடைபெற்றுவந்தது. திருமாலுக்குக் கொடி யேற்று வைபவம் நடைபெறுமுன்னே பிள்ளையாருக்குக் கொடியேற்று விழா நடைபெறும். நான்கு நாட்களுக்கு முன்னதாகவே நடைபெறும் இவ்விழாவில் வல்லிபுர சுவாமியின் அர்ச்சகராயிருக்கும் பிரதம ஆச் சாரியர் முக்கியமாய்ப் பங்குபற்றிக் கொடியேற்றி வைப்பார். அன்று சாயந்தரம் ஆழ்வாராலயத்தில் உள்ள விநாயகரை சோடசோபசா ரங்களுடன் கொண்டுவந்து, பிள்ளையார் கோவிலில் வைக்கப்படும். தொடர்ந்து மூன்று நாட்கள் சுவாமிக்கு விழாவெடுத்துப் பூசை நடை பெறும். பூசைசெய்பவர் பெரிய கோவிற் குருக்களாயிருப்பார். இரவு விநாயகப் பெருமான் உள்வீதியில் உலாவருவது வழக்கம். இவ்வாறு மூன்று தினங்கள் நடந்து மூன்றும்நாள் மீண்டும் விநாயகப் பெருமானே ஆழ்வார்சுவாமி கோவிலுக்குக் கொண்டுசென்றபின் அடுத்தநாள் துவஜ ஆரோகணம் நடைபெறும். கொடியேறி எட்டாம் நாள் ஆழ்வார் குருக்கட்டுக்கு எழுந்தருளி உறவாடுவதும் பண்டையபாரம்பரியமாகும். அவ்வூரவர்கள் பூஜகர்களாயிருந்து, கோவிலில் சேவை செய்தபோது முதல் விநாயகருக்குப் பூசைசெய்து பின்னரே திருமாலுக்குப் பூசை செய்தனர். ஆதிகர்த்தாக்களான அவர்கள் கட்டிவைத்த பாரம்பரிய மின்னும் பேணப்படுவதும், போற்றப்படுவதும் உண்டு.

''உத்தம வல்லிபுர நாத ருக்கிங்
    குயர்வுமிகு நித்தியத்தின் தாழ்வு நீங்க
புத்தியொடும் பொருந்துமுயர் விழாமேற் கொண்டார்
    புனிதவருட் கொடியேற்றித் தினங்க ளாறும்
நித்தியமும் உள்வீதி உலா முடித்து
    நிறைவுமிகு வெளிவீதி உலாவும் மேற்கொண்
டொத்துநிகழ் குருக்கட்டுத் தலத்துக் கேகி
    உறவாடும் விழாவெல்லாம் போற்றி உய்வாம்.''

# ஆழியான் ஆழி அருள் வடிவம்

"தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும்." இது பாரதி பாஞ்சாலி சபதத்தில் எடுத்தாளப்பட்டுள்ள முதுமொழி யாகும். "தருமமென்றொரு பொருளுளது" எனக் கந்தபுராணம் பேசு கிறது. "அறஞ்செய விரும்பு" என்பது ஔவைமொழி. இவ்வாறு சமயம் தர்மத்திலேதான் ஆரம்பம். தருமமாவது சிருஷ்டியின் நோக்கமாகிய திரு வருட் குறிப்பு என்கிறார் பண்டிதமணி. தர்மதேவதையைத் தன் வாகன மாகக் கொண்டவனிறைவன். அத்தர்மதேவதையும் கலியுகத்தில் ஒருகாலை ஊன்றி நிற்கிறதுஎன்றால் கலியுகத்தில் கால்பங்கு தர்மந்தான் இருக்கிறது என்ற அர்த்தம் போலும். அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட் டியவன் கண்ணன்; தர்மமேவடிவானவன். சக்கரவர்த்தி திருமகன் அயோத் தியை விட்டு ஆரணியம் புறப்படும்போது தர்மதேவதை பின்நின்று ஏங்கினாள். தர்மனுடன் கடைசிவரை தர்மதேவதை நாய்வடிவிற் தொ டர்ந்தது. அறவாழியென்று அப்பரவஸ்துவுக்கே ஒருபெயர். தர்மம் தலை காக்கும். குருக்ஷேத்திரத்திலே வில்லையூன்றிய கையொடும், விதிர்விதிர்ப் போடும் நின்றான் காண்டீபன். ஆம், நம் இனத்தவர்களையா கொன்று குவிப்பது என்று எண்ணினான் அர்ச்சுனன். இந்த உடம்பல்ல ஆத்மா, இவர்களைக் கொல்வது அறமென்றான் ஒருவன். அந்தப் பார்த்தசாரதி தர்மந் தெரிந்தவன். விஸ்வாமித்திரரின் பின் சென்றார் இராமச்சந்திரப் பிரபு. தாடகையைக் கொல்வது அறனன்று என்று தயங்கினான். இல்லை, அவள் பெண்ணல்ல பேயென்றார் விசுவாமித்திரர். அவர் தர்மந் தெரிந் தவர். அருச்சுனனுக்கும், இராமனுக்கும் தெரிந்த தர்மம் வேறு. விஸ்வா மித்திரருக்கும், கீதாசிரியருக்கும் தெரிந்த தர்மம் வேறு. இறைவன் நீதி வடிவாயும், நீதிநூல்வடிவாயும் நிற்கிறான். இவ்வாறு தர்மமே வடிவான கலியுகத் தெய்வம் கண்ணபிரான். அவனுடைய தர்ம சக்கரம் வணக் கத்துக்குரியது. பாசபாணி விநாயகன்; பினாகபாணி, சூலபாணி, பரசு பாணி சிவன்; சுகபாணி மீனாட்சி; தண்டாயுதபாணி முருகன். அவனை வணங்குபவர் வேலில் அவனை ஆவாகனம்பண்ணி வழிபடுவார்கள். வேலைமாத்திரம் வைத்து, அதனையே முருகனாக வழிபடும் கோவில்களு முண்டு. பழங்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் அத்தகைய கோயி லொன்று இருந்தது. அதை வேற்கோட்டமென்று இளங்கோவடிகள் குறிப் பிடுகிறார். யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதி, நல்லூர் முதலிய இடங் களில் வேலை முருகனாகக்கொண்டு வழிபடுகிறார்கள். சாரங்கபாணி, கோ தண்டபாணி, சக்கரபாணியென்ற திருநாமங்கள் நெடியமாலுக்குண்டு. வேலை வழிபடுவதுபோல ஈழத்தில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் சக் கரத்தை வழிபடுங் கோவில் வல்லிபுரக் கோவிலொன்றே. வைணவ ஆல யங்களிலெல்லாம் தெய்வத்திருக்கோலங்கள் மூலமூர்த்தியாய் அமைந் திருக்க; வல்லிபுரத்தில் மட்டும் சக்கரம் வணக்கத்துக்குரியதாகப் பிர திட்டை செய்திருப்பதைக் கல்கியாசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி

அவர்கள் போற்றிப் புகழ்ந்து கல்கியில் எழுதியுள்ளார். கிழக்கிலிருந்து மேற்குவரை, வடக்கிலிருந்து தெற்குவரை உள்ள தேவாலயங்களில் சக்கரத்தை மூலக் கருவறையில் வைத்து வழிபடும் ஈழத்துத் திருமால் கோவில் ஒன்றேயொன்று உண்டென்றால் அது வல்லிபுரக் கோவிலே. வல்லிபுரத்தின் வரலாறு சிங்கைநகர்க் காலத்தில் மிக்க உன்னத நிலையில் இருந்ததென்பதை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் வாசகர்களுக்குப் பிறிதோர் அத்தியாயத்தில் அறிமுகம் செய்வோம்.

அவனோ டவள்மற் றதுவெனப் பகுத்துநா
மறைகின்ற நிலையெல்லாம் நின்
தவநெறிப் படா தலைவதோர் தன்மைசேர்
தவறென வுணர்ந்தன மவனியிற்
பவநெறி நீங்கிய பக்தர் தமக்கெலாம்
பகுப்பிலை அனைத்துமிங் கொன்றே
சிவனே ரொப்பாய் நான்நிதம் வணங்கும்
சிறீதரனே நின்தாள் போற்றி.

## ஞாயிறு போற்றுதும்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான னாய்எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச மாய்அட்ட மூர்த்தியாகி
—அப்பர்

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
—மணிவாசகர்

அவனே இருசுடர் தீயாகாச மாவா
னவனே புவிபுனல் காற்று வானவனே —காரைக்காலம்மையார்

எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினி
லுண்மை யானென வுணர்த்திய வாறே —பட்டினத்தார்

திரியும் காற்றோ டகல் விசும்பு
திணிந்த மண் கிடந்தகடல்
எரியும் தீயோ டிருசுடர் தெய்வம்
மற்றும் மற்றும் முற்றுமாய்
கரிய மேனியன் செய்ய தாமரைக்
கண்ணன் கண்ணன் விண்ணோரிறை
சுரியும் பல்கருங் குஞ்சி யெங்கள்
சுடர்முடி யண்ணல் தோற்றமே. —நம்மாழ்வார்

பஞ்சபூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய இவைகளை அதிட்டித்து நிற்கும் சக்திகள் பரவஸ்து வடிவங்களாதலால் இவைகளை அட்டமூர்த்தமென ஆழ்வார் களும், நாயன்மார்களும் பாடினர். இவ்வாறு கடவுள் அட்டமூர்த்தமா யிருப்பது எல்லா நிகிலப் பொருள்களிலும் நிற்பவர் தாமே என்பதை ஆன்மாக்களுக்கு உணர்த்தும்பொருட்டேயாகும். சூரியபகவான் அட்ட மூர்த்தங்களில் இடம் பெறுகிறான். இந்துதர்மத்தில் சூரியனை வழிபடும் கோட்பாடொன்று நிலவியேவந்திருக்கிறது. சமயத்துக்கும் சூரியனுக்கு முள்ள தொடர்பை இப் பாடல்கள் காட்டுகின்றன ; ஞாயிறு வழிபாடு தொன்மையானதென்பதை ருசுப்படுத்துகின்றன.

" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் " என்றுதான் இளங்கோவடிகள் தமது கடவுள் வாழ்த்தை ஆரம்பிக்கிறார். வேத காலத்திலிருந்தே சூரியவணக்கம் இருந்துவந்திருக்கிறது. இருள் நீக்கு பவன், பாவங்களைப் போக்குபவன், உலகத்தையும் மனிதனையும் உஜ்ஜீவிக்கச் செய்பவன் என்று பாடுகின்றன வேதங்கள்.

சூரியனை வணங்குபவர்கள் சௌரர்கள் எனப்படுவர். இராமன் இரா வணனை வதம் செய்ய அகத்தியரிடமிருந்து 'ஆதித்தய ஹிருதய' என்னும் மகாமந்திரத்தைக் கற்றதாக வான்மீகி வாக்கு உண்டு. தருமனுக்கு 12 வருடம் உற்றதுணையாய் இருந்தது சூரியபகவான் கொடுத்த அட்சய பாத்திரம் என்பது காவிய வாக்கு. அந்திரபாத நதிக்கரையில் சூரிய னுக்குக் கோயில் கட்டியது கிருஷ்ணன் என்பது இதிகாசம் தரும் செய்தி. தொல்காப்பியத்தில் கந்தழி, கொடிநிலை, வள்ளி போற்றப்படு கிறது. இலக்கியங்களிற் செங்கதிரோனுக்குத் தனியிடமுண்டு. ஒரிஸா மக்கள் சூரியனையே வழிபடுபவர்கள் ஆகும்.

முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர் —நற்றிணை

பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன் —சிலம்பு

கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரித்தால்
என விரிந்த கதிர்கள் —கம்பன்

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு —நக்கீரன்

எனவேதான் கதிரவன் சூரிய நாராயணன் என்று பெயர் பெற்றான். மெய்ப்பொருளுக்குப் பிரம்மம் என்று பெயர். பெரியவைகளிலெல்லாம் பெரியது அதுவென்பது இதன்பொருள். பிரபஞ்சமனைத்தும் தெய்வத்தி லடங்கி விட்டதால் அதைவிடப் பெரியதொன்றில்லை. அவன் கண் கண்ட தெய்வமான சூரியநாராயணனும் இலங்குகிறான். பரமாத்மா

விடமிருந்து வரும் பிரகாசமொன்றே பிரபஞ்சமுழுவதுக்கும் ஒளி தருகிறது. ஆனால் பரமாத்மனையோ அவனுடைய ஒளியையோ நமது ஊனக் கண்ணாற் காணமுடியாது. ஆயின் அப்பரமாத்மாவின் பிரதிநிதியாய் பிரபஞ்சத்தை நடாத்துபவன் சூரியனே. எனவேதான் இந்நாட்களில் ஞாயிறு தனித்துவமுடையதாகிறது. வல்லிபுரக் கோவிலில் ஒவ்வொரு ஞாயிறும் விசேஷதினமாகும். ஆவணித்திங்களில் வரும் ஞாயிறும் மார்கழி மாதத்தில் வரும் ஆதிவாரமும் ; மிகச்சிறப்பான தினங்களாகும். ஆவணி சிங்கசங்கராந்தி—சிங்கம் சூரியனுக்கு உரிய ராசி; அதனால் ஆவணி ஞாயிறு சூரியனுக்குச் சிறந்த தினமாகும். மாதங்களில் நான் மார்கழி என்கின்ற கீதாவாக்குக்கமைய திருமாலுடைய ஆலயத்தில் மார்கழி நீராட்டு வைபவம்—மார்கழித் தோய்ச்சலென்ற பெயருடன், மார்கழி முழுவதும் நடைபெறும். அம்மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையும் சிறந்த வாரமாகக் கொள்ளப்படும். ஆதியிலே சனிக்கிழமையே விசேஷ தினமாகக் கொள்ளப்பட்டது. தாமரும் நினைவரும் பூஜகர்களாய் இருந்தபோது உடையார் பதவியும் வகித்து வந்தார்கள். சனிக்கிழமையில் அரச கருமங்களை ஆற்றவேண்டியிருந்தமையால், ஓய்வுநாளான ஞாயிறு விசேஷ தினமாக்கப்பட்டது. இடைக்காலத்தில் நீதிமன்ற ரிசீவர் நிர்வாகத்தின்கீழ் ஆலயமமைந்திருந்தபோதும் ஞாயிற்றுக்கிழமையே சிறப்பு நாளாகக் கொள்ளப்பட்டது. இன்றும் இந்தப் பாரம்பரியமான வழக்காறே நடைமுறையிலுள்ளது.

கண்ணனின் கையிலுள்ளது சக்கரம். எனவே அவன் சக்கரபாணியெனப் பெயர் தாங்கி உலகைப் புரக்கிறான். கோளங்களெல்லாம் சுழன்றுசுழன்று வருகின்றன. வட்டமிடுவது அவைகளினியல்பு. நட்சத்திரங்கள் பல நேரே ஓடிக்கொண்டிருப்பவைகள் போலத் தென்படுகின்றன. பெருவேகத்துடன் பல்லாயிரமாண்டுகளாகப் பறந்தோடி ஒருவட்டத்தை நிறைவேற்றுகின்றன. ஒன்றுக்கு அப்பாலொன்று; அனந்தம் சக்கரங்கள் ஓயாது சுழல்கின்றன. அவை யாவும் திருமாலின் திருக்கரத்தில் தாங்கப்பெற்றிருக்கின்றன. அண்டங்கள் யாவையும் உண்டுபண்ணுதலும், நிலைபெறச் செய்தலும், பின்பு அவைகளை நீக்குதலும் நாராயணனுடைய நிரந்தரமான செயல்கள். சக்கரம் சுழல்வது போன்று இச் செயல்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. காத்தற்றொழிலைக் குறிப்பது அவன் கையாழி. அதுவே தர்மசக்கரம். இதுவே கோவிலின் மூலமூர்த்தி. அதை அற ஆழி என்று சொல்வர். அறவாழி அந்தணன் அச்சுதன், ஏனென்றால் அவன் தர்மகோப்தா. அறத்தைப் பாதுகாத்துவருகிறான். தர்மசக்கரத்தைக் கொண்டு அனைத்தையும் காக்கிறான். அறம் செய்பவர்களைக் காக்கிறது ; மறம் செய்பவர்களைத் துன்புறுத்துகிறது தர்மசக்கரம்—அதுவே மறக்கருணையுமாம், சக்கரத்துக்கு மறைந்திருந்து எவரும் எதுவும் செய்யமுடியாது. மகாவிஷ்ணுவின் சக்கரத்துக்குட்பட்டு நடப்பவர்கள் நலமெலாம் பெறுவர். அதுவே அறக்கருணையு

மாம். இது அவனுடைய அடையாளம். ஆதியந்தமில்லாத காலமாகச் சுழல்கின்றது. முக்காலமும் ஒரு வட்டமாய் வருகிறது. இதனிருப்பிடம் திருமாலின் கைத்தலம். திருமாலே கால சொரூபம். கால முழுவதையும் நாம் அறிய முடியாது. அக்காரணத்தை முன்னிட்டே அவன் கருமேனியனுய்க் காட்சி தருகிறுன். காலமெனும் ஆழியை நன்கு பயன்படுத்துவது வல்லிபுர நாதன் ஆராதனையாகும்.

'' ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே யுனை என்றுகொல் காண்பதுவே.''

— மணிவாசகர்

'' கோலமே! தாமரைக் கண்ணதோர் அஞ்சன
நீலமே! நின்றெனை தாவியை யீர்க்கின்ற
சீலமே! சென்றுசெல் லாதன முன்னிலாம்
காலமே! உன்னையெந்நாள் கண்டு கொள்வனே.''

— சடகோபர்

வல்லிபுரத்தில் சுத்தோவிக்க வணக்கம் இடைக்காலத்திலிருந்த படியாற்றுன் ஞாயிற்றுக்கிழமை வணக்கம் வந்ததென்று கூறுவாருமுளர். இதில் எவ்வித பொருத்தமும் இல்லை. இதுவரை அப்படியான தடயங்கள் இல்லை.

## மகோற்சவ மகிமையும் மாத மேன்மையும்

தேவர்களுக்கு ஒருநாள் மனிதருக்கு ஒருவருஷம். முதலாறு மாதம் பகற்காலம்; மற்ற ஆறுமாதகாலம் இரவு. மார்கழி மாதம் பிராதக் காலம் போல புரட்டாதி அர்த்தசாமப் பூசைக்கான காலமாகும். இந்தச் சரத்காலம் இயற்கைவனப்புடையது. இம்மாதத்திலேதான் இக்கோவிலில் மகோற்சவம் நடைபெறும். மிகப் பழைய காலத்தில் புரட்டாதிப் பூரணையில் தீர்த்தம் அமையக் கூடியதாகக் கொடியேற்றம் நடைபெறும். ஆதியில் 15 நாட்கள் உற்சவம் நடைபெற்றதைப் பின்வரும் பாடல்களிற் காணலாம்.

'' கன்னியிற் பூரணை நாளீருக
முன்னுமைம் மூன்றென மொழிபெருந் திருவிழாக்
காட்சி கொடுக்குமெய்க் கண்ணனே
கன்னியி லுவா விருகக் கருதுமூ வைந்துநாளு
முன்னிய விழாச்சீர் காட்டு முகுந்தனே போற்றி மாயந்
துன்னிய வுழையா மாரீசன் றனைத் தொலைத்தாய் போற்றி
வன்னிபூ வைகளும் வேதம் வழங்கு வல்லிபுரா போற்றி.''

—மும்மணிமாலை

இவ்வாறு பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெற்று வந்தபின் கடல் தீர்த்தம் விழாவாகச் சேர்க்கப்பட்டதும் 16 உற்சவங்கள் நடைபெற்று வந்தன. இந்தத் தீர்த்தங்களில் பட்டுத் தீர்த்தமே பூரணையில் நடந்ததென்றும், பிற்காலத்திலே தான் கடற்றீர்த்த விழா கொண்டாடப்பட்டதென்றும் தெரிகிறது. எது எப்படியாயினும் இன்று தேர் உற்சவத்துடன் 17 தினங்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. வெண்ணெய், ஹம்சன், வேட்டை, பாம்பு, துகில் முதலிய உற்சவங்கள் கண்ணனின் லீலைகளோடு தொடர்புடையன. இவற்றைவிட வைகுந்த ஏகாதசி (மார்கழி), வீம ஏகாதசி (மாசி), நரகாசுரன்போர் (தீபாவளி), கிருஷ்ண ஜயந்தி என்பன சிறப்பு விழாத் தினங்களாகும். கார்த்திகைத் தீபாராதனை, புத்தாண்டுப்பொங்கல், தைப்பொங்கல் விசேஷ ஆராதனைத் தினங்களாகும். அனுமார்தீர்த்தமாயமைந்த கடலாடுவிழா காவிரிப்பூம் பட்டினத்தையே நினைவுக்குக் கொண்டுவரும் மிகச் சிறப்பான விழாவாகும்.

''தீர்த்தமார் முளரிச் சேவடி யதனி
லார்த்தியாய்த் திதிபதி ளென்றுன தினத்தில்
விரதந் தன்னை விரும்பிநோற் றவர்க்குத்
திரமுற விஷ்ட சித்தி யீயும்
பூவைநேர் மேனிப் புருஷோத் தமனே''

என்னும் பாடல் ஏகாதசியின் மாண்பை எடுத்தோதுகின்றது. ஏகாதசி விழிப்பினன்று ஏகாதசி புராணம் படிக்கப்பட்டு, புராணபடனம் நடைபெறும். நான்குசாமப் பூசையும் சிறப்பாக நடைபெறும். விழாச் சிறப்பு வருமாறு:

வெண்ணெயுறி மேற்றிருடல் துகில் கவர்தல்
விருப்பமொடு பாம்பின்மேல் நடன மாடல்
திண்ணமுறும் கஞ்சனுயிர் சங்க ரித்தல்
திங்ககல வேட்டைநல மதுமேற் கொள்ளல்
உண்ணிலவு மருளேபோல ஒளிமி குஞ்சீர்
உயர்வுநிறை சப்பறத்தி னுலாவுங் கண்டு
கண்ணனூர் தரும்காட்சி நயம் வியந்து
களிகூர தொழுதுநலம் பெறுவோ மன்றே.

சீர்மிகுநற் தேரிலேறி அன்ப ருய்ய
திருவுலாப் போகின்ற காட்சிக் கேயிவ்
வூர்மிகவும் திரண்டுவரும் நீல வண்ணம்
ஓங்குமுயர் கடற்கேகி நீல வண்ணன்
நேர்மிகுமோர் பக்தியொடு மன்பர் காண
நீராடல் ஆலயநற் பட்டுத் தீர்த்தம்
ஏர்மிகுமிவ் விழாக்களெல்லாம் இனிது போற்றி
இப்பிறப்பிங் குற்றபலன் பெறுவோம் நாமே.

---

*தேர் 1952இல் இழுக்கப்பட்டது எனத் தெரிகிறது.

## வல்லிபுரத்தில் வடபத்ரசாயி

வடமர் ஆண்ட பிரதேசம் வடமராட்சி; வடமராட்சி கிழக்கிலமைந்த தொன்னகரம் வல்லிபுரம். இங்கேயுள்ள பழம் பெருங் கோயில்தான் வல்லிபுரக்கோயில். இவ்வாலயத்தின் வரலாற்றைச் சொல்லும் தட்சிணகைலாயமான்மியம் "சுவர்ணுலயம் வல்லிபுரம் விஷ்ணு க்ஷேத்திரத் துவயந்ததா'' என்று பேசும். இஃதேபோல தென்னகத்தில் செங்கற்பட்டு ஜில்லாவிலிருந்து 20 கல் தொலைவில், கடலோரமாக வல்லீபுரம் என்னும் விஷ்ணு ஆலயமொன்று இருப்பதாக "யாழ்ப் பாண வைபவ கௌமுதி'' என்னும் பழைய நூலின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். வல்லிபுரத்துக்கும் இதற்கும் ஒப்புமை காணப்படுகிறது. இராஜவல்லிபுரம், வில்லிபுரம் என்னும் ஊர்கள் தமிழகத்திலுண்டு. பாரத நாட்டிலுள்ள ஆயிரத்தெட்டு விஷ்ணுதலங்களில் வில்லிபுத்தூரும் ஒன்று. வில்லியென்பவன் புதிதாய் அமைத்த ஊர் வில்லிபுத்தூர். இங்கேதான் புகழ்பூத்த வடபெருங் கோயில் இருக்கிறது. இங்கேயுள்ள மூலவருக்கு வடபத்ரசாயியென்று பெயர். பெரியாழ்வாரும், ஆண்டாளும் அவதாரம் செய்த புனித தேசம் இது. விஷ்ணுசித்தர் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாதபோது, ஆண்டாள் தான் சூட்டி அழகுபார்த்துப் பின் சுருட்டி வைப்பது வழக்கம். வடபெருங் கோயிலில் எழுந்தருளி இருக்கும் வடபத்ரசாயிக்குப் பிடித்தமான இம்மாலையால் பெருமை பெற்ற ஆழ்வாரின் திருமகள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்னும் திருநாமம் பெற்றுள். அப்பிராட்டிக்கு நாச்சியார் என்ற திருநாமமும் உண்டு. வடபத்ரசாயியில் பிரேமை கொண்ட நாச்சியார், மதுர பாவத்தால் அவனேயே அடைந்தாள். அவளுக்குத் திருமணமும் இங்கே தான் நடந்தது. இதுபோலவே வல்லிநாச்சியாரென்னும் மங்கையர் திலகம் வல்லிபுரத்தில் வந்துதித்தாள். அனந்தசயனனின் அரவணைப் பால் நாகசாபந் தீர்ந்து, அப்பெருமானேயே உபாசனைபண்ணி, வல்லிபுர ஆழ்வார் திருவடிகளை அடைந்தாள். ஈழத்தின் வடபாலமைந்த (பருத்தித்துறையைச் சேர்ந்த) வல்லிபுரத்தில் கோவில்கொண்ட மாயன், வில்லிபுத்தூர் வடபத்ரசாயிபோல இலவல்லியை ஆட்கொண்டு, அனைவருக்குமே அருள்பாலிக்கின்றுன்; என்னே அற்புதம்!

திருமால் தத்துவம் ஐந்து பெரும் பிரிவுகளை உடையது. இறைவன் உயிர்கள் தோறும் உள்ளும் புறம்புமாகக் கலந்து விரவிநிற்கும் நிலை அந்தர்யாமித்துவம், இது ஊட்டுமிடம். திருமகளுந் தானுமாய் நித்தியமுத்தர் ஸேவிக்கப் பரமபதத்தில் திருவோலக்கம் இருக்கும் பரத்துவம், இது பாட்டுக் கேட்குமிடம். திருப்பாற்கடலில் யோகநித்திரை என்னும் அறிதுயில்கொண்டு, உயிர்களைக் காத்தருளும் வகைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் நிலை வியூகம்; இது கூப்பீடு கேட்கு

மிடம். கொடியோரைத் தெறுதலாகிய துஷ்டநிக்கிரகமும், சிஷ்ட பரிபாலனமும் செய்தருளுவதற்காக இராமன்—கண்ணன் முதலிய அவதாரங்களாகத் தோன்றியருளும் நிலை விபவம்; இது குதித்த இடம். வழிபடுமன்பர்களுக்கு எழுந்தருள் செய்வதற்காகத் திருவரங்கம், திருமலை, பெருமாள் கோயில் முதலிய திவ்ய தேசங்களிலும், அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளி விளங்கும் நிலை அர்ச்சை; இது வளைத்த இடம். இவ்வைந்து நிலைகளிலும் இரு பெருந் தத்துவங்களை உள்ளடக்கி இருக்கின்றது வல்லிபுரம். அடியார்களின் துயர ஒலி கேட்ட அளவில் துடித்துக்கொண்டு, இந்த உலகில் இழிந்துவந்த நிலை குதித்த இடம். லவல்லியின் துயர்நீக்க மற்சமாய்க் குதித்தான் கண்ணன். பின்னர் சுதர்சன வடிவிலே கோவில்கொண்டு அருளாட்சி புரிகிருன் அருள்மிகு வல்லிபுரத்தில். இவ்வண்ணம் விபவநிலை, அர்ச்சை இரண்டும் பொருந்திய க்ஷேத்திரம் வல்லிபுரம்.

இந்தக் கற்றளி சைவ ஆலயங்களின் அமைப்புடையது. நந்தியினிடத்தில் கெருடாழ்வாரும், வைரவரினிடத்தில் அநுமார் சந்நிதியும் உண்டு. விநாயகர், நாகதம்பிரான், நாச்சிமார் பரிவாரமூர்த்திகளாய் எழுந்தருளியிருக்க, நவகோள்கட்கான தனிக் கோவிலுமுண்டு.* தெற்குச் சந்நிதியில் திருமடந்தை மண்மடந்தை இருபாலுந்திகழ,திருமால் நிற்கும் கோலத்தில் காட்சியளிக்கிருர். தெற்கு வெளிவீதியில் நாச்சிமார் கோவிலும் ஆதிநாகதம்பிரான் கோவிலுமுண்டு, நாச்சிமார் கோவிலொன்று, மூலவர் சந்நிதானத்துக்குக் கிழக்கேயுள்ள கல்வளை யென்னும் பகுதியில் இருந்தது. ஆனமையால் நாச்சியாருக்குக் கல்வளை நாச்சியார் என்ற பெயர் நிலைத்துவிட்டது. ஏதோ உற்பாதங்களால் இப் பழைய கோவில் அழிந்துவிட்டது.

பயில்தரு முதுமறை நூலைத் தெரித்தவள்
பகைதொகு புரமெரி மூளச் சிரித்தவள்
பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவள்
எயிறுகொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவள்
எறிதரு குலிசம்வி டாமற் றரித்தவள்
இடுபலி கொளுமொர்க பாலக் கரத்தினள்
எனுமிவர் எழுவர்கள் தாளைப் பழிச்சுதும்.

—முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

---

*விஷ்ணு ஆலயங்களில் நவக்கிரகம் இல்லை. ஏனெனின் மறந்தும் புறந்தொழாதவர்—வைணவர். ஆனல் தமிழகத்தில் அழகர்மலை திருமோகூர் என்னும் தலங்களில் நவக்கிரக வழிபாடுண்டு.

இந்த நாச்சிமார் வணக்கம் ஆராய்ச்சிக்குரியது. கோவிலின் ஆதி கர்த்தாவான வல்லி நாச்சியாரின் நினைவாக இவ்வணக்கம் ஏற்பட்டிருக்கலாம். அன்றியும் ஆண்டாளின் வழிபாடு விஷ்ணு ஆலயங்களில் முக்கிய இடம் வகிப்பது வழக்கம். இங்கேயும் அப்படியான வழிபாட்டை ஏற்படுத்தியிருக்கலாம். ஸப்த கன்னியரை வழிபடும் பெரு வழக்கு சைவசமயத்தில் இருப்பது கண்கூடு. ஆதலின் அபிராமி, வைணவி, மகேஸ்வரி, கௌமாரி, வராகி, இந்திராணி, சாமுண்டா என்னும் சப்தமாதரின் கோவிலாகவும் அமைத்திருக்கக்கூடும். எது என்னவாயினும் ஒரேபீடத்தில் வரிசையாக அவரவர்களுடைய சின்னத்துடன் பத்மாசனத்தின்மேல் வீற்றிருப்பதுபோல் செதுக்கப்பட்ட ஏழு பெண்களே நாச்சிமார். கணபதியுடையவும், வீரபத்திரர் உடையவும் மூர்த்தங்கள் இவர்களுடன் காணப்படும்; இதுவே ஸப்த மாதர் அமைப்பு. ஆயினிக்கோவிலினுள்ளே ஆதியில் தனிப்பீடமொன்றே அமைக்கப்பட்டிருந்தது. அண்மைக்காலத்தில் ஸப்தமாதர்களும் நின்றகோலத்தில் காட்சியளிக்கிறார்கள்.

இவ்வாலயத்தை 1924இல் மகாத்மா காந்தியடிகளும் 1935இல் ரிஷிகேசத்திலிருந்து வந்த சிவானந்த சரஸ்வதியின் சீடர் ஒருவரும் தரிசித்திருக்கிறார்கள்.* வல்லிபுரத்தில் வல்லிநாச்சன் வழிவந்த மாதரசியொருத்தி மல்லில் என்னும் ஊரில் உள்ளவரை விவாகம் செய்து அக்கிராமத்துக்குச் சென்று வாழ்ந்தபோது தன் குலதெய்வமான ஆழ்வார் சுவாமிக்கு அங்கேயொரு கோவிலெடுத்தார். அதுவே மல்வில் கிருஷ்ணன் கோவில் ஆகும். மிகப் பழைய காலத்தில் நாடு வளம் குன்றியபோது நைவேத்தியத்திற்கு அரிசி கிடைக்கவில்லை. அப்போது சுவாமி பூசகருக்குக் கனவிலே தோன்றி அருகேயுள்ள குளக்கரையிலுள்ள கிழங்கைக் கல்லியெடுத்து, அதைப் பக்குவம்பண்ணி நிவேதிக்கும்படி பணித்தார். இவ்வாலயம் இன்றும் வல்லிபுரக் கோவிலின் ஆதிகர்த்தாக்களின் சந்ததியினராலேயே பூசை செய்யப்பட்டும் நிர்வகிக்கப்பட்டும் வருகிறது. மல்வில் குறவஞ்சி இவ்வாலயப் பெருமை பேசும்.

நீர்வேலி அத்தியார் அவர்கள் வல்லிபுர மாயன்மீது மும்மணிமாலை பாடுவித்து வெளியிட்டுத் தன் கண் நோயினின்றும் விடுபட்டார். மேலும் குரும்பசிட்டி அன்பர் ஒருவர் வல்லாயுதமொன்றைக் காணிக்கையாக வல்லிபுர சுவாமிக்கு வழங்கி தன் தீராநோய் தீர்ந்தார். இவ்வாயுதம் இன்று கோப்பாய் கிருஷ்ணன் கோவிலில் பூசைநேரம் பயன்படுகிறது.

---

*சுவாமி அத்வைதானந்தா என அறியப்படுகிறது.

## சிங்கைநகர் சொல்லும் சேதி

மூவேந்தர்களுக்கும் புகார், மதுரை, வஞ்சி தலைநகராய் அமைந்தது போல, பல்லவர்காலத்தில் காஞ்சி தலைநகராய் இருந்தது. இவ்வாறே யாழ்ப்பாணத்திலும் சிங்கை ஆரியமன்னர் காலத்தில் சிங்கைநகர் தலைநகராய் இருந்தது என வரலாறுகள் கூறுகின்றன. வல்லிபுரத்திற் காணப்படும் பல்வகையான தொல்பொருட்கள் அந்நகர் சீரும் சிறப்பும் வனப்பும் ஆதிக்கமும் கொண்டிருந்ததென்பதைக் காட்டுகின்றன. முன்னொருபோது சிங்கைநகர் இருந்த இடந்தான் வல்லிபுரம் எனப் பலர் நிறுவியுள்ளனர். எட்டாம் நூற்றாண்டின்பின் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சிங்கைநகர் இந்நாட்டின் தலைநகராய் விளங்கியதென்பதும் பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் போர்த்துக்கேயர் ஆட்சி தொடங்கும்வரை நல்லூர் இராஜதானி ஆனதென்பதும் முதலியார் இராஜநாயகம் அவர்களின் முடிவு. இவ்வாறு சிங்கைநகர் உச்சநிலையில் இருந்ததென்பதைப் பல வரலாற்றாசிரியர்கள் கூறுமாற்றால் இனிக் காண்பாம்.

வல்லிபுரம் என்னும் ஊர் பருத்தித்துறையில் இருந்து ஏறக்குறைய மூன்றரை மைல் தூரத்தில் உள்ளது. அங்கு மிக்க புராதனமான விஷ்ணு கோவில் உண்டு. வல்லிபுரத்தருகே மணல் குவியல்கள் காணப்படுகின்றன. இம்மணலில் பல புராதன சின்னங்கள் கண்டு எடுக்கப்பட்டன. இதற்கணித்தாயுள்ள ஓர் இடம் கப்பல் துறை எனப்படுகின்றது.

—ஸ்ரீலங்கா 56, ஏப்றில் பக். 11, வை. முத்துக்குமாரசாமி

வல்லிபுரக்கோவிலிற் கண்டெடுத்த பொற்சாசனத்திற் கண்டபடி கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராசபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட வசபன் என்னும் அரசன் காலத்திலே நாகதீவத்தை அவனமைச்சருள் ஒருவனாகிய இசிகிரயன் என்பவன் மாகாண அதிகாரியாய் இருந்து பரிபாலித்துவந்த காலத்தில் பியகுதீசன் என்பவன் கட்டியெழுப்பிய புத்தபள்ளி இருந்த இடத்திலே பிற்காலத்தில் கோயில் தோன்றியிருக்கிறதெனத் தெரிகிறது. இப்பகுதி நிலத்தைத் தொல்பொருளாராய்ச்சியாளர் கிண்டி ஆராய்ந்து பார்த்தால் பழைய உண்மைகள் ஒருவாறு வெளியாகும்.

— பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கை நகர் வல்லிபுரப்பகுதியே யென்ற கருத்தை அறிஞர் பலர் வெளியிட்டுள்ளனர். முதலியார் இராசநாயம், சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலியோர் அவர்களுட் சிலர். வல்லிபுரப் பகுதியில் பல இடங்களில் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள் கீச்சுக்கிட்டம் ஆதியனவும், அங்கிருந்து கரைமார்க்கமாய்ப்

போன பெரும் வீதியின் அடையாளங்களும் அவ்வூர் ஒருகாலத்தில் பெருநகராக விளங்கியிருக்கவேண்டுமென்பதைக் காட்டும். ஆரியச் சக்கரவர்த்திகள் பெருங் கடற்படையுடையோராய்ப் பிரசித்தி பெற்றிருந்தமையினுல் மரக்கலத்திரள் ஆழியிற் சென்று சுலபமாய்த் திரும்பக் கூடிய துறைமுகம் இருந்திருக்கவேண்டும். வல்லிபுரத்துறை இன்றும் கப்பற் துறையென்றே வழங்கப்படுகிறது ........... சிங்கைநகர் அழிபாடுகளிடையே வல்லிபுரக் கோயில் புனரமைப்புச் செய்திருக்கலாம்.

- பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

புறக்கணிக்கப்பட்ட வடக்கில் தொல்பொருளாய்வு வீண்போகாதென்று சேர் போல் பிரீஸ் 1917ல் குறிப்பிட்டுள்ளார். பென்சில்வேனிய பல்கலைக்கழக தொல்பொருளியல் ஆய்வுக்குழுத் தலைவி கலாநிதி விமலா பெக்லி 1967ல் வடமாகாணத் தொல்பொருளாய்வின் முக்கியத்துவத்தை வற்புறுத்தியுள்ளார். வல்லிபுரத்தின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்தியுள்ளார்.

— ஆ. தேவராசன்

யாழ்ப்பாணத்தையாண்ட சிங்கையாரிய மன்னர்களுடைய தலைநகர் வல்லிபுரத்தில் அமைந்திருந்ததென்பது இராசநாயக முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ருேருடைய கருத்தாகும். வல்லிபுரத்திலே கிடைத்த தாழி ஒரு முதுமக்கட் தாழியாக இருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு. எனினும் மேலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுக் குறிப்பிட்ட மண்மேட்டைப் பூரணமாக அகழ்ந்தபின்பே திட்டவட்டமாக எதனையும் கூறமுடியும். இத்தாழியொரு முதுமக்கட் தாழியென்று நிரூபிக்கப்பட்டால் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் திராவிடப் பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்குப் பெரிதும் உதவும் சான்ருக இது அமையும்.

— கலாநிதி கா. இந்திரபாலா

இன்று வல்லிபுரம் என்றழைக்கப்படும் கிராமமே அக்காலத்தில் சிங்கைநகராக விளங்கியது. வல்லிபுரக்கோயிலின் வீதியின் பக்கத்தில் பல உயர்ந்த மண்மேடுகள் காணப்படுகின்றன. எட்டாம் நூற்ருண்டின்பின் 15ஆம் நூற்ருண்டு நடுப்பகுதிவரை சிங்கைநகர் குடாநாட்டின் இராஜதானியாக விளங்கியதென்பது பல ஆர்ராய்ச்சியாளர் முடிபாகும்.

— கலைப்புலவர் நவரத்தினம்

ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கைநகரில் இருந்து ஆண்டனரென்று சில தமிழ்நூல்கள் கூறுகின்றன. ஆரியச் சக்கரவர்த்தியைச் சிங்கையாதிபன், சிங்கை காவல் மன்னன் எனத் தட்சிண கைலாய மான்மியம் குறிப்பிடுகின்றது. இதுபோல இராசசேகரமாலை, செகராசசேகரம்

ஆகிய இரு நூல்களும் முறையே சிங்கையெங்கோமான் எனவும் சிங்கைமேவு மாரியர்கோன் எனவும் யாழ்ப்பாண மன்னனை வர்ணிக் கின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் வாழ்ந்த அரச கேசரி பராக்கிரமபாண்டியனின் பட்டயம் ஒன்றிலும் யாழ்ப்பாணத்து அரசன் சிங்கைமன்னன் என்றே கூறப்பெற்றுள்ளான். ஆகவே ஆரிய சக்கரவர்த்திகளின் தலைநகர் சிங்கை நகரென வழங்கிற்றென்பது தெளி வாகும். இம்மன்னர் சிங்கை நகரில் இருந்து ஆட்சி புரிந்தமையாலே சிங்கை ஆரியர் எனவும் வழங்கலாயினர்.

— ஈழத் தமிழ் வரலாற்று நூல்கள்

ஆதி ஆரியச்சக்கரவர்த்தி எடுப்பித்த யாழ்ப்பாண நகர் யாது ? அது நல்லூராதல் கூடுமா? கூடாது என்பர் ஸ்ரீ இராசநாயகமுதலியார். இவ் வியுற்பத்திமானின் அனுமானப்படி பருத்தித்துறைக் கணித்தாய் மணல் மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமே பூர்வகாலச் சிங்கை நகராம். வல்லிபுர மணற் கும்பிகளுள் காற்றுக்காலங்களில் அகப்படும் பழம் பொருட்கள் குவிந்துகிடக்கின்ற பூர்வகாலக் கலவோடுகள், கீச்சுக் கிட்டம் ஆதியனவும், அங்கிருந்து கரைமார்க்கமாய்ப் போன பெருவீதி யின் அடையாளங்களும் இது ஒருநாள் விஸ்தாரநகராய் விளங்கியது எனக் கரதலாமலகமாய்க் காட்டும். அப்பால் ஆரியச் சக்கரவர்த்திகள் தம் செல்வாக்கு நிரம்பிய நாட்களில் பெருங் கப்பற்படையுள்ளோராய் பிரக்யாதி பெற்றுள்ளமையினால் அம்மரக்கலத்திரள் ஆழியிற் சுலப மாய்ச் சென்று திரும்புதற்கு அனுகூலமான துறைமுகம் உள்ளோராய் இருந்தமை அவசியம். கேகாலைப்பகுதியிலுள்ள கொத்தகமத்திற் கண் டெடுத்த கல்வெட்டும் அன்னோரைப் பொங்கொலிநீர்ச் சிங்கைநகர் ஆரியச் சக்கரவர்த்தி எனச் சூசிப்பிக்கின்றது. பெருங்கடற் சமீபமும் சிறந்த துறைமுகப் பொலிவும் பொருந்தக் கொண்டது வல்லிபுரமே.

— சுவாமி ஞானப்பிரகாசர்

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிரசிங்கன் கதிர மலை அரசைக் கைப்பற்றி மாருதப்புரவீகவல்லியென்னும் சோழராசகுமா ரியை மணந்து, பின் கதிரமலையைவிட்டு நீங்கி சிங்கைநகரைத் தன் இராசதானியாக்கினான். பருத்தித்துறைக் கண்மையில் மணல் மேடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கைநகராகப் பண்டைக்காலத்தில் விளங்கியது.

— யாழ்ப்பாண வைபவ விமர்சனம்

கி. பி, எட்டாம் நூற்றாண்டு துவக்கம் சிங்கை நகரிலிருந்தரசாண்ட கலிங்க அரசனாகிய உக்கிரசிங்கனும் அவன் வழியினரும் சிலகாலம் பிறராட்சிக்குட்படாமலும், சிலகாலம் சோழ அரசுக்கும் பொலனறுவை அரசுக்கும் கீழடங்கியும் சிங்கைநகரில் அரசுபுரிந்துவந்தார்கள். வல்லி

புரம் என்பது வட இலங்கைத் தமிழ் மன்னனின் பண்டைத் தலைநகராக விளங்கிய சிங்கை நகராகு மென்பது ஆராய்ச்சி அறிஞர் கண்ட முடிபாகும். பொங்கொலிநீர்ச் சிங்கைநகர் விசேடித்துக் கூறப்படுவதால் அது கடலையடுத்த நகரமென்பது புலப்படுகின்றது.

— முதலியார் குல. சபாநாதன்

வல்லிபுரம் வடக்கருடைய பிரதம பட்டினமாய் இருந்தது. வல்லிபுரம் வடமராட்சிப்பிரிவிலுள்ள ஓர் கிராமம்: முன்னோர்காலத்தில் வல்லிபுரம் ஓர் விசேஷித்த பட்டினமாய் இருந்ததென்பதற்கு அவ்விடத்திற் காணப்படும் பழைய கட்டிடக் குறிகள் சான்றாகும் (Ancient Jaffna p. 54). அது பொற்சாசன காலத்திலோ அதற்கு முன்னரோ வடக்கருடைய பிரதான பட்டினம்.

by **Daniel John**, MB

வளவகங்கைப்பகுதி (தெற்குக்கரை); கதிராவெளி (கிழக்குக்கரை); பொன்னரிப்பு, மாதோட்டம் (மாந்தை) மேற்குக்கரை, வல்லிபுரம் (வட-கிழ-கரை); வவுனியா, அநுராதபுரம் (மத்திய இலங்கை) முதலிய இடங்களில் 'முது மக்கள் தாழிகள்' கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை திராவிட தமிழ்ப்பண்பாட்டுச் சின்னங்களாகும்.

— திரு. திக. இராசேசுவரன்
ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் பக். 227

கி. பி. பதினைன்காம் நூற்றாண்டில் ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவன் கேகாலை மாவட்டத்திலுள்ள கொட்டகம என்னுமிடத்திற் பொறித்த கல்வெட்டாய சேது,

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

புங்குடுதீவு தெய்வமணங்கமழும் திருநாடு. திசைமணக்கும் புகழ்பூத்த பொன்னாடு. வல்லிபுரப் பொன்னேட்டில் இந்நாட்டின் புகழ் பொறிக்கப்பட்டிருக்கிறது.

வித்துவான் பொன். அ. கனகசபை
உலக இந்துமகா நாடு—ஆத்மசோதி சிறப்புமலர் பக். 168

'' வல்லிபுரம் என்றால் ஆயர் அமைத்த கோயில் எனப் பொருள் படும். இத்தகைய பொருளை நிகண்டிற் காண்கிறோம். வல்லிபுரத்திலும் ஆயர்கள் மாயோனுக்குக் கோயிலமைத்தனர் எனக் கொள்வதே

பொருத்தமுடைத்தாகும். புன்னாலையில் எமது ஆய்வில் கிடைத்த வரலாற்றுதயகாலக் கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள் புன்னாலை, வல்லிபுரம் ஆகியவை மிகப் பழைய காலத்தில் இவ்வழிபாட்டுக்குரிய இடமாக விளங்கின என்பதை எடுத்துக் காட்டுகின்றன. சந்தேஸ இலக்கியங்கள் பிற்காலத்தில் இவ்வாலயங்களின் பெருமையை எடுத்துக் கூறினாலும், இங்கு காணப்படும் தொல்லியற் சான்றுகள் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே இவை இவ்வழிபாட்டில் திளைத்திருப்பதை எடுத்தியம்புகின்றன". (சிற்றம்பலம் சிக. 1982)

கலாநிதி சிக. சிற்றம்பலம்
தொல்லியலாளர், வரலாற்றுத்துறை—
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
மயிலிட்டி வடக்கு, கலைமகள் மகா
வித்தியாலய மலர் 1982 —பாரதி

"ஸ்ரீமத் லாங்கா புர்யாம் வீணாகானபுரே வல்லிபுரநகரே ஸ்தி தஸ்ய தேவ தேவாஸ்ய மாஹா லக்ஷ்மி பூம லக்ஷ்மீ ஸமேத மாஹா விஷ்ணு பரமேஸ்வராய நம."

## வல்லிபுரம் உடையார் கோயில்
## ஆவணங்கள் — சாசனங்கள்

ஆம், நம்நாட்டின் பெருமை தனிப்பட்டது. வேறு எங்கும் காணா வியப்புடையது. இங்கேதான் மன்னர்களும், மாஞானிகளுமிருந்தனர். ஆயின் அவர்களோடு அவர்களது அரண்மனைகளும், அரண்களும், சமாதிகளும் மறைந்துவிட்டன. எனினும் அவர்கள் கட்டிய ஆலயங்கள் அழியவில்லை. ஆண்டவனது திருக்கோலங்களும், அவனைப் பாடிய பாசுரங்களும், ஆலய வழிபாடுகளும், கோபுரங்களும், தீர்த்தங்களும் நம் நாகரிகத்தின் ஆணிவேர்களாய்த் திகழ்கின்றன. கண்டு அனுபவிக்கும் உலகம் பெரியதுதான். ஆனலிதற்காதாரமான காணாத கடவுளைக் காண்பதே வாழ்வின் இலட்சியம் ஆகும். கரை புரண்டோடும் ஆறுகளாக நம் கண்முன்னே நெளிந்தோடும் வெள்ளத்தைவிட, கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தோடும் ஆற்று வெள்ள மதிகமானது. அதைப்போல நாம் காணும் வானளாவிய ஆலயங்களுக்கப்பாலே அருள் பிரகாசிக்கும் அருமையான ஆலயங்கள் சில நம் காட்சிக்கெட்டாமல் காட்சியளிக்கின்றன. வரலாற்றுப்பாதையில் காலவெள்ளத்தில் கரைந்துபோன அந்த ஆலயங்கள் சில இன்றில்லை; ஆயின் ஏட்டிலும் பாட்டிலுமவை நிலவுகின்றன. பண்டைய கோவில் வரிசையில் வல்லிபுரமும் ஒன்றாகும். தென்னகத்தில் ஆவுடையார்

கோயில், திருச்சிற்றம்பலம் உடையார் கோயில் போல யாழ்ப்பாணத்தி லுள்ள முப்பெரும் விஷ்ணுதலங்களில் வல்லிபுரம் உடையார் கோயிலு மொன்ருகும்.

ஒரு வீட்டிற்கு ஆவணமெவ்வளவு முக்கியமோ ஒரு ஆலயத்துக் கும் வரலாறு உரிமைச்சான்ருகும். ஆயின் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட அந்நியர் நிர்வாகத்தாலும், சமயமாற்றத்தாலும் வரலாற்றில் கலப்படம் செய்யப்பட்டு உண்மைகள் மறைக்கப்படும்போது, உரியவர்கள், கலைஞானிகள், வரலாற்றுவிற்பன்னர்கள் விழிப்புணர் வோடு உண்மைகளை எழுதிவைப்பது வருங்காலத் தலைமுறையினருக்கு நாம் செய்யும் சேவையாகும். ஒரு இடத்தின் வரலாற்றை நிர்ண யிக்கப் பலவிதமான ஒப்படைகள் முக்கியமாகும். நாட்டுமரபு வழக்கு கள், அயல் நாட்டார் குறிப்புகள், தொல்பொருள் அத்தாட்சிகள், இலக்கியம் சொல்லும் கதைகள், ஐதீகங்கள், வாய்மொழி நாட்டார்* பாடல்கள், அழிபாட்டுச் சின்னங்கள், தொல்பொருளாய்வாளரின் அபிப் பிராயங்கள்—கல்வெட்டுகள்—நாணயங்கள், பெருவழிகள்—ஓவியங்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாம்.

இவற்றை ஆதாரமாக வைத்துச் சிந்திக்கும்போது சாசனங்கள்—ஆவணங்கள் பல வல்லிபுரத்தின் பெருமையைப் பேசுகின்றன. அக் கிராமத்திலுள்ள இடங்களின் பெயர்கள் இதற்குச் சான்று பகர்கின்றன, தச்சனடைப்பு, கொல்லனத்தாய், குசவனத்தாய் என்னும் தோம்புப் பெயர்கள் தொழிலாளர் வாழ்ந்த இடமாயமைந்துள்ளன. செட்டிகள் வாழ்ந்த இடம் செட்டியாகாடென்றும், ஆண்டிகள் வாழ்ந்த இடம் ஆண்டியாகாடென்றும் அழைக்கப்படுகிறநிலை இன்றும் இருக்கிறது.

நாகங்கள் கூட்டமாய்ப் போனபாதை நாகம் சரிஞ்சவாய்க்கா லென்றும், தாமோதரர் உடையார் இருந்த இடம் தாம உடையா வளவு என்றும், நினைவாத்தை உடையார் வாழ்ந்த வளவு உடையா வளவென்றும் இன்றும் அழைக்கப்படுகிறது. கல்லினுல் வளைக்கப்பட்டுக் கட்டிய தலைப்பட்டினமிருந்த இடம் கல்வளையென்றும், லவல்லியை இறக்கித் தரித்த இடம் இறக்கம் தரிச்சான் என்றும் பெயர் கொண்டுள் ளன போலும். பொக்கன் வாழ்ந்த இடம் பொக்கன் மடமாயிற்று. ஆழ் வாருடைய பெயரால் வந்த வயல் ஆழ்வான்பிறிவு என ஆவணங்களில் இடம்பெற்றிருக்கக் காணலாம். மேலும் நூல் விபரப்பட்டியலில் வல்லி புரம் பற்றி யெழுதிய கட்டங்களையும் கீழே காணலாம். அவை வருமாறு:

---

*வல்லிபுர ஆழ்வாரே வனசமுறை புண்ணியரே
மல்லிலில் ஆழ்வாரே மலரில்உறை புண்ணியரே
கல்வளையில் ஆழ்வாரே கமலமுறை புண்ணியரே —தாலாட்டு

1. வல்லிபுரம் ஒரு தொல்பொருட் களஞ்சியம் - சங்கமம் பெப். 1975 ; 12. 25.

2. நடராசா செ, தெல்லியூர் — வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி ஆலயம் ஸ்ரீலங்கா 8 (2) ஜன. 1956 : 29–30.

3. வட இலங்கையிற் பௌத்தம் — ஸ்ரீலங்கா 8 (56) ஏப். மே 1956; 11–13.

4. (கணபதிப்பிள்ளை. க) தமிழ் மாணவன் (பு. பெ.) வல்லிபுரக்கோவில் பொற்சாசனம்—ஈழகேசரி 9(17) நவ. 6, 1938 : 6. 6.11.38

5. ஜோன் டானியல்—வல்லிபுரப் பொற்சாசனம் அதன் சரித்திரப் பிர யோசனம் — ஈழகேசரி 9–(23) டிச. 18 (1938– 14). 18.12.38

6. சிங்கை நகரைத் தேடி — வல்லிபுரத்தில் கிடைத்த தாழிகள் — வீர கேசரி வார வெளியீடு யூன் 4, 1972 பக். 5.

7. சிவசாமி. வி — வல்லிபுரத்தின் தாழிகளும் தமிழர் நாகரிகமும் — ஈழ நாடு வாரமலர் — மே. 28–1972 பக். 27–10–11.

8. வல்லிபுரக்கோயில் — சிங்கைநகர் செங்கதிரோன் — ஆத்மஜோதி சிறப்புமலர் 1982. பக். 147–148.

9. எங்களூர் வரிசை வல்லிபுரம்— மு. வே. வல்லிபுரநாதன்—ஈழநாடு வாரமலர் 12–9–71, 6–9–71.

10. வீ. பீ. நாதன்—சரித்திரச் சிறப்புமிக்க சிங்கைநகர் அல்லது வல்லி புரம் — மே. 1954 6 : 6 24–28, 30

11. ஊரும் பேரும் வல்லிபுரம்—22–7–59 தினகரன் — பெயர் வந்தது எப்படி? மு. ப. ர.

கோவிலின் பூஜகராயும், வண்ணக்கராயும், வழிவழி உரிமைசான்ற உரித்துடையோராயும் இருந்தவர்களில் தாமோதரர்செய்த தொண்டுகள் அளப்பரியனவாகும். அன்னார் கட்டிவைத்த கட்டுப்பாடுகள் இன்றும் நடைமுறையில் இருக்கின்றன. இடைக்காலத்தில் அண்ணன் தம்பிய ருக்குள் ஏற்பட்ட சச்சரவுக்காலத்தில் துரைத்தனத்தாரின் பிரதிநிதிகள் கோவிலை மேற்பார்வை செய்தபோதும்கூடத் தாமோதரரின் உதவியை நாடி அவரின் வழிநடத்துகையையே மேற்கொண்டனர். கோயிலின் ஒவ்வொரு அம்சங்களிலும் அவர் அக்கறை கொண்டிருந்தார். எனவே வல்லிபுரக் கோயிலென்றால் அவரின் சேவையிலேதான் கட்டியெழுப்பப் பட்டது. இவர்வழி நினைவரும் கோவிலுக்குப் பூஜகராயும், மணிய காரனும் இருந்திருக்கிறார். இந்த இரட்டையர்களை எந்தத் தலைமுறை யும் மறந்துவிட முடியாது. சேதர் தாமோதரர் சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் வரணி இயற்றாலையில் இருந்து கந்தர் கதிர்காமர் என்பவரைக் கொண்டுவந்து கோவிலோடு சேர்ந்த தனது சொந்தக்

காணியில் குடியேற்றி, நிலமும் கொடுத்து, கோயிலுக்கான பூபத்திர மெடுத்தல் மாலைகட்டல் போன்ற தொண்டுகளைச் செய்வதற்கும் வழி வகுத்திருக்கிறார்.

வல்லிபுரக்குறிச்சியிறை அப்பாண்டபுலோ — சங்களையடிபுற்றடி யென்னும் காணியில், வல்லிபுரஆழ்வார் கோயில் மதில்பிரகாரத்தில் வடமேற்குப்புறமாக, பங்காளர்பங்குதள்ளி, அவருக்குச் சேரவேண்டிய பங்கில் மூன்று பரப்பு நிலம் தர்மநன்கொடையாக எழுதிக்கொடுத் திருக்கிறார். அதிலே பின்வரும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

''எனது முன்னோர் நான் பரவணியாகப் பூசைபண்ணிய, பராபரித்து வருகிற வல்லிபுரஆழ்வார் சுவாமி கோயில் பூசைக்கு உண்டாகிய பணி விடைகள், கோவில் பூசைக்குப் பூபத்திரம், துளசி, திருமாலைகட்டுகிறது. பூசைக்கு உண்டாகிய வெண்கலச் சாமான்கள், பித்தளைச் சாமான்கள் விளக்கிப் பவுத்திரப்படுத்தி வைக்கிறது, தீபதூபங்கள் விளக்கு உள்வேலைகள் சகலதும் பார்க்கிறது மன்றி மடைப்பளி பரிசாதக வேலைகள், திருநாட்களிலும் சாற்றுப்படி சாற்றுகிறது. திருநாட்களில் பந்தல் சிங்காரப்படுத்துகிறது. இந்தப் பணிவிடைகள் சகலவேலையும் இவரும் இவருடைய பிள்ளைகளும் செய்துவரவும், இந்த வேலைகள் செய்து வருவதற்கு வருமானம் சுவாமியாருக்கு துளசியர்ச்சனை பண்ணுகிற வருமானத்தில் $\frac{1}{4}$ பங்கு பெற்றுக்கொள்ளவும். ஏறுபடியாக வேலை உபயகாரர் செய்விக்கிற காலத்தில் ஏறுபடிவேலைக்குத் தகுந்த சம்பளம் பெற்றுக்கொள்ளவும்.'' இதற்கத்தாட்சியாக,

வேலர் நினைவர் (வல்லிபுரம்), வினைதீர்த்தவல்லியார் (துன்னாலை) கனகராய முதலியார் சுப்பிரமணியம் (புலோலி), மளவராயர் மாப் பாணர் (புலோலி) என்போர் சாட்சிபோட்டுள்ளதாக அறிய வருகிறது, இதிலிருந்து எம்பெருமான் வினைதீர்த்த வல்லியார் என்று அன்போடு அழைக்கப்பட்டாரெனவும் தெரியவருகிறது.

ஆதியில் பூசை செய்தவர்களில் ஒருவரது சமாதி* ஆதிக் கோவிலமைந்த இடத்துட னிணைந்திருந்ததாயும் நம்பப்படு கிறது. நல்லூர், செல்வச்சந்நிதி, கதிர்காமம், கொக்கட்டிச் சோலை, சித்தாண்டி, நெதுமால் கோவில் முதலிய இடங்களில் சமாதிக ளிருப்பதாக வரலாறு சொல்லுகிறது. எவ்வாறு வல்லிபுரக்கோவில் தொன்மையானதோ அவ்வாறு பழமையான இன்னோராலயம் மல்லில் கிருஷ்ணன் கோவிலாகும். தலவிருட்சம் மருது. மூலவ ருக்குப் புண்ணிய ஆழ்வாரென்று பெயர். ஆவணிப் பூரணையில் ஆழிய வளைக் கடலில் கடலாட்டுவிழாவும், அடுத்தநாள் ஆலயத்தினருகே

* வல்லிபுரம் என்பவருடையதென்பது சாதுக்களின் கர்ணபரம்பரைக் கதை.

யமைந்த வற்முத தாமரைப்பொய்கையில் பட்டுத் தீர்த்தமும் நடைபெறும். வல்லிபுரத்துப் பராபத்தியக்காரருடைய வழித்தோன்றல்களே இன்றும் பூசை செய்கிமுர்கள்.

வல்லிபுரக் கோயிலில் பூத்தொண்டு செய்ய வீரசைவர்களை நியமித்ததுபோல பிற்காலத்தில் மாதகலைச் சேர்ந்த அந்தணர்கள் கோயில் சிவாசாரியர்களாகத் தொண்டு செய்திருக்கிமுர்கள். அவர்கள் வாழ்ந்த இடம் பிராமணவளவாகும். அவர்களின் சந்ததியில் வந்த வைத்தீஸ்வரக்குருக்கள், கருணுகரக்குருக்கள் இருவரும் பிரபல்யமானவர்கள். இவர்களுக்குப்பின் அன்னுரின் மருகர் கணபதிச்சாமிக்குருக்கள் பிரதம குருவாயிருந்தார்கள். இப்பொழுது அவருடைய புத்திரர்கள் அப்பணியைச் செய்கிமுர்கள்.

தனி நிர்வாகத்தின் கீழிருந்த கோயில் நிர்வாகம் மாறி இப்பொழுது தர்மகர்த்தாசபையின் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டுத் தீவிரவளர்ச்சி காணும் சந்தர்ப்பத்தில் அதன் தலைவராயிருந்த அமரர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் காலம் பொற்காலமாகும். சுமார் இருதலைமுறைக்கு முன்னர் கோயிலுக்கு உருப்படியான திருப்பணிகள் செய்தவர் தாமோதரம்பிள்ளையாகும்.

இப்படி யொருநூலை ஆக்க வழிகாட்டிய எமது குருநாதன் திருவாசகச் சுவாமிகளின் (சபாரத்தினம் சுவாமிகள், திருக்கேதீஸ்வரம்) பாதாரவிந்தங்களை என்றும் வழுத்தி வணங்குகிறேன்.

உ

# சுபமங்களம்

''உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும், பருகும் நீரும் கண்ணனே.''
—திருவாய்மொழி 3293

ஓம்; எல்லாம் புரிந்தவர்களென்று எவருமே இல்லை. தெரியாதவர்களென்றுமில்லை. தெரியாமல்தான் கேட்கிறேன், உங்களுக்கெல்லாம் அந்த அந்தரங்கம் என்னவென்று தெரியுமா? வல்லிபுரத்திலப்படியென்ன இரகசியம். இரகசியம் என்று சொன்னேன், இல்லவே இல்லை. காந்தசக்தி என்ன இருக்கிறது; அழகையே ஆகர்ஷிக்கும்வசியம்தான் அது. அலகிலா விளையாட்டொன்று அம்மண்ணிலே நடக்கிறதே! அதைச் செய்யும் அச்சுதனை, அரங்கனை, ஸ்ரீநிவாசனை, வரதராஜனை, பார்த்தசாரதியை, குருவாயூர்அப்பனை அப்படி வசீகரித்து வைத்திருக்கிறதே அந்த வல்லிபுரம். அந்த மாயம்தான் என்னே! ஒருவேளை வங்கக்கடலோரம் வந்துதித்த பெருமையோ?, அன்றி நீலக்கடலலையில் நெறித்து நிற்கும் வெண்திரையில் மனதைப் பறிகொடுத்துவிட்டானோ அப்பரந்தாமன்? நுங்கும் நுரையுமாய்த் திரண்டுவரும் வெண்ணெய் போல், தொடர்ந்துவரும் அலைகள் திருமகளின் முறுவலை நினைப்பூட்டிவிட்டதா? அல்லது, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் தலைக்கேச நெளிவுகளை அந்தக் கடலோரம் காணப்படும் அறல் வரிகள் ஞாபகப்படுத்தி அந்த நீலமேகச் சியாமளவண்ணனை வல்லிபுரத்தோடு பின்னிப்பிணைக்கின்றனவா? என்ன அந்தச் சூட்சுமம்? இப்படியோரற்புதம் எத்தேசத்திலும் கண்டதாய்க் கேட்டதாயில்லையே. இந்த மண்ணின்பேரில் உள்ள மயக்கம் அந்தத் திருமாதின் பேரிலுள்ள மயக்கத்தால் வந்ததோ? வல்லிபுரத் திருமண்ணிலே பாதபங்கயங்கள் படிய வந்தானோ? இதில் ஒரு மகத்துவம் இருக்கத்தான் செய்கிறது. இத் திவ்வியதேசத்திலே ஓர் அவதார தோற்றத்துடன் பகவான் எழுந்தருளினாலே மகிமைதானே.

அயோத்தியில் அவதாரம் செய்தது மகிமை, துவாரகையில் கண்ணபிரானாய் வந்ததும் மகிமை, வல்லிபுரத்தில் மீளயவதரித்ததும் மகிமையே. ஸ்ரீரங்கத்தில், திருவேங்கடத்தில், அல்லிக்கேணியில், ஹரித்துவாரத்தில், அமரநாத்தில், காஞ்சியில், கண்ணபுரத்தில் கோயில் கொண்டதும் மகிமையே. இப்படி ஆயிரத்தெட்டு க்ஷேத்திரப் பெருமையைத் தன்னுளே அடக்கியிருக்கிறது வல்லிபுரம். அடியார்களை ஆளும் ஆழ்வார் சுவாமியின் சங்கு என் சீரடி சேர்க ஜீவகோடிகளே என்று முழங்குகிறது. என்னைச் சரணடைந்தால் உலகில் உங்களுக்குத் துன்பமேயில்லையென்று அறிதுயில்முத்திரை காட்டி அழைக்கின்றான் எம்பெருமான். உங்கள் வல்வினைபோக்க நானுண்டு என அழைக்கிறது அச் சக்கரம். எங்கும் மங்கள நாமங்கள்; பொங்கப்பொங்க ஒலிக்கின்றன.

ஓங்கி யுலகளந்த உத்தமன், வங்கக் கடல்கடைந்த மாயவன், பாலன்ன பாஞ்சசன்யன், பக்த வத்ஸலனுக, ஆபத்சகாயனுகக் காட்சியளிக்கிறுன் மூலபண்டாரத்தில். தயாமூல தன்மநிதியவனே.

திருப்பதியானுக்கு லட்டு, அழகர்மலே கல்லழகருக்கு தோசை, அல்லிக்கேணி பார்த்தசாரதிக்கு சர்க்கரைப் பொங்கல்போல பக்த சனங்கள் பொங்கலிட்டு புனிதன் சந்நிதானத்தில் கொடுத்து மகிழ்கிறுர்கள். தித்திக்கும் பொங்கல்போல திருமாலும் தித்திக்கிறுன். அவனுடைய பிரசாதப் பெருமையே பெருமை.

இப்படியோர் சொற்றளியை உருவாக்கத் தோன்றுத்துணையாய் நின்ற நின் திருக்கருணே இருந்தவாறென்னே? அஞ்சலோம்புமதி சுவாமீ.

நீடுந் திகிரிப் படையாய் உனேக்கற்று நின்னேஎன்றும்
பாடும் படிதமிழ்ப் பாடல்தந் தாய்பழ நான்மறைநூல்
தேடும் திருவரங் காஅடி யேனுயிர் செல்லுமந்நாள்
வீடுந் தரஇருந் தாய்எனக்கு ஏதுஇனி வேண்டுவதே.

— அஷ்டப்பிரபந்தம்

ஸ்ரீராம ஜெயராம் ஜெயஜெயராம்
சுபம்! ஓம்சாந்தி! சாந்தி சாந்தி!

———

உ
விஷ்ணுமயம்

# கொன்றைப்பத்து

மருக்கட் டிளஞ்சீர் மலர்மகிமை மாறாக்
குருக்கட் டிளஞ்சீர்க் குணமார் — அருக்கட்(டு)
உருவாய சித்தி விநாயகன்தாள் போற்ற
மருவா திடரெம்மை மற்று.

சீராரும் வல்லிபுரத் தேவ ஆழ்வார்
சிறப்புநலம் கூறவெனக் குணர்வ ளித்தே
பாராளும் சக்கரநல் லாணை மேவும்
பண்பாய நல்லுருவே யுருவ மாக
நேராரு மில்லாத நிமல னெங்கள்
நித்தியனும் கண்ணபிரான் நாடி யன்பாய்
ஆராரும் தொழவிங்கே வுற்ற தந்த
ஆயிழையாள் வல்லிதவத் தாய தன்றே. 1

வல்லியுற்ற வேதனையை மாற்ற வேண்டி
வந்தவள்தன் கனவிலருட் சேதி கூறி
நல்லியல்பின் நலந்தருசீர் மீன மாகி
நன்றவள்தன் மடியினிலே குழந்தை யாகி
வல்லவனே நீதவழ்ந்து மகிமை காட்டி
வண்ணவருட் சக்கரமாய் மாறி நாங்கள்
எல்லவரும் போற்றிடவே செய்த தூய
ஏந்திழையாள் தவப்பெருமை வாழ்க வாழ்க. 2

கடலலைமேல் ஆர்ப்பரித்துக் கலக மிட்டுக்
கண்டவரை அச்சுறுத்தி கருணை மேவித்
திடனுறுநல் மீனமாய்க் குழந்தை யாகித்
திகழுநினை பல்லக்கிற் சுமந்து வந்தோர்
இடமிதுவே எனநீயு முணர்த்த நன்றே
இளைப்பாற வேண்டியருள் கொன்றை நீழல்
கடவாதே நிற்பவங்கு நீம றைந்த
கருணைநல வதிசயச்சீர் வாழ்க நன்றே. 3

வந்தடைந்த மாநிதியாம் மணிவி ளக்கே
மாண்பாய குழந்தையுரு மாறி யுற்ற
சொந்தவருட் திருவாய சக்க ரத்தின்
தோற்றத்தில் மேவியங் கிருப்பக் கண்டு
மந்திரமும் தந்திரமும் மகிழ்ந்து பேணி
மாசிலாக் கிரிகைவழி மகிழ்ந்து பூசை
வந்தனையோ டிங்கியற்றி வாழு கின்ற
வல்லிமர புற்றோர்தம் மகிமை வாழ்க. 4

மண்ணளந்த திருப்பாத மகிமை கண்ட
மாபூமி வல்லிபுரத் தோங்கு மிக்க
திண்ணமுறும் பரப்பினிலே திரும ணுற்ற
சேதியருட் கனவினிலே தோன்றிக் கூறி
நண்ணியதை எடுத்தழகார் திலக மிட்டு
நாம்நிதமும் அன்பாகப் போற்ற வைத்த
புண்ணியத்தின் நல்லுருவே புனித மேய
பூபாலா நினதருளார் பதங்கள் போற்றி. 5

சங்கினொடு சக்கரத்தின் உருவம் பேணிச்
சாருகின்ற அடியார்தம் மேனி சூடி
இங்கிதமாய் எழிற்பச்சை அதுவும் குத்தி
ஏத்திடுவார் பசுவைவளர்த் தன்பி னோடே
மங்கலமார் குறியுமுயர் சக்க ரத்தின்
மாண்பாய தோற்றமே ஆக ஆக்கிப்
பொங்குமருட் திறத்தோடு புனித மாகப்
போற்றியதைப் பேணுமருட் திறமை வாழ்க. 6

பாரெல்லாம் உன்னடிமை பணிசெய் துந்தன்
பாதமலர் சூடுவதெம் பணியா மென்றே
சீரெல்லாம் தரும்தேவி வளரு கின்ற
திருமார்பா அருளாளா தூய கண்ணா
ஊரெல்லாம் உவந்துபணிந் தினிதிங் கேத்தும்
உத்தமனே வல்லிபுரத் தரசே தூய
நீரெல்லாம் ஒத்துவளர் நிறமில் நீல
நிறமருளார் நித்தியனே நின்சீர் வாழ்க. 7

பூதேவி மகிழ்ந்துநிதம் பூக்கும் தூய
பொற்பாரும் குருக்கட்டூர் ஐங்க ரன்தன்
பாதார விந்தமலர் பணியும் தூய
பண்புடையார் உளம்மகிழ மிக்க வன்பின்
மாதேவி உமைசிவ ஞேடுற்ற பாலர்
மாமுருகன் ஐங்கரனு ருறவு பேணி
ஏதோநீ வல்லிபுர மணைந்தா யெம்முன்
இனியதவ மிருந்தவா றேதோ வாழ்க. 8

பங்கயப்பூம் கண்ணழகு வண்ணு நின்சீர்ப்
பசுவினங்கள் உண்டுதொழு துறங்கும் தூய
சிங்கைநகர்ப் பரப்பினிலே தூய கோயில்
சிறீதேவி மணவாளன் நினக்கிங் காக்கி
மங்கலமாய் ஆறுபொழு தரிய பூசை
மாண்புற்ற வல்லிபுர மக்கள் பேணிக்
சங்குலொடு தூயபகல் கனவு முந்தன்
கருதுபணிக் காகவென வீந்தார் வாழ்க. 9

வல்லிபுரத் தலம்வாழ்க கொன்றை நீழல்
வந்தடைந்த நினதருளின் நலமும் வாழ்க
புல்லருந்தித் துயிலுமுயர் பசுக்கள் வாழ்க
பொழுதெலாம் துதிப்பவர்தம் அன்பு வாழ்க
சொல்லிறந்திங் குயிர்க்குயிராய் நிற்கும் சோதித்
துணைமலர்த்தாள் வாழ்கநற் சக்க ரஞ்சேர்
நல்லாணைத் திறம்வாழ்க நாவிற் றூய
நாராய ணம்வாழ்கநின் நலன்கள் வாழ்க. 10

— சுதர்சன்

உ

# நிறைவுரை

வடமராட்சி, பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லிபுரத்திலமைந்த ஆழ்வார் சுவாமியாலயத்தின் வரலாறு ஏட்டிலே இடம்பெற்றமை நாம்செய்த பாக்கியமே. எவரும் துணியாத ஒரு கருமம் இந்நூலாசிரியரால் செயற்படுத்தப்பட்டிருக்கிறது. கடலின் அலைகள், சமுத்திரத்திலே எழுந்து மீண்டும் சுருண்டு அதனூடே மடங்கி மீண்டும் அடிப்பதுபோலச், சில கலைஞானிகளின் சிந்தனைகள் அவர்களுள்ளே அமிழ்ந்து போக, அவர்கள் ஆழ்கடல்போலமைதிகாண்கிறார்கள். இந்நூலாசிரியருமப்படியான பேர்வழிதான். இலைமறைகாயாக வாழ்கிறார். நல்ல சிந்தனையாளன். பேச்சிலும், எழுத்திலும் சிறந்தவர், சிருஷ்டிகர்த்தா, கவிஞன், நூல் வெளியீட்டாளன், வானொலிக் கலைஞர் என்று பல கோணங்களில் முன்னோடியாகத் திகழும் இவர் ஒரு ஆத்மீகச் செல்வரும்கூட. இவருடைய தொண்டைச் சமுதாயம் பயன்படுத்த வேண்டும். அவரும் பகிர்ந்து அளிக்க வேண்டும். இவருடைய அறிவுத்திறமை அவருக்குள்ளேயே அடங்கிக் கிடப்பதைக் கண்டேன். அவை சமுதாயத்துக்குப் பயன்படவேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டியது. எனவே, அவற்றை நூல்வடிவில் வெளியிட வேண்டுமென இறைவாக்காகச் சொன்னேன். ஆம். அந்தத் திருமால் திருவருளால் காரியம் நிறைவாய் விட்டது, போற்றற்குரிய கைங்கரியம். செயலிற் செயலின்மையும். செயலின்மையிற் செயலும் என்ற ஆப்த வாக்கியம் தந்த கீதாசிரியன் தோன்றாத் துணையாய் நின்று உருவான இந்நூலை கோடியில் ஒருவர் படித்தாற் போதும். எதிர்காலச் சமுதாயத்தில் யாரோ ஒருவரோ சிலரோ இந்நூல் எங்கேனும் ஒரு மூலையில் உறங்கிக் கிடந்தாலும்கூட தூசி தட்டி எடுத்துப் படித்து மேற்கொண்டுமொரு ஆய்வு நூலை ஆக்க இது ஒரு கையேடாக அமையும். இஃது முற்றுமுண்மை.

எல்லாம்வல்ல அன்னக்கந்தன் ஆம் அந்தச் செல்வச்சந்நிதி முருகனைத்தான் சொல்கிறேன். அவனருளையும், வல்லிபுரமாயவனருளையும் என்றென்றும் வேண்டி, தொடர்ந்தும் ஆசிரியர் தொண்டாற்ற எல்லா வல்லமையும் வளனும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். சுபம்.

தும்பளை,

14 – 5 – 83

இங்ஙனம்

முருகேசு சுவாமிகள்

உ

சிவராம் துணை

# வல்லிபுரத் திருவந்தாதி

## காப்பு

சீரோங்கு வல்லி புரம்சேர் குருக்கட் டுயர்பதிவாழ்
ஏரோங்கு சித்தி விநாயகன் நற்பண் பிணைமலர்த்தாள்
பாரோங்கு மன்பிற் பணிகின்றே னீவான் பரங்கருணை
பேரோங்கு வல்லி புரத்திரு வந்தாதி பாடுதற்கே.

## நூல்

பூவோ டிணைந்திருந் தின்னருள் பூக்கின்ற பொற்கொடியும்
நாவோ டிணைந்தருள் நல்கிடும் நாமகள் நாயகியும்
ஆவோ ரிருவர் அணைந்திருந் தொன்றுய் அகமகிழும்
தேவோத் தமன்நற் திருத்தலம் வல்லி புரத்தலமே. 1

வல்லி புரத்தலம் வந்துசேர்ந் தன்பாய் வணங்கிடுவோர்க்
கல்லல் அனைத்து மகலும் அகத்திருள் அற்றெழியும்
புல்லிப் பெருகிநல் இன்னரு ளோங்கும் புனிதமிக்க
நல்லிய லாளராய் வாழ்வரிங் கேதும் நலிவிலாதே. 2

நலிவிங் கெதுவுமே நாடாத வாறுநாம் நல்லருளின்
பொலிவிங் குறவேண்டும் பொல்லாங் குறவே பொருந்திமிக
மெலிவிங் களிக்கின்ற மேல்நாட் தொடர்பாம் மிகுவினையின்
பொலிவும் அறவேண்டும் வல்லியூர் மாயனைப் போற்றுதுமே. 3

போற்றுவார் தம்மைப் பொருந்தாதிங் கல்லல்தீப் புன்னெறியை
மாற்றும் உயரரு ளாளனும் மாதவன் மாண்புறுசீர்
ஆற்றல் அளித்தே அருள்வழிக் குய்த்தெமை ஆளுகின்ற
தோற்றத் துணைகண்டீர் வல்லி புரன்தாள் துதித்திடுமே. 4

துதித்திட வேண்டும் துணையாய நல்லருட் தொண்டினைநாம்
மதித்திட வேண்டும் மனம்போன வாறே மதிமயங்கி
உதித்திடும் தீமைக்கண் உற்றுழ லாவா றுயர்வுபெறப்
பதித்தெமை ஆளுவான் வல்லியப் போதார் பதமலரே. 5

பதம்தரு வான்வல்லி பண்பாய இன்பப் பரங்கருணை
இதம்தரும் வானெப்ப ஏதும் இதம்தரா வீதுணர்ந்தே
நிதம்தர வேண்டி நிலையாய இன்பம் நினைந்தடியார்
நிதம்நிதம் இங்கே நிலைத்திட்டார் வல்லியூர் வேண்டிநன்றே. 6

நன்றே நினைந்து நினைந்தன்பாய் நாளெலாம் நாயகன்தாள்
சென்றே தொழுதுநம் சிந்தையைச் சீர்பெறச் செய்துவினை
பொன்றிடச் செய்யவே புண்ணியா நீயருள் போற்றியுனக்
கென்றே புகன்றிட வேண்டுநாம் வல்லியை ஏத்திநன்றே. 7

ஏத்தித் துதித்திடு வோர்களுக் கின்பம் இனியநலம்
பூத்துப் பொலிந்திடும் பொற்பார் பதமல ராகியநன்
மாத்துணை யுள்ளத் தலத்தே மருவி மகிழ்வளிக்கும்
நாத்துணை யாகவோர் வல்லிசீர் செப்பவே நன்கினிதே. 8

இனிதாய நல்வாழ்வே யார்க்கும் இலட்சிய மாமதனுற்
புனிதப் பெருவாழ் வொளிநல மோங்கிடும் போற்றியன்பாய்
நனிதவம் மேற்கொண் டனுதினம் நாமும் நலம்தரும்சீர்
புனித னருள்நாடி வல்லியூர் சேர்வோம் பொருந்தநன்றே. 9

பொருந்தியே வல்லிதாள் போற்றிடும் அன்பர் பொருந்தவங்கே
இருந்துயர் நற்றவம் செய்வோர் நினைப்போர் இருவினைத்தீ
பொருந்தாத உள்ளப் புனித மகிமை பொலிவதனுல்
அருந்தவ வாணர் அகலா துறைவார் அடைந்தினிதே. 10

அடைந்துனை நானு மனுதினம் போற்றினேன் ஆயனேயிங்
குடைந்திட வேண்டுமென் ஊழ்வினை அன்றேல் உனதருட்தாள்
அடைந்திட லாமோ அரியவோர் வாழ்விங் கணைந்துமுன்தாள்
அடைந்திடாப் போதீ தவமேயாம் வல்லி அருந்திருவே. 11

திருவே இலங்கும் திருமார் பழகா சிறீதரச்சீர்
உருவே ஒளிரும் உவமிக்க ஒண்ணு துளம்வளர்சீர்க்
கருவாய மூலக் கருணைப் பெருக்கே கடந்தசோதி
அருவே அறிவுக் கறிவேநல் வல்லிநீ ஆண்டருளே. 12

ஆண்டருள் செய்யும் அரும்பணி யிங்குனக் காயகடன்
ஆண்டருள் என்பார் அவர்மனத் துற்ற அருள்உருநீ
ஈண்டருள் எம்பிரான் என்பார் இயக்கத் தியக்கமும்நீ
வேண்டுவ தென்னே விரைந்தருள் வல்லிநீ வேட்டினிதே. 13

வேட்டருள் செய்யென வேண்டிட ஆற்றல் விதித்தெனையும்
கேட்டருள் என்னுளக் கேடென நானிங்கு கேட்கவைத்தாய்
கேட்டனன் கேட்டவன் நீயே எனக்குள கேட்டினின்றும்
மீட்டிடல் உன்கடன் மீட்பாய்நல் வல்லிவாழ் கோமகனே. 14

கோமகன் ஆவாய் கொடுவினை தீர்ப்பாய்நற் கோபியர்க்கோர்
பூமகன் ஆகிப் பொலிந்தனை தேவகி போற்றுமன்பு
மாமக னேயன்னை மாண்பார் யசோதை மகிழ்ந்தினிதே
வாமக னேஎன்ன வந்திடு வோய்நீவந் தாண்டருளே. 15

அருளுரு வாயசீர் ஆயனே மாயனே ஆயவெம்பேர்
இருளுரு வாய இடர்மிகும் மும்மலத் தீர்ப்பறநற்
பொருளுரு வாகி பொருந்திவந் தாளும் புனிதநலத்
திருவுரு வேநற் திருமாலே போற்றி மகிழ்ந்தருளே. 16

மகிழ்ந்துநின் நல்லருண் மாண்பால் மனத்துற்ற மாசகற்றி
திகழ்ந்திடும் நின்சீர் திருத்தல மாகிய வல்லிபுரத்
திகழ்ந்திடும் தீவினை இன்னல் கெடுத்தே இருக்கவன்பு
திகழ்ந்திடச் செய்தாள்வாய் தேவா எனையும்நீ சீர்பெறவே. 17

சீர்பெற வேண்டும் திருத்தக்க தெய்வத் திருவருட்காம்
நேர்பெறு மன்பின் நிலைபெற வேண்டும் நினக்குநித்தம்
ஏர்பெறு தொண்டிங் கினிதே இயற்றி உனதருளிவ்
வூர்பெற வேண்டுநன் வல்லி உவந்துநா னுய்ந்திடவே. 18

இடவேண்டும் எம்பிரான் நின்னன்பர்க் கீந்தே இனிதுதவி
நடவேண்டும் அன்பினும் தூய அறப்பயிர் நன்றதனைற்
படவேண்டும் நின்னருட் பண்புறற் காய பரிவுநிலை
தொடவேண்டும் அத்தினால் தூயநின் தாளாம் துணைமலரே. 19

துணைநீயே கானல்போற் தோற்றமே யன்றியிச் சீருலகம்
துணையாகா தாயினும் தூயநின் பாதம் தொழுவதற்காம்
புணையாகி வந்து பொருந்துமிவ் வாழ்வையும் போற்றியுந்தன்
இணைமலர்ப் பாதமு மேத்துகின் றேன்மற்றிங் கார்துணையே. 20

ஆர்துணை யேனுமிங் கல்லல் அகலா தனுதினமும்
ஏர்துணை யாக இனிதுசெந் நெல்விதைத் திவ்வுலகிற்(கு)
ஓர்துணை யாகிய வுத்தமர் வாழுயர் வல்லிபுரம்
சேர்துணை யாயினை தேவே எனையாள் திருத்தகவே. 21

தகவிங் குடையவர் தாளிணை சேர்ந்தார் தகுதிபெற்றார்
மிகவிங் கருட்பணி மேவாதா ரிச்சீர் மிகுநெறிக்கண்
புகவிங் கறியார் புனிதனே நின்பதம் போற்றுதற்காம்
தகவிங் கெனக்குநீ தந்தாள வேண்டும் தயாநிதியே. 22

தந்தாள வேண்டும் தயாநிதி யேயுந்தன் தாளிணைநீ
வந்தாள வேண்டும் வருத்திடு கின்றவென் வல்வினைக்கே
நொந்தாளா காவாறென் நோவினை மாற்றி நினதுநற்றாள்
தந்தாள வேண்டும்நன் வல்லித் தலம்சேர் தயாபரனே. 23

பரனே நினதருட் பாத மலர்க்கன்பாய்ப் பாவியேனென்
சிரனேர் படவைத் தனுதினம் போற்றித் திருவருட்காம்
உரனேர் படவேண்டி வந்துற் றனன்என் உளத்தகுதி
தரனேர் படவுற் றதுவேற்தந் தாளாம் தன்மைகண்டே. 24

கண்டுநின் தாளிணை போற்றிக் கருத்தொடென் காலமெலாம்
தொண்டுனக் காற்றித் தொழுதிட வேண்டும் தொழுதருட்சீர்
கொண்டுநான் உய்ந்திக் குவலய வாழ்வின் கொடுமைவிடுத்
தண்டிடச் செய்தே அடியிணை வல்லிநீ ஆண்டருளே. 25

வல்லி இலவல்லி வல்வினை நீக்கி வரமருளி
நல்லியல் வாழ்வால் நலம்பெறச் செய்தசீர் நாயகனே
சொல்லிநான் எந்தன் துயரினைப் போற்றித் துதித்தனன்நன்
வல்லி புரம்வளர் தேவே எனையுமாள் வந்தினிதே. 26

வந்துயர் மீளுகி வள்ளத்தின் மோதி வலையறுத்துப்
பந்தமிங் குற்ற பரதவர் உள்ளம் பரிதவிக்க
சிந்தையிற் சேரும் திருவடி போற்றித் திகழ்ந்தவள்பால்
விந்தையின் மேவிய விட்டுணு வேவல்லி வேட்டருளே. 27

வேட்டுளம் கொண்டுன்னை விண்ணுட் டரசே விரும்பிநின்சீர்ப்
பாட்டுள வாயின பாடிப் பணிபவர் பக்தியொடும்
கேட்டுளம் கொள்பவர் கேடிலா துன்சீர்க் கிரியைசெய்யும்
நாட்டுள நல்லோர் நயப்போய் எனையுமாள் நாயகனே. 28

நாயக ராகியிந் நானிலம் காத்து நலமளித்த
தூயநற் சிங்கைத் துணைப்பே ரரசர் தினமுமிக்க
நேயமோ டுன்தாள் நினைத்தே கருமம் நிகழ்த்திடுவார்
சேயரிங் காளு ரவரெலா மாண்டாய் சிறீதரனே. 29

சிறீதர னேநற் திருமாலே வல்லி புரத்தொடும்சேர்
எறிதரங் கப்பே ரெழிலிடை வங்கத் தெழுந்துநாமிங்
கறிதர வந்த அருளுரு வேநின் அடியிணைசேர்
நெறிதர வேண்டும்தந் தாளவேண் டும்நீ நினைந்தெமையே. 30

எமையாண் டுந்தன் இணையடிக் காளாம் இயல்பருளிச்
சுமையாகி வந்தே தொடர்கின்ற வல்வினைத் தீச்சுடவிங்
கமையாப் பெருந்துயர்க் காளாம் அவல மகற்றியினி(து)
இமையாப் பெருங்கண் எழிலேஆண் டாண்டருள் ஈகுதியே. 31

ஈகுதி எம்பெரு மானே அருளெனக் கேட்டடிமை
ஆகுவ தொன்றே அவனியில் ஆம்பேர் அரும்பணியாய்
ஏகுதல் மீளுதல் இன்றிநின் வல்லி இணைந்தவன்பர்
வேகுவ துண்டோ வினையினுற் தீமை விலகுமன்றே. 32

விலகிநின் தாளிணை வேண்டித் தொழும்நெறி விட்டகலின்
உலகியல் வாழ்வி லொருபயன் தானு முறுவதில்லை
பலகலை யோதிப் பயின்றவ ரேனுநற் பக்தியின்றி
அலகிலா வாழ்விங் கடையா ருறுவா ரவலமன்றே. 33

அவலமிங் கெய்தா தனுதின முந்தன் அடிதொழுதெம்
கவலையை மாற்றிக் கருவிபோற் றும்பேர் கருத்தொடுசீர்
நவலய மெய்தி நலமுற வேண்டுமெம் நாயகனே
குவலயத் தன்பர் குறைதீர்ப்போய் ஆள்நீ குறைவிலாதே. 34

குறைவிலா தன்பர் குலமுழு தாளும் குறைவிலின்ப
நிறைவே நினையாது நின்சீர் உலகே நினைப்பவர்க்காம்
மறைவாய சோதி மணிவிளக் கேவல்லி மாதவாநம்
இறையே எழிலே எமையாண் டருள்நின் இணையடிக்கே. 35

அடிக்கன்பு செய்ய அறியாதே அந்தோ அவலமுற்றுத்
துடிக்கின்ற பாவத் தொடர்பிடைப் பட்டேன் துயரிதுநான்
முடிக்கின்ற வாறும் முறைமைமற் றின்றுமேல் மூள்பிறவி
அடிக்கன்றே ஆளாவேன் வல்லி தடுத்துநீ ஆண்டருளே. 36

தடுத்தாண்ட சுந்தரன் தாங்கொளு வாறே தனித்துயர்த்தீப்
படுத்தாண்ட வப்பர் பரமார் அருண்ஞானப் பால்பருகக்
கொடுத்தாண்ட காழிக் குருபரன் ஆழ்வார் குலமுமுய்ய
எடுத்தாண்ட பாதம் எமக்குமே சொந்தம்நாம் ஏத்துதுமே. 37

ஏத்துவார் யாரோ எவரோ அவரெலா மெம்பெருமான்
பூத்துணை யாகிய பொற்பதத் தன்பர் புகலுடைச்சீர்
மாத்துணை யாமம் மலர்ப்பதம் நாடாத மாண்பினர்க்கு
காத்துணை யாவான்காண் நாம்தொழும் வல்லியூர்க் கண்ணனன்றே. 38

கண்ணன் உலகினைக் காப்பதற் குற்றவன் கண்ணனைநாம்
நண்ணினுே மாயின் நலம்பெறு வோமன்றேல் நம்மைநாடி
கண்ணனே வந்து கவலைக ளோட்டிக் களிப்பளிப்பான்
எண்ணமிங் கெம்பெரு மாற்கெமைத் தாளுண் டருளுவதே. 39

அருளிடை மூழ்கி அகமகிழ் வெய்தா தறிவழிந்திங்
கிருளிடை மூழ்கி இளைத்தனன் எம்பெரு மானெனக்காம்
மருளினை மாற்றி மருவுநின் தூய மலர்ப்பதம்தந்து
அருளுதி வல்லி புரமாய நற்றலத் தாரமுதே. 40

ஆரமு தேதூய அன்பால் அடியவர் உண்டிடும்நற்
பேரமு தேயோர் பிரிவிலா ஞானப் பெருநிதியாம்
சீரமு தேயருட் செல்வமே இன்பச் சிறீதரனே
ஏரமு தேநல் எழிலே எனையுமிங் காண்டருளே. 41

எனையுமிங் காள்என ஏனோதான் நானிங் கியம்பவேண்டும்
நினையலா தோர்முதல் நீணிலத் தில்லை நினதருளே
எனையு மியக்கும் இதனால் அடிமைநான் ஆயினேன்
அனையவோர் தன்மையின் ஆளெனக் கேட்ப தழகிதாமே. 42

அழகோ டழகிலா தன்மையிங் காம்பேர் அவலநீத்துப்
பழகுவோர் உள்ளப் பரப்பிடை வாழும் பரம்பொருளே
இளகுசீ ருள்ளத் துறைகின்ற நாய எழிலுருவே
அழகுயர் வல்லி புரத்தர சேஎன்னை ஆண்டருளே. 43

என்னைநான் நின்னோ டிணைபிரி யாத இயல்பிலன்பாய்
என்னையும் நின்னையும் இன்புறு ஞானமா யுற்றவருள்
தன்னையும் வேறறக் காணும் தகுதிதந் தந்நிலைக்கண்
என்னையும் ஆளுவ தென்றோதான் வல்லியூ ரெம்பிரானே. 44

எம்பிரான் ஆள்வான் இடர்அணு காதென்றே எண்ணிநானும்
நம்பிவந் துற்றேன் நலமிலா ஊழ்வினை தாக்கவின்னும்
வெம்பிநின் றேங்கி விதிர்விதிர் கின்றேன் வினைசமன்செய்
துன்பதம் தந்தே உறுதிசெய் வல்லியூர் உத்தமனே. 45

உத்தம னென்றே உலகெலாம் போற்றும் உறுதிநான்கண்
டத்தனே அன்பர்க் கமுதாய அண்ணலே ஆவினம்காத்
தித்தலத் தன்னம் அமுதெலா மீந்துநன் காதரிக்கும்
வித்தகா வல்லியூர் விட்டுணு வேதீர் வினைச்சுமையே. 46

வினைச்சுமை மாறின் விளங்குமுன் பேரருள் விட்டுணுவே
நினைச்சுமந் தன்பாய் நினைந்து நினைந்துன் நினைவினாலே
எனைச்சமன் செய்தின்ப துன்பத் திடையே இலங்குசாந்தம்
தனைச்சேர்ந் தணுகலாம் தாராய்நீ வல்லிமற் றத்தகவே, 47

தகவேது மின்றித் தழுவிய ஆணவத் தீயநெறி
புகவே விதித்தாய் பொழுதெலாம் நின்தாள் புகழ்ந்துபாடி
மிகவே தொழுதுபேர் அன்புசெய் வார்வினை மீட்டருள்செய்
தகவே உடையாய் தயைபுரிந் தாள்நீயே தஞ்சமன்றே. 48

தஞ்சமிங் காய தயவுடை வல்லியின் தாளிணைக்கே
விஞ்சுபே ரன்புடை யார்வேண் டுவனதாம் வேண்டவேண்ட
எஞ்சா தருளுவாய் எம்பெரு மானேயிவ் வேழையைநீ
அஞ்சாயென் றோர்வார்த்தை ஆயினும் கூறாய் அமைவுறவே. 49

அமைவுடைத் தாவது சாந்த மதுவன்றி யாகுமின்பம்
அமைவுடைத் தல்லவோர் அல்லற் கறிகுறி ஆகிவரும்
அமைவேயவ் வின்பம் அதுவேபே ரல்லலிங் காகிவிடும்
அமைவாயவ் யோக நெறிதாராய் வல்லியூ ராதவனே. 50

ஆதவன் இன்றேல் அகிலமென் செய்யும் அருட்பணிகொள்
மாதவன் நீயின்றேல் மாண்புறு மான்ம மகிமையென்னும்
ஆதவ னைப்பாய் அருண்மழை ஈவாய் அரும்புபூகாய்
பூதவப் பேறிவை ஆவதும் வல்லிநின் பொற்பருளே. 51

பொற்பார் அருளுடைப் புண்ணியா வுந்தன் புகழ்நலனே
கற்பார் அதுவன்றிக் காணு ரெதுவும் கருணைவழி
நிற்பார் நினையே நினைப்பார் அவர்வழி நின்றுநானும்
நற்பார் உலகில் நலம்பெற வல்லிநான் நாடினனே. 52

நாடிவந் துன்தாள் நயந்தேவாழ் நாளெலாம் நல்லடியார்
பாடிவந் தித்தன் புடனேதாம் போற்றிப் பணியநானும்
ஓடிவந் துற்றேன் உறுதுயர்க் கஞ்சியோர் வல்லிபுரம்
நாடிவந் துற்றநம் தேவே நலிவிலா தாண்டருளே. 53

ஆண்டருள் என்பாரிங் காரோ அவரைமற் றுதரித்தே
ஈண்டருள் செய்வார் எவரோ எதன்பால் இவரைவிடுத்
தீண்டருள் செய்தற் கியைபாம் விசிட்டாநல் அத்துவிதம்
பூண்டருள் உற்றவெம் பூரணு வல்லி புரிந்திலதே. 54

புரிந்தில தந்தோ புறம்போகா(து) ஆகப் புலத்துறவு
தரித்திங் கிருக்கின்ற தத்துவா தீத தயாபரனே
உரித்திங் குடையோ முனதுடல் போல உலவுகின்றோம்
முரித்தவ் வினையைநீ காத்தருள் வல்லியூர் மாமுதலே. 55

மாமுத லாகிய சோதி மணிவிளக் கேயடியார்
நாமுத லாகிய நாதனே நன்கடி யார்நயக்கும்
பூமுதல் நாயகி போற்றித் துதிக்கின்ற புண்ணியனே
வாமுதல் வந்தென் வருத்தம் தவிர்வல்லி யூர்முதலே. 56

ஊர்முத லாகிய உத்தம தேவே உவந்தினிதிப்
பார்முத லாகிப் பரிவொடும் பேணும் பரங்கருணைச்
சீர்முத லேநற் சிறீதர னேசிங்கை ஆரியர்க்காம்
பேர்முத லேபெரு மானே எனையும்நீ பேணுதியே. 57

பேணிப் பெரிதுவந் தன்பர்வாழ் நாளெலாம் போற்றுமருள்
ஆணிப் புதுப்பொன் அதுவே இணையா மருந்தகையே
வேணிப் பிரான்தன் னோ டொப்ப நிறைந்தெம் வினைகெடுக்கும்
வாணிப் பிரான்தந்தை வல்லிநின் பாதம் வணங்குதுமே. 58

வணங்கும்நல் வல்லி புரக்குறிச் சிப்பதி வாழ்வுகொண்டோ
ரிணங்கிநின் பூசை எழிற்பணி மேவ இனியநற்பூ
மணங்கிளர் தன்மையின் மற்றவ ருள்ளம் மருவிவளர்
குணங்கடந் துற்றநற் கோவே எனையுமாட் கொண்டருளே. 59

அருண்மா மணியே அறிவுக் கறிவாம் அருந்தகையே
இருண்மா மலப்பேர் இருள்கெடுத் தாளும் எழின்மிகுசீர்ப்
பொருண்மா முதலே புகலாய வெம்தேவே புன்மைமிகு
மருண்மா மயக்கினைப் போக்கியாள் வல்லி புரத்தரசே. 60

அரசே அவனிகாத் தாண்டருள் கின்றபே ராரமுதே
சிரசே அனையவெம் தேவே திருவுடைச் செல்வராம்பேர்
முரசே கொடியாய் முழங்கிய கௌரவர் மொய்வலிசேர்
அரசே அழித்தரு ளீந்தவெம் அண்ணலே வாழ்கநீயே. 61

நீயே முதலன்றி நீங்கிய வாழ்வின் நிகழ்வினுக்கும்
ஆயே இனிவரற் காம்பேர் அருவினை அல்லலுக்கும்
தாயே அனைய தயாபர னேவல்லி யூர்த்திருவே
சேயே னெதுவு மறியேன் திருத்தியாள் சேவடிக்கே. 62

சேவடி அன்றித் திருமுகம் காணேன் திருமுடிச்சீர்
நாவடிப் பாவான் நயப்பதல் லாதோர் நலமறியேன்
மூவடி கொண்டே முழுதுல கிட்டருள் மற்றடியால்
தேவடி வீந்தனை மாவலிக் கெம்வல்லி செய்வதென்னே. 63

செய்வதிங் கென்னே திருவருண் நோக்காற் திருத்தியுந்தன்
மொய்வலி மாண்புடை மூதறி வாகிய ஞானமளித்
துய்வதற் காய உபாய முணர்த்தி உறுதிசெய்தே
மெய்வழிக் குய்ப்பாய் மிகவேநீ வல்லியூர் மேதகவே. 64

தகவளித் தன்பே தழுவித் தரணியை நோக்கிடாதென்
அகவழி யாக அறிவினை மீட்டுன் அடியிணைக்கே
புகவழி செய்வாய் புலன்வழி மார்க்கம் புனிதநின் தாட்
பகைவழி ஆமென் றறிவித்த பண்புளாய் ஆண்டருளே. 65

பண்பேது மின்றியிங் கென்னை மயக்கிப் பரந்திருந்தும்
கண்பார்த் தறியொணுக் காரிரு ளாகிய ஆணவத்தின்
திண்பா ருடைநிலை தன்மையை மாய்த்துத் திருவடிசேர்
விண்பார் வியன்நலம் வேண்டுநல் வல்லியூர் வித்தகனே. 66

வித்தகம் பேசுதல் விட்டுநின் தாளிணை வேண்டுமன்பார்
உத்தம பக்தி யுறவேண்டும் தூய தியாகவுணர்
அத்தினல் நானு மணுகிட வேண்டுநல் வல்லிபுரத்
துத்தம னேயன்றி மற்றோர் உயர்வுண்டோ தாவெனக்கே. 67

எனக்கெம் பெருமானே இன்பம் சிறப்பல்ல என்றுமன்பாய்
நினக்காய தொண்டு நிகழ்த்தும் நிலையே நிறைவுடைத்தாய்
மனக்குறை நீக்கியென் மாசெலாம் போக்கிநன் மாண்பளிக்கும்
எனக்கந் நிலைதந் தெனையாளாய் வல்லியூர் எம்பிரானே. 68

எம்பிரா னேநின் எழிலார் கருணை இயல்பினுலோர்
பம்பரம் போலவிப் பாரெலாம் சுற்றிப் பரந்தியங்கும்
நம்பர மேதுமிந் நானிலத் தில்லைவாழ் நாளெலாம்நாம்
நம்புவோம் நின்தாள் நலமருள் வல்லியூர் நாயகனே. 69

நாயகன் நின்னடி நாடிநல் அன்போடு நற்பணிக
ளாயின செய்தல் அடியேன் எனக்கிங்கே ஆயபணி
நேயனிங் குற்ற நிலைநலன் நோக்கி நிறையருள்செய்
தாயவா ருளல் அதுவுன் கடன்வல்லி ஆண்டருளே. 70

அருண்மிகு மாமணி யேதூய அண்ணலே ஆமிடர்சேர்
இருண்மிகு மாமல மென்னை வருத்தா இயல்பினில்நின்
மருண்மிகு மாயா மகிமையா லுய்ந்துன் மலரடிசேர்
பொருண்மிகு வாழ்வருள் வாய்வல் லிபுரம்வாழ் புண்ணியனே. 71

புண்ணிய பாவப் பொருட்டாய இன்பநற் துன்பமென்னை
நண்ணிடும் போது நலிவும் களிப்பும்நான் எய்திடாதுன்
னுண்ணிலாக் காட்சி நலத்திலே டொன்றிநின் உய்திபெற
அண்ணலே வல்லி புரம்வாழ் அரசே அணைத்தருளே. 72

அணைத்தருள் செய்யா தடியனேன் தன்னை அருந்துயரோ
டிணைத்திடர் தந்திட லேலே நினதருட் தொண்டரொடு
மிணைத்தென்னை நின்பணி ஏற்றிருந் துய்ய இனிதருள்வாய்
துணைத்திரு நின்தாள் துணையலால் வேறோர் துணையிலனே. 73

இலனோர் துணையெது தானுநா னிவ்வுல கில்மருவும்
புலனோர்ஐந் தாலிங் கலைக்கப் படுகின்றேன் புண்ணியநின்
தலநேர் படவந் துற்றனன் நீயேதான் தஞ்சமென
நிலநேர் படுவாழ் வறவல்லி ஆண்டருள் நின்னடிக்கே. 74

நின்னடித் தொண்டே நிலைத்தபே ரின்பம் நிகழ்த்திடுமென்
றுன்னடித் தொண்டரோ டுன்னிநான் மற்றிங்கே யுற்றனனென்
துன்னுபேர் அல்லற் தொடர்பினை நீக்கிநின் தொண்டனுக்கி
உன்னடிப் பாங்கெனக் கீயாய் உயர்வல்லி உத்தமனே. 75

உத்தமன் நீயே உலகெலாம் நீயே உயர்கருணைப்
புத்தமு தாய பொருளின் பொலிவே புனிதனேநன்
வித்தக மாமணி யாகிய விட்டுணு வேளையாள்
அத்தனே வல்லியூர் வாழ்வே அறியேன்வே றுதரமே. 76

ஆதர வில்லா அனுதைகட் காதர மாகியநின்
ஆதர மின்றி அகிலத் தெவரே தியற்றவல்லார்
நீதர வுண்டிந் நிலமிசை வாழ்வோம் நினையலாதோர்
ஆதர மற்றோம் அணைத்தெமை யாள்வல்லி யூரரசே. 77

வல்லியூர் வாழருள் வள்ளலே வந்தடி வாழ்த்துவோர்க்கோர்
நெல்லிநற் தீங்கனி நீங்காப் புளிப்பையே முன்னருத்தி
நல்லவோர் இன்சுவை நற்பத மீந்துபின் நாநயக்கப்
புல்லுமோர் தன்மைகொள் பொற்பார் புராவருள் பூத்தருளே. 78

பூத்தருள் இன்பமும் துன்பமும் இல்லாப் பொதுநிலைநின்
ஞத்தமோ டன்னிய மாகிய பேதமும் அற்றுயோக
பாத்திர மாகிப் பதமலர்க் காளாம்நற் பண்புநல்கிக்
காத்தருள் வல்லி புரம்வாழ் கருணைக் கடலமுதே. 79

கடலமு தேநற் கருணைத் திருவே கருதுமன்பர்க்
கடலமு தேயாரா இன்ப மளிக்கு மருநெறிக்கட்
படலது வேயென்றும் பண்பாய நற்றுணை பாருயிர்சீர்
உடலது வாகவுள் ளூற்றியக் கும்வல்லி ஆண்டருளே. 80

இயக்கிடும் வல்லியூ ரெம்பெரு மானே இனிதெமைநீ
இயக்கிடும் பான்மை இயல்பின் திறனென் இதைநினைந்தே
நயக்கின்றோம் நாமந் நயப்பே நினைநிதம் நாம்தொழும்சீர்
இயக்கமு மாக இயக்குகின் றாய்என்னே நின்னருளே. 81

நின்னருட் சீரினை நித்தம் எமக்கு நினைவுறுத்தும்
நின்னருட் தோற்ற நிறைவே உலகின் நிகழ்ச்சியெலாம்
பொன்னருட் தேவியைப் போற்றிடு வோரும் புறம்பலர்மற்
றுன்னருள் வேண்டிடு வோரேகாண் வல்லியூர் உத்தமனே. 82

உத்தம மாமோர் முறையிலே உற்றுழன் றிங்குழைத்துத்
தத்தமக் காய தகுந்தேவைக் குற்றெழிந் துற்றவெல்லாம்
அத்தன் அடியார் அவரடித் தொண்டினுக் காக்கவல்ல
சித்தமே வேண்டும் சிறீதர னேவல்லி சீர்பெறவே. 83

சீர்பெற வேண்டுமோர் சித்தமிங் குண்டேற் சிறீதரநின்
ஏர்பெறும் தூய இணையடிக் கன்புசெய் திங்கியங்கும்
பேர்பெறு தொண்டர் பிணிபசி நீக்கி பெரிதுவக்கும்
சீர்பெற வேண்டுமிச் சீரியும் வல்லிநின் சீரருளே. 84

சீரருள் எய்தலாம் சிவநற் கோடி செகமனைத்தும்
பேரருட் பேறுற் றுவந்துய்ய நித்தம் பெரும்பணிகள்
ஏரருட் தொண்டாக இங்கேநாம் நித்தம் இயற்றிடினே
நேரருள் மார்க்க நிலையீ தருள்வல்லி யூர்த்திருவே. 85

திருவாகி வல்லியூர் செய்த தவப்பயன் சீர்பெறவோர்
உருவாகி எங்கட் குறுதுயர் நீக்கி உதவியுள்ளக்
கருவாகித் தூய கருணை நலமீந்து காத்திடும்சீர்ப்
பெருவாழ்வே வல்லிநாம் போற்றுதும் நின்தாள் பெரிதுவந்தே. 86

உவந்துன் அடியிணை போற்றுதும் வாழ்விற் குறுதுணையாம்
தவந்தரும் பேறே தனிமுத லேநற் தயாபரனே
பவந்தரும் வாழ்விற் பயமெலாம் போக்கி பதமலர்சேர்
இதந்தரும் தேவே எமையாண் டருள்வல்லி ஏத்துதுமே. 87

ஏத்துதும் வல்லி இருவினை சேர்வாழ் விடரகலப்
பூத்துணை யாகநின் பொன்னடி போற்றிப் புனைந்துநித்தம்
மாத்துணை ஆகிய மாமுத லேபோற் றுதுமெமைநீ
காத்தருள் கண்ணுநன் வல்லியூர் வாழ்கரு ணைநிதியே. 88

கருணை நிதிநின் கழலிணை யல்லாற் கதியெனவோர்
பொருளுனன் கருதேன் புனிதனே மாயைப் பொருள்தரும்பேர்
இருளுன் இடர்ப்படற் கேதுவாய் என்று மெனையலைக்கும்
அருணனிங் கொப்பாய வண்ணலே வல்லி அருளுதியே. 89

அருளுதி நின்சீர் அடியிணைக் காட்படச் செய்தெனக்காம்
மருளினைப் போக்குதி மாயனே வல்லி புரம்வளர்சீர்
பொருளெமக் காகிய புண்ணிய மூர்த்தி பொருந்துவோர்தம்
இருளினைப் போக்கிடும் ஏந்தலே ஆள்நீ எனையுமன்றே. 90

அன்றுநா னேதுமறி யாதே யாணவ ஆரிருட்பட்
டொன்றிய நாட்தொட் டுயிர்க்குயி ராய்நின் றுதவிய நின்
நன்றியோர் அற்பமும் நாடி அறியா நலிவுமாற்றி
என்றனை யாண்டாய்என் னேவல்லி நின்சீ ரிருந்தவாறே. 91

இருந்தவம் செய்யேன்நா னென்றுமே யுந்தன் இணைமலர்த்தாள்
பொருந்திடு மார்க்கமே தான்நற் புகலென ஏதுமுன்ன
திருந்தனன் எம்பெரு மானேயிவ் ஏழையேன் உய்யவேண்டி
மருந்தனை யாய்வல்லி நீசெய்த மாண்போ மதிப்பரிதே. 92

மதிப்பரி தாகிய மார்க்கமிங் கீதென மாண்புமிக்க
விதிப்படி தூய்மை விளைவுசேர்க் காலம் விரைந்துவந்தே
உதிப்பநீ நற்குரு வாகி உணர்த்தியென் னுள்ளுளுன்னை
துதிப்பதற் காயநற் தோற்றமும் காட்டினை வல்லிநீயே. 93

நீயெனக் கீந்த நிகரிலா விச்சீர் நிலைமைதன்னை
ஆயவா றுன்ன அகமெலாம் இன்ப வமுதமூறி
நேயமாய் நின்றேஇந் நீசனே னென்னை நெறிப்படுத்தும்
தாயெனக் காகிய தந்தையே வல்லி சரணமன்றே. 94

சரணமுன் தாளே தயாபர னேவல்லி சாருதிங்கே
மரணமந் தோநான்மாட் டேனிதை யேதும் சகிக்கவந்தோ
அரணமா முன்சீர் அருட்பெரும் பாதைக் கெனையிழுத்தென்
மரணப் பயத்தினை மாற்றுதி வல்லியூர் மாதவனே. 95

மாதவா வுற்ற மரணமா மித்துயர் மார்க்கமாற்றி
போதமார் ஞானப் புலன்பொறி ஏதும் பொருந்திடாதுள்
ளேதமற் றுற்றெனை ஊக்கிடும் இன்ப உணர்வுனைநான்
ஆதர மாகவந் தண்மவோர் மார்க்கம் அருளுதியே. 96

மார்க்கம் எமக்கு மரணமன் றுன்தாள் மருவுதற்காம்
மார்க்கமே மார்க்கமாம் ஆயினு மிந்த மரணமென்னை
ஈர்க்கவே நானுந்தான் ஈர்க்கப்பட் டல்லல் உழன்றனனிம்
மார்க்கத்தை மாற்றி மலியருள் ஈவல்லி மாதவனே. 97

மாதவ னேதூய மாநிதி யேஞான மாண்புயர்சீர்
ஆதவ னேயரு ளாரமு தேஎனை யாண்டருளாய்
போதர வாற்றேன் பொருந்தும் பெருந்தீ மரணமார்க்கம்
ஆதர வாயோய்நீ ஆண்டருள் வல்லிநீ ஆண்டருளே. 98

ஆண்டருள் எம்பெரு மானே அருண்மா நிதியெனக்கீந்
தாண்டருள் அந்தோ அவமீ தேதும் சகிக்கவாற்றேன்
பூண்டனன் நின்தாட் கடிமை புனிதனே போற்றிபோற்றி
ஆண்டருள் ஆண்டருள் வல்லி சகியேன்நான் ஆண்டருளே. 99

நாரா யணம்வாழ்க நம்பெரு மான்தன் நலம்துலங்கும்
பாரா யணம்வாழ்க பண்பார் அடியார் பரவுமருட்
பேரா யிரம்வாழ்க பேணிப் பணிவார் பெறற்குரித்தாம்
சீரா யிரம்வாழ்க வல்லிதன் சீரருள் வாழ்கநன்றே. 100

— சிவஞானம்

சுபம் !

அந்தாதி முற்றிற்று.

ஓம்

# குருக்கட்டுப் பிள்ளையே

இராகம் - கல்யாணி                    தாளம் - ஆதி | 0 0
4 2 2

ஆ - ச ரி க ம ப த நி ச
2 2 2 2 2

அ - ச நி த ப ம க ரி ச
2 2 2 2 2

பல்லவி

கணபதியே எம்மைக் காத்தருளே
கருணை நிதியே குருக்கட்டுப் பிள்ளையே

அநுபல்லவி

பணபண மணியும் பரமனுர் மகிழும்
பார்வதி பாலனே பக்தர்கள் புகழும் (கண)

சரணங்கள்

வல்லிபுர வயல் வெளியில் உறையுமுன்னே
தொழுதிடு மடியவர் துயர்களை வோனே
நல்லிசை யுடனே நடனஞ்செய் வோனே
நாரணன் மருகனே ஞான மூர்த்தியே (கண)

செல்வர் வறியோர் தேடுமுன் வாசல்
தீராப் பிணியுளோர் நாடுமுன் வாசல்
எல்லோரும் நிறைவோடு நிற்குமுன் வாசல்
அடியேனும் அன்போடு நிற்குமுன் வாசல் (கண)

''பிரசாதம்''
21 - 06 - 83

ஓம்

இராகம் - கல்யாணி

தாளம் - ஆதி

ஆ - ச ரி க ம ப த நி ச்
2 2 2   2 2

அ - ச் நி த ப ம க ரி ச
2 2   2 2 2

பல்லவி

; நி தா ப தா நீ ; தா பா | ; ம பா க மா | பா ; ; ; ||
க ண ப தி யே எம் மைக் காத் த ரு ளே · · ·

; க மா ப மா க ரி க ரி சா ; | ; க மா ப தா | ரி ச நி த நிதபம ||
க ரு ணா · நி · தி · யே குருக் கட்டுப் பிள் ளை . யே. . .

ப த நி சா நி தா ரீ க் ரி சா நீ த ப ம ப | ; க மா நி தா | பா ; நிதபம ||
· · க ண ப தி யே . . . எம் மைக் கா த் த ரு ளே . . . .

ப த க நி தா : நி த ப ம க ரி சா | ; க மா த நீ | ரி ச் நி த நிதபம ||
. . க ரு ணா நி . தி . யே . . குருக் கட்டுப் | பிள் ளை . யே . . .

ப த நி சா ரி சா நீ ; ரீ சா | ; ; ; ; | ; ; ; ; ||
. . க ண ப தி யே. . . · · · · · · · ·

அநுபல்லவி

; ச சா ரி சா ரீ ரீ ரீ ; | ; ச ரீ க ரீ | க ம ப ம க ரி ச ரி ||
ப ண ப ண ம ணி யும் ப ர ம ஞர் ம . கி . ழும் . .

; சா ரி சா ச நி த ப த நி சா | ; சா ; ச சா | ரி ச நி த நி த ப ம ||
பார் வ தி பா . . . ல . னே பக் தர்கள் பு . க . ழும் . .

ப த நி சா ரி சா நீ ; ரீ சா | ; ; ; ; | ; ; ; ; ||
. . க ண ப தி யே . . · · · · · · · ·

சரணம் 1

; கா , க கா க ம ப ம க ம ரீ | ; ப மா த பா | ப ம க ரி க ம பா ||
வல் லிபு ர · · · வ · யல் வெளி யி லு றை. யு. மு ன் னைத்

; ம பா த தா ப த நி ச நி த பா | ; பமா கமா | பா ; பா ; ||
தொழு திடு ம . டி . ய . வர் துயர் களை வோ னே

+ நல்லிசை யுடனே நடனஞ் செய் வோனே
நாரணன் மருகனே ஞான மூர்த்தியே (கண)

சரணம் 2

* செல்வர் வறியோர் தேடுமுன் வாசல்
தீராப் பிணியுளோர் நாடுமுன் வாசல்
எல்லோரும் நிறைவோடு நிற்குமுன் வாசல்
அடியேனும் அன்போடு நிற்குமுன் வாசல் (கண).

["பிரசாதம்"]

---

2 பெரிய சுரங்களைக் குறிக்கும்

+ அனுபல்லவியின் இசையமைப்பில் இசைக்கவும்

* முதல் சரணம்போல் இசைக்கவும்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—5872/6-83